




"கடலோரம் கட்டிய மண் வீட்டிற்கு நிகழ்ந்த கதிபோல சந்திரிகாவின் போர்த்திட்டத்தை விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் அடித்துச் சென்றுள்ளது. இச்சமரில் நாம் ஈட்டிய மாபெரும் வெற்றியின் விளைவாக இராணுவ சமபலம் எமக்கு சார்பாகத் திரும்பியிருக்கிறது"


# விடுதலைப்புலிகள்

குரல் 92 ஐப்பசி – கார்த்திகை 1993 அன்பளிப்பு 5 =



## ஓயாத அலைகள் - 3





## Unceasing waves - 3






தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு



www.eelamview.com

இந்த இதழிலுள்ள 12ம், 13ம் பக்கங்கள் தவிர்க்கமுடியாத காரணத்தால் இடம்பெறவில்லை. எனினும் கட்டுரைகளின் முழுமையை, அது குழப்பவில்லை.

- ஆ-ர் -

# உலகை ஈர்த்துள்ள தலைவரின் அரசியல் உரை

புதுயுகம் ஒன்றின் நுழைவாயிலில் நின்றபடி- தமிழர்சேனையின் பலவளர்ச்சி நிரூபிக்கப்பட்ட புதிய சூழலில் தலைவர் பிரபாகரன் ஆற்றிய மாவீரர்நாள் (1999) உரை உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது.

ஓயாத அலைகள் -3 இராணுவ நடவடிக்கையின் மகத்தான வெற்றியையும் - அந்த வரலாற்று வெற்றி தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் ஏற்படுத்தியுள்ள இராணுவ அரசியல் பரிமாணங்களையும் தலைவர் எடுத்து விளக்கியுள்ளார்.

இதில் மணலாற்றின் ஒருபகுதிநிலம் மீட்கப்பட்ட சரித்திர நிகழ்ச்சிக்கு தலைவர் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

தமிழர்தாயகமான தீவின் வடக்கு-கிழக்கு பகுதிகளை அபகரித்து சிங்களமயமாக்குவது பேரினவாதத்தின் நீண்டகாலத்திட்டம். இந்த நாசகாரத்திட்டத்தை நிறைவேற்ற தமிழர் நிலத்தில் சிங்களக்குடியேற்றங்களை தீவிரமாக நடாத்திவருகின்றது சிங்கள அரசு. இத்தகைய குடியேற்றங்களில் சில, தமிழர்தாயகத்தின் நிலத்தொடர்ச்சியைச் சிதைக்கும் சூழ்ச்சிகர நோக்கத்தைக் கொண்டவை. வெலிஓயா என சிங்களப் பெயர் சூட்டப்பட்ட மணலாற்று அபகரிப்பு இந்தவகைக் குடியேற்றங்களில் முக்கியமானது. தமிழர்தாயகத்தை வடக்கென்றும் கிழக்கென்றும் பிரித்துச்சிதைக்கும் நோக்கத்தை அது கொண்டுள்ளது.

ஓயாத அலைகள் -3 மூலம் மணலாற்றுப் பகுதி மண் மீட்கப்பட்டது பேரினவாதத்தின் உயிர்நிலையை உலுக்கிவிட்ட அதேவேளை தமிழரின் விடுதலைப்போருக்கு பலமும்- தம்பிக்கையும் சேர்த்துள்ளது.

சிங்கள இராணுவ இயந்திரத்தின் முக்கிய கவனிப்பிற்குள் வைக்கப்பட்டிருந்த மணலாற்றுப்பகுதியில் இருந்து சிங்களப்படைகளையும் குடியேற்றவாசிகளையும் விரட்டிய புலிகள் சேனை அங்கே தொடர்ந்தும் நிலைகொண்டபடி மீட்கப்பட்ட மண்ணை தன்பிடிக்குள் வைத்திருப்பது ஒரு பாரிய இராணுவ சாதனையாகும். புலிகளின் இந்த இராணுவ சாதனை பேரினவாதத்தின் அரசியல் அபிலாசையையும் ஆட்டங்காணச்செய்துவிட்டது. எனவேதான் மணலாற்றின் ஒருபகுதி மண் மீட்கப்பட்டதை ஒரு மகிழ்ச்சியான விடயம் என தலைவர் வர்ணித்துள்ளார்.

1994 இல் சந்திரிகா அரசாங்கம் பதவி ஏற்றதும் தமிழரின் விடுதலைப்போரை ஒடுக்க ஒரு அரசியல் -இராணுவத்திட்டத்தை தீட்டியிருந்தது உலகநாடுகளின் ஆதரவுடன் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அம்மையார் ஒரு தந்திரவியூகத்தையும் வரைந்து வைத்திருந்தார். 'சமாதானத்திற்கான போர்' என்ற அந்த தந்திரோபாய இராணுவத்திட்டத்தை கடந்த ஐந்துவருடகாலமாக அமுல்நடாத்திவருகிறார்.

தமிழர்நிலங்களை படிப்படியாக ஆக்கிரமித்து - தமிழரின் போராட்டசக்தியான புலிகள் இயக்கத்தை அழித்து - போராட்டத்தை ஒடுக்கி தமிழரின் இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காண்பதே இந்த திட்டத்தின் இலக்கு.

குடாநாட்டையும் ஆக்கிரமித்து வன்னிப் பெருநிலப்பரப்பின் கணிசமான பகுதிகளையும் கைப்பற்றிய சிங்களப்படைகள், புலிகளின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டு தமிழர்நிலத்தில் அகலக்கால்பதித்தது. வன்னியின் எஞ்சிய நிலத்தையும் கையகப்படுத்தும் பேராசையுடன் அடுத்து ஐந்துவருடத்திற்கு போரை தொடர்ந்து நடாத்தி முழுவெற்றியைப் பெறப்போவதாக அம்மையார் சூளுரைத்திருந்தார்.

ஆனால் புலிகள் இயக்கத்தின் போராற்றலை ஒன்றுகுவித்து - மாபெரும் நடவடிக்கைத் திட்டம் தீட்டிய தலைவர் அவர்கள், ஓயாத அலைகள்-3 என்ற பெயரில் வன்னிநிலப் பரப்பில் பாரிய மண்மீட்புச்சமரைத் தொடக்கினார். சிங்களம் திகைக்கும் வகையிலும், உலகம் வியக்கும் வகையிலும் அந்தச் சமரின் விளைவுகள் இருந்தன.

புலிகளின் அலைவடிவிலான புயல்வேகத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாது சிங்களப் படைகள் சிதறி ஓடின. நிலமீட்புடன் பெருந்தொகை ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர். இந்த இராணுவ நிகழ்ச்சிகளினால் சிங்களத்தின் இராணுவக்கட்டமைப்பு சிதைந்து போய் உள்ளது. பல்லாயிரம் படையினரைப் பலிகொடுத்து - பல ஆயிரம் கோடி ரூபாய்களை செலவிட்டு நடாத்தப்பட்ட சந்திரிகாவின் பிரமாண்டமான போர்த்திட்டம் ஓயாத அலைகள் -3ஆல் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு என்ற பேரினவாதத்தின் திட்டமும் பகற்கனவாகிவிட்டது.

இத்தகையதொரு மாபெரும் இராணுவ வெற்றிக்கு மத்தியிலும் தலைவர் அவர்கள் சமாதானப்பேச்சுக்கான அழைப்பை மீண்டும் தெட்டத்தெளிவாக விடுத்திருப்பது உலகசமூகத்தின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

கடந்த வருடம் ஒரு நெருக்கடியான இராணுவ சூழலுக்கு புலிகள் இயக்கம் முகங்கொடுத்தபோதும் - அந்த இராணுவ அழுத்தத்திற்குப் பணிந்து போகாமலும் அதேவேளை சமாதானப்பேச்சு தொடர்பானதொரு ஆக்கபூர்வமான நடைமுறைத்திட்டத்தையும் அந்த வருட (1998) மாவீரர் நாள் உரையின் போது, தலைவர் அவர்கள், வெளியிட்டிருந்தார்.

இந்தவருட மாவீரர் நாள் உரையின்போது புலிகள் இயக்கம் ஒரு பெரும் இராணுவ வெற்றியை கையில் வைத்திருந்தபோதும் சமாதானப் பேச்சைப்பற்றி கடந்த வருடம் கூறிய கருத்துக்களை இவ்வருட மாவீரர்நாள் உரையிலும் தலைவர் வலியுறுத்தியுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக தனது சமாதான நல்லெண்ணத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் சில சிங்களப் போர்க்கைதிகளையும் எந்தவித நிபந்தனைகளும் இன்றி - மனிதாபிமானத்தின் அடிப்படையில் விடுதலைசெய்து முன்மாதிரியாக நடந்துகொண்டுள்ளார்.

தலைவரின் இத்தகைய அரசியற் செயற்பாடு சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. சிங்கள அரசு பிரச்சாரம் செய்வது போலல்லாமல் தலைவர் பிரபாகரன் அவர்கள் உண்மையான சமாதானத்திற்காக நேர்மையாகச் செயற்படுகின்றார் என உலகம் உணரத் தொடங்கியுள்ளது. அதேவேளை, சந்திரிகா அம்மையாரின் சமாதானப் பிரகடனங்கள் போலியானவை என்றும் சூழ்ச்சிகர நோக்கம் கொண்டவை என்றும் சர்வதேசம் நம்பத்தொடங்கியுள்ளது.

சமாதானப்பேச்சிற்கான அழைப்பை மீண்டும் மீண்டும் விடுத்தபோதும் அவற்றை ஏற்கும் நிலையில் சந்திரிகா அரசு இல்லை என்ற உண்மையையும் தலைவர் எடுத்து விளக்கத்தவறவில்லை.

சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதிலேயே சிங்களத்தின் இரண்டு பிரதான கட்சிகளும் விடாப்பிடியாக உள்ளன என தலைவர் குற்றம் சாட்டியுள்ளார். தமிழரின் இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காணப்பட வேண்டும் என்பதே பேரினவாதத்தின் அரசியல் அபிலாசையாகும்.

இந்தவகையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு என்பது தமிழீழம் என்ற தனிஅரசுதான் என்பதை சிங்கள அரசு தமிழ்மக்களுக்குச் சொல்லாமல் சொல்லிவருகின்றது. தமிழீழத்திற்காக தொடர்ந்து போராட்டத்தை நடாத்தும்படி சிங்களம் நிர்ப்பந்திக்கின்றது என்ற யதார்த்தத்தையும் தலைவர் எடுத்துக்கூறியுள்ளார்.

தன்னாட்சி உரிமையை நிலைநிறுத்தும் இலட்சியத்தைக் கொண்ட எமது விடுதலைப் போராட்டம் இன்று முக்கியமானதொரு கட்டத்தை எட்டியுள்ளது. இந்த வரலாற்றுச் சூழலை சரியாகப் பயன்படுத்தி எமது அரசியல் இலட்சியத்தை அடைவதற்காக நாம் ஒன்று திரண்டு போராடுவோம் என உறுதி எடுத்துக்கொள்வோம்.

Liberation Tigers Of TAMIL EELAM

## புலிகளின் குரல்

# கண்ணுக்கெட்டிய தூரத்தில் இருந்து கைக்கெட்டிய தூரத்தில்

ஈழத்தமிழரின் இருபத்தைந்து வருடகால ஆயுதப்போராட்ட வரலாற்றில் இப்போது அறுவடைக்காலம்.

ஓயாத அலைகள் மூன்று என்ற பெயரில் வன்னிப்பெருநிலப்பரப்பில் புலிகள் இயக்கம் நடாத்திய சிங்கவேட்டை, ஈழத்தமிழரை நெஞ்சுநிமிர்த்த வைத்துள்ளது.

ஆக்கிரமிப்பாளனின் இராணுவ வலயத்திலுள் புயலெனப் புகுந்த புலிகளசேனை சிங்களப்படைகளின் முன்னரங்க நிலைகளை மட்டும் உடைத்தெறிந்து உட்புகவில்லை. சிங்களத்தின் இராணுவத்திமிரையும் தகர்த்தெறிந்தபடி நிலம் மீட்டுள்ளது.

அரை நூற்றாண்டு காலமாக தமிழர் சிந்திவரும் கண்ணீரும், குருதியும் விழலுக்கிறைத்த நீராகி விடுமோ! என்ற தமிழ் மக்களின் இனம்புரியாத அச்சத்தை தனது மதிநுட்பமான இராணுவச்செயற்பாட்டால் - தலைவர் பிரபாகரன்- போக்கிவிட்டார்.

மண்மீட்பு என்ற இந்த இராணுவ அறுவடை தமிழர் மனங்களில் புளகாங்கித உணர்வை உண்டு பண்ணிவிட்டது.

தாயகத்தில் வதியும் தமிழர்களும்- புலம்பெயர்ந்து பிறதேசங்களில் வாழும் தமிழர்களும் இந்த வெற்றி விளைச்சலை தங்களது சொந்த அறுவடையாகக்கருதி அகமகிழ்ந்து- பெருமை கொள்கின்றனர்.

நிமிர்ந்து நின்று நேர்கொண்ட பார்வை பார்க்க அஞ்சி -அன்று கைகட்டி வாய்பொத்திக் குனிந்துநின்ற தமிழினத்தைப் பார்த்து அகங்காரத்துடன் போரா! சமாதானமா! என சிங்களத்து அரசாங்கம் கேட்டது.

அன்றைய நாட்கள் சிங்களத்தின் காலம்.

அடையாளங்களை மறைக்கவென நினைத்து சீருடைகளைக் கழற்றி வைத்துவிட்டு சிவிலுடையில் கடுகருவி ஏந்திய சிங்களப்படைகள் தமிழரை ஓட, ஓட வேட்டையாடியது அந்தக்காலம்.

தமிழ்மக்களைக் கொன்று-மிரட்டி அடிபணியவைப்பிக்க டாங்கிகளை -ஆட்டிலறிகளை- கவசவாகனங்களை தமிழர் நிலத்திற்குக் கொண்டுவந்தது அன்றையகாலம்.

அந்தக்காலம் இப்பொழுது காலமாகிவருகின்றது.

இனிவருவது தமிழரின் பொற்காலம்.

போருக்கும் தயார், சமாதானத்திற்கும் சம்மதம் என்று தமிழினம் நிமிர்ந்துநின்று - துணிந்து பதிலளிக்கின்ற காலமிது.

புலிப்பாய்ச்சலின் கடுமையைத் தாங்கமுடியாது, சிங்களப்படைகள், களம்விட்டோடி - தங்களது அடையாளத்தை மறைக்க சீருடை துறந்து - துவக்குகளை எறிந்து - சிவிலுடைக்குள் தஞ்சம்புகுந்து சிங்களதேசம் நோக்கி பீதிவழிய ஓடுவது இன்றைய காலம்.

தமிழரையும் - தமிழர்தேசியத்தையும் துவம்சம்செய்யக் கொண்டுவந்த டாங்கிகளை - ஆட்டிலறிகளைப் பாதுகாப்பதற்காக அவசரம் அவசரமாக சிங்களத்தின் எல்லைநோக்கி இழுத்துச்செல்வது இந்தக்காலம்.

சிங்களத்தின் தரைப்படையை தமிழர் மண்ணிலிருந்து புறமுதுகிட்டோடச் செய்விக்கலாமா! அதன் கடற்படைக்கு வேலியிடலாமா! வான்படைக்கு எதிர்நிற்கலாமா! எண்ணிக்கையில் பலமடங்கு அதிகமான சிங்களஇனத்துடன் போர்புரிந்து வெற்றிபெறலாமா! என்றவாறான எமதுமக்களின் பீதிநிறைந்த சந்தேகங்களுக்கு - தலைவர் பிரபாகரன் அவர்கள் - செயல்முறைமூலம் விடையளித்து, தமிழர் நிலத்தில் இராணுவப் பிரளயங்களை ஏற்படுத்தி வருகின்றார்.

இலங்கைத்தீவில் எதிரும்-புதிருமாக இரண்டு இராணுவங்கள் உள்ளனவா! என்ற உலகத்தோரின் ஐயப்பாட்டிற்கு 'ஓயாத அலைகள் மூன்று' தெட்டத்தெளிவாக விடைகூறிவிட்டது. ஆம்.. தமிழர்சேனை, சிங்களப்படை என இரண்டு இராணுவங்கள் தத்தமது நிலப்பரப்பை தங்கள, தங்கள் ஆளுகைக்குள் வைத்திருக்கப் போர்புரிவது - இப்போது - உள்ளங்கை நெல்லிக்கனியாகிவிட்டது.

வெல்லற்கரியபோர் என்றும் முடிவில்லா யுத்தம் என்றும் சீமையின் வல்லுனர்களால் சிலாகிக்கப்பட்டுத் தீர்ப்புக்கூறப்பட்ட தமிழரின் விடுதலைப் போர்; புலிகளால் வெல்லப்படக்கூடிய யுத்தம் என்ற உண்மையை ஓயாத அலைகள் மூன்று, நிரூபித்துவிட்டது.

தலைவர் பிரபாகரனின் அற்புதமான படைநகர்த்தலை அசத்தலான இராணுவசாதனை என உலகத்தொடர்பூடகங்கள் மனந்திறந்து பாராட்டுகின்றன. வியப்பும் - புதிரும் இரண்டறக் கலந்த பிரபாகரனின் இராணுவச் செயற்பாட்டை விளங்கிக்கொள்ள உலகப்படைத்திறனாய்வாளர்கள் புதிய இராணுவ அளவுகோல்களை நாடிநிற்கின்றனர்.

ஓயாத அலைகள் மூன்று வாயிலாக புலிகள் இயக்கம் வெளிப்படுத்தியுள்ள படைபலமே தமிழர்போராட்டத்தை இலக்குவரை சுமந்து செல்லும் வாகனமாக உள்ளது.

ஒருமித்த மக்கள்சக்தியை அடித்தளமாகக் கொண்ட படைபலம்தான் தமிழ்மக்களுக்கு நிம்மதியான - சுதந்திரமான - கௌரவமான அரசியல் வாழ்வை வழங்கவல்லது.

கண்ணுக்கெட்டிய தூரத்திலிருந்த தமிழரின் அரசியல் இலட்சியத்தை, இந்தப் பலவளர்ச்சி, கைக்கெட்டிய தூரத்திற்கு கொண்டுவந்துள்ளது.

பலம்தான் தமிழர்விடுதலையின் தாரகமந்திரம்.

இந்த அரசியல்வேதத்தை, ஈழத்தமிழர்கள் ஒருபொழுதும் மறந்துவிடலாகாது. ○

www.eelamview.com

# விடுவிப்புச் சமரின் விடிவெள்ளி

"பிரபாகரன் நினைத்தது நடக்கும். அவன் புலிப்படை நெருப்பாற்றை நீந்திக் கடக்கும்" தாயக் கவிஞனின் சத்திய வரிகளுக்குச் சான்றாய் ஓயாத அலைகள்-3 சமர் ஒப்பற்ற ஒரு உலக சாதனையைப் படைத்து வரலாற்றில் தனக்கான ஒரு இடத்தைப் பிடித்திருக்கிறது.

'வென்று வாழ்வதே தமிழன் தனக்கெழுதிய விதி' என்பதை நெருப்பாற்றைக் கடக்கும் பிரபாகரனின் புலிப்படை இந்தப் பூகோளத்திற்கு புரியவைத்துள்ளது. புலிகள் பற்றித் தப்புக்கணக்குப் போட்டவர்களுக்கு தலையில் குட்டுப்போட்டு புலியின் பலத்தை சொல்லியிருக்கின்றது ஓயாத அலைகள்-3. 'தமிழரின் தாயகத்தை அவர்களிடம் ஒப்படைக்காதவரை உனது அழிவுகளையே அறுவடையாய் பெற்றுக் கொள்ள முடியும்' என்பதை சிங்கள இனத்திற்கு கன்னத்திலறைந்து உணர்த்தியிருக்கிறது ஓயாத அலைகள்-3. இன அழிப்புப் போருக்கான அரசின் ஆதரவாளர்களுக்கு, 'எங்கள் நிலமேறிவரும் படைகள் தங்கள் உடல்கொண்டு மட்டுமே மீண்டும் தம் நிலம் ஏகும்' என்பதை சொல்லி வைத்திருக்கிறது ஓயாத அலைகள்-3. 'புலிகள் தீர்ந்துபோகும் சக்தியல்ல, அது ஒடுக்கப்பட்ட தமிழரின் விடுதலைப்படை, தமிழரின் தாயகத்தை மீட்கும் புரட்சிப் போரில் நிச்சயிக்கப்பட்ட வெற்றியைப் பெறப்போகும் மக்கள் படை அது' என்பதை சர்வதேசத்திற்கு மீண்டும் ஒருமுறை மெய்ப்பித்திருக்கிறது ஓயாத அலைகள்-3. 'எங்களுக்கென்றும் ஒரு நாடு இதோ உருவாகிறது' என்று உலகத்தமிழரை உணர்ச்சிபொங்க வைத்திருக்கிறது ஓயாத அலைகள்-3. 'விடுதலை என்பது விலை கொடுத்துப் பெற்றுக்கொள்ள வேண்டியது.' நாம் கொடுத்த விலைகளுக்கு பெற்றுக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது என்று எம்மக்களை மகிழ்ச்சி கொள்ள வைத்திருக்கிறது ஓயாத அலைகள்-3. போரின் பங்கேற்புக்கு ஏற்ப பெற்றுக்கொள்ளும் வெற்றியைப் பெரிதாக்கவும், விரைவாக்கவும் முடியும் என்று போராட வலுவுள்ள ஒவ்வொரு தமிழனுக்கும் அறிவுரை தந்திருக்கிறது ஓயாத அலைகள்-3. புலிகள் நடாத்திய இந்த ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின் தாக்கவீச்சம் இப்படி நீண்டு செல்லும்.

ஓயாத அலைகள்-3, தமிழீழத்தின் எல்லைக்கோடுகளை நோக்கி எமது முன்னரங்க காவலரண்களை முன்னகர்த்தும் ஒரு தாக்குதல் முன்னேற்ற நடவடிக்கை. மீட்புப் போரின் ஒரு உயரிய கட்டம். 27 வருட ஆயுதப் போராட்டத்தின் சுழற்சிச் சக்கரத்தின் மையமாய், இயக்கு சக்தியாய் நின்ற தலைவர், விடுதலைப் போராட்டத்தில் வளர்ச்சிப் போக்கை அதன் இறுதித் தளத்திற்கு இட்டுவந்துள்ள பரிமாணமே ஓயாத அலைகள்-3.

சிங்கள இராணுவம் 2½ வருடமாய் தமிழர் நிலம் மீது செய்த இராணுவ நடவடிக்கையால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களையும், 15 வருடத்தின் முன் தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்டு சிங்களவர்களிடம்

**- பிரபுத்திரன் -**

ஒப்படைக்கப்பட்ட தமிழர் நிலங்களையும் ஓயாத அலைகள்-3 நடவடிக்கை மீட்டெடுத்துள்ளது. தாக்குதல் பிரதேசத்திற்குட்பட்டிருந்த பகுதிகளில் ஏறத்தாழ 20,000 சிங்களத் துருப்புக்களும் அவற்றின் ஆயுத தளபாடங்களும் நிலைகொண்டிருந்த நிலையில், அவை புலிகளிடம் எப்படித் தோற்றுப்போனது?! பெரும் விஸ்தீரணமான நிலப்பரப்பில் முவணைப் படைகளையும், நவீன போர்க் கருவிகளையும், பின்தள உதவிகளையும் கொண்டிருந்த இராணுவ வலயத்தை தாக்கியழித்து மீட்கக்கூடிய வலுவை புலிகள் எப்படி அடைந்தார்கள்?! ஒரு கெரில்லாப் படையின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை அன்னிய அரசுகளின் உதவிகளுடன் அரச படையினர் பிடிப்பதற்கு 2½ வருடம் சென்ற நிலையில், அதே படையை வெற்றிகொண்டு நாட்களுக்குள் அந்நிலப்பரப்புக்களை மீட்க எப்படி புலிகளுக்கு சாத்தியமாயிற்று. இத்தனை பலங்கொண்ட ஒரு அரச இராணுவத்தை தாக்கி நிர்மூலமாக்கி புலிகளால் முன்னேற முடிந்தது எப்படி?! இது எவருக்கும் இலகுவில் புரியக்கூடியதல்ல. இதுவே புலிகளின் நிராகரிக்கப்பட முடியாத பலம். இனிச் சமருக்கு வருவோம்.

மாவீரர் நினைவு மாதம். சிறிலங்கா இராணுவம் புலிகளுடனான தனது போர் வரலாற்று அனுபவத்தில், இம்மாதத்தில் புலிகள் மிக முக்கியத்துவம் வாய்ந்த சமர்களைச் செய்வார்கள் என்பது தெரிந்தது. அதற்கான முறியடிப்புத் தந்திரோபாயங்களையும், வலுவையும் முன்னேற்பாடாக உறுதிப்படுத்திக்கொண்டு காத்திருக்கும் காலமிது. 99 நவம்பர் மாதத்திற்கான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மிக அதிகமாகவே அரசபடைகளால் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். புலிகளின் ஒருவருட மௌனம், புலிகள் மிகப்பெரும் தாக்குதலுக்காக காத்திருக்கிறார்கள் என்ற பல இராணுவ ஆய்வாளர்களை ஆருடம்கூற வைத்திருந்தது. இதை சாதாரண சிங்களச் சிப்பாய்களாலும் உணர்ந்திருக்க முடியும். தேர்தலுக்கான நாளும் குறிக்கப்பட்டுவிட்டதால் இத்தாக்குதல் படைத் தலைமையால் நிச்சயம் எதிர்பார்க்கப்பட்டது. இதற்கான முன் நடவடிக்கையில் சிங்களப் படைத்தலைமை முன்கூட்டியே இறங்கிவிட்டிருந்தது. அதுவே,

→




தமிழர்சேனையின் தளபதிகளுக்கு -
படைநகர்த்தும் திசைசொல்லும் தமிழர்பதி!



www.eelamview.com

# தமிழர்சேனையின் நகர்வு மார்க்கங்கள்






www.eelamview.com

புலிகளை பாதுகாப்பு போர்முறைக்குள் தள்ளி வைத்திருப்பதற்கான நோக்கம் கொண்ட தொடர் இராணுவ நடவடிக்கைத் திட்டமாகும். அதற்கு எமது தலைவர் பலியாகாமல் செயலில் இறங்கியதை சிங்களப்படைகள் உணர்ந்திருக்க நியாயமில்லைத்தான்.

முதல் இலக்கான தாக்குதலுக்குட்பட்ட பிரதேசத்தை பொறுத்தவரையில், இப்பிரதேசம் ஒரு இராணுவ வலயமாக அமைந்திருந்தது. முல்லை மாவட்டத்தின் ஒரு பகுதியும், வவுனியா மாவட்டத்தின் ஒரு பகுதியும், அனுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட மணலாற்றின் ஒரு பகுதியுமாக இவ்விராணுவ வலயத்தின் விஸ்தீரணம் இருந்தது. இவ்விராணுவ வலயத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகப் பலம் வாய்ந்தவையாகவும், அத்துடன் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைக்காக இராணுவ பலம் பேரளவில் குவிக்கப்பட்ட நிலைமையிலுமே அது அமைந்திருந்தது. ஏறத்தாழ 20,000 துருப்புக்கள் இப்பிரதேசத்தில் நிலைகொண்டிருந்தனர்.

பொதுவாக இவ்வலயத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் இப்படி அமைந்திருந்தன: மிதிவெடிகள், அடுத்து முட்கம்பி வேலியென மூன்று தொடக்கம் ஏழு நிரைகளைக் கொண்ட தடைப்பிரதேசம். இதன் பின்னால் சராசரியாக 30 மீற்றருக்கு ஒரு காவலரண் என்ற விகிதத்தில் மண்ணணைகளின் இடையே அமைக்கப்பட்டிருந்த முன்னரங்க காவலரண் பகுதி. பல இடங்களில் இதற்கு 100 மீற்றரின் பின்னால் தடைப் பிரதேசம், காவலரண் தொடர் என இதே போன்றே அமைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை பாதுகாப்பு ஏற்பாடு. காவலரண்களிடையே வலுப்படுத்தப்பட்ட நிலைகள் அவதானிப்பு நிலைகள் என்பனவும் அமைந்திருந்தன. இவற்றுக்குப் பிற்பகுதியில் ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைந்திருந்த மினிமுகாம்கள் தனக்கான பிரத்தியேக பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கொண்டிருந்தது. நூற்றுக்கு மேற்பட்ட மினிமுகாங்கள் இவ்வாறு அமைந்திருந்தன. இதைவிட ஒவ்வொரு பிரதேசத்திற்குமான உயர்பாதுகாப்பு வலயம் (High Defence Zone) என்று சொல்லப்படுகின்ற பிரதான தளம் அமைந்திருந்தது. இப்பிரதான தளங்களைச் சுற்றி தடைப்பிரதேசத்துடனான மண்ணணை கொண்ட தொடர் காவலரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவை வலுவான பாதுகாப்பு கொண்டவையாகவும், மேலதிக படையணிகளை (Reserve Forces) கொண்டவையாகவும், மோட்டார், பீரங்கி ஏவுதளங்களையும் கொண்டவையாக கட்டளைப் பீடங்களை உள்ளடக்கி அமைந்திருந்தது.

மத்தியில் கனகராயன் குளத்தில், தாக்குதலுக்குட்பட்ட பிரதேசத்தின் முக்கால்வாசிப் பகுதியை காவல் செய்து நின்ற 56வது டிவிசனின் தலைமையகமும், நடவடிக்கையில் ஈடுபடும் 55வது டிவிசனின் தலைமையகமும் அமைந்திருந்ததுடன், சிறப்பு கொமாண்டோ பிரிவின் இரண்டாவது பற்றாலியனும் நிலைகொண்டிருந்தது. இவற்றுடன் ஆட்டிலறித்தளம், உணவு, வெடிபொருட் களஞ்சியங்களும் அமைந்திருந்த உயர் கட்டளைப்பீட மையமாக இத்தளம் அதற்குரிய பாதுகாப்போடு விளங்கியது. இவற்றைவிட, இப்பரந்த நிலப்பரப்பில் ஆங்காங்கே ஆட்டிலறி ஏவு தளங்கள், கவச பிரிவுத்தளங்கள், பொறியியல் பிரிவுத்தளங்கள், நடவடிக்கைத் துருப்புக்களுக்கான தளங்கள், உணவு, வெடிபொருட் களஞ்சியங்கள் என்பனவும் இவற்றிற்கான உரிய பாதுகாப்பு ஏற்பாட்டுடன் அமைந்திருந்தன.

இத்தகைய பிரமாண்டமான படைப்பல வலுவைக்கொண்ட விஸ்தீரணமான இராணுவ வலயத்தையே எமது தாக்குதல் இலக்காக்கினார் தலைவர். நீண்டகால இடைவெளியில், மீட்புச் சமருக்கான போர் உபாயமும், போருக்கான படைக்கருவிகளும், அதற்கான படைகளும், சிறப்புப் பிரிவுகளும், பயிற்சிகளும் என்ற வகையில் எமது படைவலுவை கட்டிவளர்த்த தலைவர், காலம், இடம், சூழல் அறிந்து தாக்குவதற்கான திட்டத்தை தளபதிகளுக்கு விளக்கினார். தன் உயிரிலும் மேலாய் 'தெய்வீக புருஷர்கள்' எனக் கருதும் மாவீரர்களின் நினைவு மாதத்தின் முதல் நாளான நவம்பர் முதலாம் திகதியை தாக்குதல் நாளாக குறித்தார் தலைவர். குறித்த நாளும் வந்தது.

நவம்பர் முதலாம் திகதி முதற்கட்ட எமது தாக்குதல் அணிகள் நகரத்தொடங்கின. இதுவரை எம் வரலாற்றில் நிகழாத பெரும் சமருக்கான ஆர்ப்பரிப்போடு அணிகள் நகர்ந்தன. இரவுப்பொழுது முதலாவது ஒன்றுகூடுமிடத்தில் போருக்கு போகும் முன் உறுதிப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர் போராளிகள். ''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'' என்று கோசமிட்டு நெஞ்சில் உத்வேகம் எழ விடுவிப்புச் சமருக்கான தத்தமது நகர்வுத் திசைகளில் விரைந்து நகர்ந்தன புலி அணிகள். இருளோடு இருளாக எதிரியின் கண்களை குருடாக்கி நகர்ந்து முடித்த அணிகள் தாக்குதலின் இறுதிக் கட்டளைக்காக காத்திருந்தன. அணித் தலைவர்களால் இச்செய்தி தளபதிகளுக்கு அறிவிக்கப்பட தலைவருக்கு அதை உறுதிப்படுத்திக்கொண்டனர் தளபதிகள். சமரை நேரடியாக நெறிப்படுத்தும் தலைவரிடமிருந்து தாக்குவதற்கான உத்தரவு தளபதிகளுக்கு பிறப்பிக்கப்பட்டது. தளபதிகள் அணித்தலைவர்களுக்கு கட்டளை பிறப்பிக்க இராணுவ வரலாற்றில் சாதனை படைக்கப்போகும் இப்பெருஞ்சமர் போராளிகளின் வீராவேசமான தாக்குதலின் வெடியதிர்வுடன் தொடங்கியது.

தளபதி கேணல் ஜெயத்தின் வழிநடத்தலில் ஒட்டுசுட்டானிலிருந்து திறக்கப்பட்ட முதற் களமுனையில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையும், மாலதி படையும் எதிரியின் முன்னரங்க காவலரண்களைத் தகர்த்தழித்து காவலரண்களை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தன. முன்னேறிய எமது அணிகள் சூழவுள்ள மினிமுகாங்களைக் கைப்பற்றி பிரதான தளத்தை முன்னேறித் தாக்கின. உக்கிரமான, மிகவேகமான எமது தாக்குதல் உத்தியும், அதன் வியூகமும் எதிரியைத் திணறடித்தன. பிரதான படைத்தளத்தின் கட்டளை மைய இயங்குநிலை சீர்குலைந்தது நிலைமையைச் சரிவர உணர்ந்து, முறியடிப்புத்தாக்குதலை வகுத்து உத்தரவைக் கட்டளைப்பீடம் பிறப்பிக்க முன்னரேயே எமது அணிகள் எதிரித்தளத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தன. இதே நேரம் முன்னரங்க காவலரண்கள் தாக்கியழிக்கப்பட்டு ஒட்டுசுட்டானை அண்டியிருந்த மினிமுகாங்கள் தாக்கப்பட்டன. பிரதான தளத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஒட்டுசுட்டானை அண்டிய பிரதேசங்களில் உள்ள மினிமுகாங்கள் எமது கைகளில் விழுந்தன. ஒட்டுசுட்டான் நகர் முழுமையாக எம்மால் மீட்கப்பட்டது. விடியற்காலை மீட்கப்பட்ட பிரதேசத்திற்கான தற்காப்பு அணிகள் நிலைபெறுக்க நெடுங்கேணியை நோக்கியும், கரிப்பட்டமுறிப்பை நோக்கியும் இருபடைத்தொகுதிகள் முன்னேறத் தொடங்கின.

இதேநேரம் தளபதி லெப்டினன்ட் கேணல் ராபட்டின் வழிநடத்தலில் நெடுங்கேணிப்பகுதியில் அமைந்திருந்த முன்னரங்க காவலரண்களைத் தகர்த்தழித்துக்கொண்டு முன்னேறிய ஜெயந்தன் படையணியும் சோதியா படையணியும் எதிரியின் பாதுகாப்பு வியூகத்தைப்பிளந்து பிரதானதளத்தை நெருங்கித் தாக்கின. அப்பகுதிக்கான சண்டை வலுவடைந்தது. எதிரி திணறடிக்கப்பட்டான். சண்டையின் முடிவில் நெடுங்கேணிப் பிரதானதளம் எமது கையில் வீழ்ந்தது. ஒட்டுசுட்டானிலிருந்து முன்னேறிய படைத்தொகுதி ஒட்டுசுட்டானிற்கும், நெடுங்கேணிக்கும் இடையே உள்ள மினிமுகாம்களைத் தகர்த்தழித்து, அதன் முன்னரங்க காவலரண்களையும் துடைத்தழித்துக்கொண்டு முன்னேறியது. பகற்பொழுதுச் சண்டைகளின் விடிவில் இருந்த அனைத்து மினிமுகாம்களும் தாக்கியழிக்கப்பட்டு நெடுங்கேணியில் அணிகள் ஒன்றிணைந்தன. அங்கிருந்து, நெடுங்கேணியின் அண்டிய பிரதேசங்களில் இருந்த எதிரிப்படைகளைத் தாக்கி விரட்டியடித்த எமதணியினர் 2ம் திகதி இரவுப்பொழுதுக்குள் நெடுங்கேணி நகரை முழுமையாக மீட்டெடுத்துக்கொண்டன. இவ்விருபகுதியின் சமர்முனையை தளபதி கேணல் சொர்ணம் வழிநடத்தினார்.

ஒட்டுசுட்டானிலிருந்து கரிப்பட்டமுறிப்பை நோக்கி முன்னேறிய சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படை, அங்கிருந்து 13 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மணவாளன்பட்டமுறிப்பு வரையான எதிரியின் தொடர் காவலரண்களையும், எதிரியின் மினிமுகாங்களையும் தகர்த்தழித்தவாறு முன்னேறியது. பகற்பொழுதுச் சண்டைகளில் 13 கிலோமீற்றர்தூரம் எதிரியின் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தகர்த்தழித்து மிக வேகமான முன்னேற்றத்தைச் செய்திருந்தது இப்படை. முதல்நாள் சமர் இரு நகரங்களை மீட்டு, மேலும் முன்னேறிய இந்நிலையுடன் முடிவடைந்தது.


இரண்டாம் நாள் (3ம் திகதி) அம்பகாமத்திலிருந்து முன்னேறிய இம்ரான் - பாண்டியன் படையணி, மாலதி படையணி, ஜெயந்தன் படையணிகளைக் கொண்ட படைத் தொகுதியொன்று லெப். கேணல் சேகரின் தலைமையில் முன்னரங்க காவலரண்களைத் தகர்த்து அம்பகாமத்தின் பிரதான தளத்தை முற்றுகைக்குட்படுத்தி தாக்கியழித்தது. இத்தாக்குதல் வெற்றியோடு அம்பகாமத்தை பூரணமாக எமது கைகளில் வீழ்த்திய எமது அணிகள், அங்கிருந்து மணவாளன்பட்டமுறிப்பை நோக்கி முன்னேறின. ஒட்டுசுட்டானிலிருந்தும், அம்பகாமத்திலிருந்தும் முன்னேறிய அணிகள் மணவாளன்பட்டமுறிப்பில் ஒன்றிணைந்து மணவாளன்பட்டமுறிப்புப் பிரதான தளத்தை தாக்கியழிப்பதற்கான முன்னேற்பாடுகளில் இறங்கின.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையும், ஜெயந்தன் படையின் அணிகளும் லெப். கேணல் சேகரின் தலைமையில் மணவாளன்பட்டமுறிப்புத்தளம் மீது தாக்குதலைத் தொடங்கின. இச்சமர்முனையை தளபதி கேணல் தீபன் வழிநடத்தினார். உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த அப்படைத்தளத்தின் பாதுகாப்பரண்கள் ஒரு கடுமையான சண்டையின் பின் எமது கைகளில் வீழ்ந்தது. அதை ஊடறுத்து முன்னேறிய அணிகள் தளத்தை தகர்த்தழித்தனர். மாண்டவர்போக எஞ்சிய எதிரிகள் கரிப்பட்டமுறிப்புத்தளத்திற்கு பின்வாங்கிச் சென்றனர். மணவாளன்பட்டமுறிப்பு

→



www.eelamview.com



## தளபதி கேணல் சொர்ணம், சக தளபதிகளுடன்

காவலரண்களையும் ,சூழவுள்ள பிரதேசங்களையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த எமது அணிகள் அங்கிருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கரிப்பட்டமுறிப்பு நோக்கி எதிரியின் பாதுகாப்பு நிலைகளைத் துடைத்தழித்தவாறு முன்னேறிச் சென்றன.

தளபதி சேணல் சொர்ணத்தின் தலைமையின்கீழ் இயங்கிய மற்றைய களமுனையில், நெடுங்கேணிப்பகுதியில் தற்காப்பு அணிகளை நிலைப்படுத்திவிட்டு மேற்காக நைனாமடு நோக்கி முன்னேறிய சிறுத்தைப்படை அந்த நீளமான வீதியின் அண்டையில் இருந்த மினிமுகாங்களை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தவாறு வேகமான முன்னேற்றத்தின் மூலம் குளவிசுட்டான் பிரதான தளப்பகுதியை அடைந்தது. ஆட்டிலறி ஏவுதளம் உள்ளிட்ட அப்படைத்தளம் கடுமையான சண்டையை எதிர்கொண்டது. சண்டை தொடங்கி இருநாள் அவகாசத்தில் எமது தாக்குதலை எதிர்பார்த்திருந்து எதிர்கொண்ட எதிரிகளுடன் எமது அணிகள் கடுமையாகச் சண்டையிட்டன. எமக்கும் எதிரிக்கும் இடையில் அப்படைத்தளத்தின் இறுதி முடிவிற்காக மிக உக்கிரமான சண்டை வெடித்தது. எதிரியின் இழப்பு அதிகரிக்க, தொடர்ச்சியான எமது தாக்குதலில் சிதைவடைந்த அப்படைத்தளம் இறுதியில் எமது கைகளில் வீழ்ந்தது. எதிரி பின்வாங்கி ஓடத்தொடங்கினான். அப்படைத்தளத்தை வீழ்த்திய புலிகள், அதேதினம் குறிசுட்டகுளத்திற்கு முன்னேறி அப்பிரதேசத்தையும் மீட்டெடுத்தனர்.

இதேநேரம் இச்சமர்முனையின் மறுதிசையில் இம்ரான் -பாண்டியன் படையணியும், உதவியணிகளும் உள்ளடங்கிய படைத்தொகுதி நெடுங்கேணியிலிருந்து ஒதியமலை நோக்கி முன்னேறியது. எதிரியின் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் துடைத்தழித்து முன்னேறிய இப்படைத்தொகுதி, மணலாறு ஆக்கிரமிப்புக் குடியேற்றத்தின் பாதுகாப்புத்தளமான ஒதியமலை மீது கடுமையான சண்டையைத் தொடங்கியது. எமது தாயகபூமியைப் பிளந்த ''வெலிஓயா'' ஆக்கிரமிப்பின் பாதுகாப்பு இத்தளத்தில் தங்கியிருந்ததால் எதிரி கடுமையான சண்டையைத் தொடுத்தான். எதிரியின் படைத்தலைமை இதனை இழந்துவிடக்கூடாதென்பதில் தீர்க்கமான முடிவோடு இருக்க, தலைவரால் வகுக்கப்பட்ட இத்தாக்குதல் திட்டத்தை நிறைவேற்றி முடிப்பதற்காக எமது படைத்தொகுதி தீர்க்கமான சண்டையில் இறங்கியது. புலிவீரத்திற்கு அப்படைத்தளம் இறுதியில் அடிபணிந்தது. தளம் பிற்பகல் எமது கைகளுக்கு மாறியது. அன்றைய 2ம் நாள் சமர் அத்துடன் முடிந்தது.

தளபதி கேணல் பானுவின் தலைமையில் இயங்கிய கிட்டு பீரங்கிப்படையின் அணிகள் இச்சமர் நடவடிக்கையில் முக்கிய பங்காற்றின. இவ்வணிகளுடைய திரமிக்க, நேர்த்தியான செயற்பாடு எதிரியைத் திணறடித்தது. முறியடிப்புத் தாக்குதலுக்கான எதிரியின் மாற்று வழிகளை இது முறியடித்தது. முன்னேறும் எமது படையணிகளின் நகர்விற்கேற்ப மிக வேகமாகவும், எதிரியின் முறியடிப்புத் தாக்குதலை எதிர்கொள்ளக்கூடியவாறு விவேகமாகவும் செயற்பட்ட கிட்டு பீரங்கிப்படையணியின் தாக்குதல்கள், சமரின் வெற்றிக்கு பலம் சேர்த்துக்கொண்டிருந்தன.

4ம் திகதி நடவடிக்கையில் மீட்கப்பட்ட பிரதேசங்களில் தற்காப்பு வேலைகள் உறுதிப்படுத்தப்பட்டு சேமஇருப்பு அணிகள் நிலையெடுத்துக்கொண்டன. புதிய அணிகள் வரவழைக்கப்பட்டு அணிகள் மீளொழுங்கு அமைக்கப்பட்டு அடுத்த தாக்குதலுக்கான தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டன. இரு சமர்முனைக் களங்களும். சமர்க்களத்தில் அனேகமாக அடுத்தகட்ட இலக்கிற்கான தயாரிப்பு வேலைகளே பொதுவாக அன்றையதினம் நடந்தது. இதற்கான உத்தரவே தலைவரிடமிருந்து சமரின் ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் கருணாவிற்கு வழங்கப்பட்டிருந்தது.


5ம் திகதி தளபதி கேணல் தீபனின் தலைமையின் கீழ் இயங்கிய சமர்முனையில் கரிப்பட்டமுறிப்பு பிரதான தளம் மீதான தாக்குதலில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படை, இம்ரான் -பாண்டியன் படை, ஆகியவற்றைக்கொண்ட படைத்தொகுதி எதிரியின் முன்னரங்க காவலரண்களைப் பிளந்து உள்ளிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை ஊடறுத்து முற்றுகையிட்டனர். முற்றுகையிடப்பட்ட கரிப்பட்டமுறிப்பு பிரதான தளம் எமது கடுமையான தாக்குதலுக்குள்ளானது. மூன்று நாள் எதிரிக்கிருந்த அவகாசம் எதிரி தன்னைப் பலப்படுத்த இடமளித்தது. இத்தளத்தின் வீழ்ச்சி மாங்குளம், கனகராயன்குளம் ஆகிய நகர்கள் எமது கைகளில் விழ வழிகோலிவிடும் என்பதால் படைத்தலைமை இதைப்பாதுகாக்க கடும் பிரயத்தனப்பட்டது. இதனால் மிக உக்கிரமான சண்டைகளில் நாம் ஈடுபடவேண்டியிருந்தது. எமது போராளிகளின் வீரத்திற்கு இறுதியில் தளத்தின் ஒருபகுதி வீழ்ச்சியடைந்தது. இத்தளத்தின் முக்கியத்துவம் கருதி மன்னாரிலிருந்து வரவழைக்கப்பட்ட சிறப்பு கொமாண்டோ படைப்பிரிவு ஒலுமடுவிலிருந்து முன்னேறியது. இதை தடுத்துச் சமராடிய எமதணிகளின் வீரம்மிக்க தாக்குதலின் முடிவில் சிறப்பு கொமாண்டோப்பிரிவு பின்வாங்கிகொண்டது. இதன்பின் முற்றுகையை மேலும் இறுக்கிய புலிகள், தமது தாக்குதலின் மூலம் கரிப்பட்டமுறிப்பைக் கைப்பற்றினர். இயலாமையின் முடிவில் எஞ்சிய எதிரிகள் கனகராயன்குளத்திற்கு பின்வாங்கிஓடினர்.

அங்கிருந்து கனகராயன்குளம் நோக்கி ஒரு படைத்தொகுதி முன்னேறியது. மறு படைத்தொகுதி ஒலுமடு நோக்கி முன்னேறி, ஒலுமடு உயர் பாதுகாப்பு வலயம் மீது தாக்குதலைத் தொடுத்தது. செறிவான பீரங்கிச் சூட்டாதரவுடனான புலிகளின் தீர்க்கமான சண்டையின் பின், இழப்புக்களோடு இராணுவம் பின்வாங்கியது. அதனைச் சூழவுள்ள பிரதேசத்தில் உள்ள பாதுகாப்பு அரண்களையும், மினிமுகாங்களையும் தகர்த்தழித்துக்கொண்டு முன்னேறியது இப்படைத் தொகுதி. இத்தநேரம் தென்திசை நோக்கி லெப். கேணல் ஜெயத்தின் தலைமையில் கண்டிவீதியால் மாங்குளத்திற்கு முன்னேறிய ஜெயந்தன் படையின் அணியும், அன்பரசி படையும் மாங்குளத்தின் முன்னரங்க காவலரண்களை ஊடறுத்து, பிரதான தளத்தைப் பிளந்து, சண்டையில் ஈடுபட்டது.

இது மாங்குளம் சந்தியை மீட்டெடுத்தவேளை டல்லாவி வீதியில் மூன்றுமுறிப்புச் சந்தியில் இருந்து முன்னேறிய எல்லைப்படை வீரர்கள் உள்ளிட்ட தாக்குதல் அணி, அப்பகுதி காவலரண்களைத் தகர்த்தழித்துக்கொண்டு மாங்குளம் சந்தியை வந்தடைந்தது. மாங்குளம் சந்தியில் மூன்று திசைகளிலும் இருந்து முன்னேறிய படைத்தொகுதிகளும் ஒன்றிணைந்து மாங்குளம் நகரை பிற்பகல் 3.05 ற்கு மீட்டெடுத்துக்கொண்டன. புலிகளின் தாக்குதலுக்கு முகங்கொடுக்கமுடியாத எதிரிப்படைத் துருப்புகளும், அவனது சிறப்பு கொமாண்டோக்களும், கவசபடைப்பிரிவும் கனகராயன் குளத்திற்குப் பின்வாங்கி ஓடின.

இத்தளங்களின் வீழ்ச்சியோடு கற்கிடங்கிற்கு அருகாமையிலும், புற்குளத்திற்கு அருகாமையிலும் இருந்த எதிரியின் ஆட்டிலறிப் படைப்பிரிவுகள் பின்வாங்கிக் கொண்டன. இதற்கு முந்தைய இரண்டாம் நாள் சமரின்போது கனகராயன்குளம் தளப்பகுதியில் இருந்த எதிரியின் வெடிபொருட் களஞ்சியமும், அத்தளமும் எமது தாக்குதலுக்குள்ளானது. இத்தாக்குதலில் வெடிபொருட் களஞ்சியம் வெடித்துச் சிதறியதுடன் 100 இராணுவம் கொல்லப்பட்டும், 300 துருப்புக்கள் காயமடைந்தும் போயினர். இந்நிலையில் 5ம் திகதி பிற்பகல் வேளையில் புலிகளின் படைத்தொகுதிகள் கனகராயன்குளம் நோக்கி நகர்ந்துகொண்டிருந்தன.

மாங்குளத்திலிருந்து முன்னேறிய படைத்தொகுதி கொல்லர்புளியங்குளத்தில் அமைந்திருந்த உயர்பாதுகாப்பு வலயத்தைத் தாக்கியழித்து - அங்கிருந்து தொடர்ந்து முன்னேறியவாறு புற்குளம், மன்னகுளம் மினிமுகாங்களைத் தாக்கியழித்துக்கொண்டு கனகராயன்குளத்தை அடைந்தபோது கரிப்பட்டமுறிப்பில் இருந்து முன்னேறிய சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படை, மாலதி படை ஆகியவற்றைக்கொண்ட படைத்தொகுதி கனகராயன்குளம் உயர் பாதுகாப்பு வலயத்தைத் தாக்கி நிர்மூலமாக்கியிருந்தது. இரண்டு டிவிசன் தலைமையகங்களையும், சிறப்பு கொமாண்டோ பற்றாலியனையும், ஆட்டிலறி ஏவுதளங்களையும் கொண்டமைந்த அதியுயர் பாதுகாப்பு தளப்பிரதேசம் எமது கைகளில் வீழ்ந்தது. கரிப்பட்டமுறிப்பு, மாங்குளம், கொல்லர்புளியங்குளம் ஆகிய பிரதான தளங்கள் எதிரியின் கைகளிலிருந்து எமது கைகளுக்கு மாறிய பின்பு வன்னி நடவடிக்கையில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த கனகராயன்குளம் தளத்தைப்பாதுகாக்க எதிரியால் இயலவில்லை. இரு திசைகளிலிருந்து நகர்ந்த எமது படைத்தொகுதிகள் கனகராயன்குளத்தை மீட்டெடுத்தபோது அன்றைய நள்ளிரவு தாண்டி நேரம் ஒருமணி யாகியிருந்தது.



சிங்கள ஆமி: எனக்கு புதியபயிற்சி தாருங்கோ!
வெளிநாட்டு பயிற்சியாளர்: முதல் தந்த பயிற்சிக்கு என்ன நடந்தது?
சிங்கள ஆமி: ஓயாத அலைகள் அள்ளிக்கொண்டு போட்டுது!

மறுநாள் 6ம் திகதி பனங்காமத்திலிருந்து லெப். கேணல் முகுந்தனின் தலைமையில் முன்னேறிய எமது படைத்தொகுதியொன்று அத்திசையிலிருந்த முன்னரங்க காவலரண்களைத் தகர்த்தழித்து மூன்றுமுறிப்பு பிரதான தளத்தை முற்றுகைக்குட்படுத்தின. அத்தளம் மீதான சண்டைகளின் முடிவில் மூன்றுமுறிப்பு பிரதான தளம் எமது கைகளுக்கு மாறியது.

மூன்று முறிப்பில் இருந்து சிராட்டிக்குளம் வரை எதிரியின் தொடர் காவலரண்களை 4, 1, 2, 3, ஆகிய படையணிகள் முன்னேறி கைப்பற்றிச் சென்றன. அதேநேரம் குஞ்சுக்குளம் நோக்கி ஒரு படையணியும், பாலமோட்டை நோக்கி மறு படையணியும் முன்னேறி மினிமுகாங்களையும்,

→



www.eelamview.com

காவலரண்களையும் தாக்கியழித்தவாறு அப்பிரதேசங்களை மீட்டெடுத்தபோது, அப்பிரதேச மக்கள் போராளிகளைக் கண்டு உற்சாகமடைந்தனர். அன்றையதினம் தளபதி கேணல் தீபனின் தலைமையில் இயங்கிய இச்சமர்முனையின் நடவடிக்கைகள் இத்துடன் ஓய்வுக்கு வந்தன.

அதேநேரம் நைனாமடு நோக்கி முன்னேறியிருந்த எமது படைத்தொகுதி குளவிசுட்டானை மீட்டுக்கொண்டு புதிதாக இணைந்த படையணியுடன் சேர்ந்து நைனாமடு பிரதானதளம் மீதான தாக்குதலில் இறங்கியது. குளவிசுட்டானை இழந்துவிட்ட நிலையில் நைனாமடுவை இழப்பது புளியங்குளத்தைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்குச் சமம் எனக் கருதியதால் கடுமையான எதிர்ப்பை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், எமது நிலையில் நைனாமடுவை வெற்றிகொள்வது புளியங்குளத்தை வெற்றிகொள்வதற்கான ஆதாரபலத்தை ஈட்டித்தரும் என்பதால் எதிரியைவிட உறுதியான சண்டையில் ஈடுபட நேர்ந்தது. செறிவான பீரங்கித் தாக்குதலுடன் நெருங்கித் தாக்கிய புலிகள் நைனாமடு தளத்தை மதியம் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். அன்றையதினமே மதியாமடு உள்ளிட்ட பிரதேசங்களும் எம்மால் மீட்கப்பட்டிருந்தது. இரு சமர்முனைகளினதும் அடுத்த இலக்கு புளியங்குளம்.

நள்ளிரவு தாண்டிய அதிகாலை வேளை புளியங்குளம் நோக்கிய எமது படைநகர்வு ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும், புளியங்குளத்தை தக்கவைப்பதற்காக அவசர அவசரமாக சன்னாசிப்பரந்தனில் எதிரி பலங்கொண்ட தளப்பிரதேசத்தை அமைத்திருந்தான். புளியங்குளத்தை தக்கவைக்க விரும்பிய எதிரிக்கு இதுவே இறுதி நம்பிக்கையாக இருந்தது. அதை எமது அணிகள் அறிந்திருந்தன. புளியங்குளத்தை அடைவதற்கான எமது இறுதித்தடையை உடைக்கும் உளவுறுதியோடு எமதணிகள் முன்னேறின. தடுப்பு நிலைகளை அமைத்து சண்டைசெய்த எதிரியை தாக்கியழித்து சன்னாசிப்பரந்தனை அடைந்த எமது அணிகள் எதிரி நிலைகள் மீது தாக்குதலைத் தொடுத்தன. இத்தளத்தில் மிகக்கடுமையான சண்டை நடந்தது. எதிரியின் பீரங்கிச் சூட்டாதரவும் கடுமையாக இருந்தது. புளியங்குளத்தை தக்கவைப்பதற்காக 'எதிரியும்' அதை மீட்டெடுப்பதற்காக நாமும் செய்த சண்டையில் களம் அதிர்ந்தது. இறுதியில் தளம் எமது கைகளில் விடிகாலையில் வீழ்ந்தது.

அங்கிருந்து முன்னேறிய எமதணிகள் புளியங்குள தளப்பிரதேசத்தை ஊடறுத்து தாக்குதலில் ஈடுபட, ஏற்கெனவே சன்னாசிப்பரந்தனை இழந்துவிட்டதாலும் கனகராயன்குளத்தை அடுத்து தளப்பிரதேசம் எதுவும் எதிரியின் கைகளில் இல்லாததாலும் எதிரி பின்வாங்கி ஓடத்தொடங்கினான். இதேநேரத்தில் கனகராயன்குளத்திலிருந்து முன்னேறிய புலனாய்வுத்துறை தாக்குதல் படையணி, மாலதி படையணி, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி ஆகியவற்றின் படைத்தொகுதி இடையில் இருந்த மினிமுகாங்களை வெற்றிகொண்டு புளியங்குளத்தை வந்தடைந்தது. அப்போது காலை 8.40 ஆகியிருந்தது. இரு படைத்தொகுதிகளும் இணைந்து புளியங்குளத்தை அண்டிய நிலைகளைத் துடைத்தழித்து புளியங்குளத்தை மீட்டெடுத்தன.

கனகராயன் குளத்திலிருந்து முன்னேறிய படைத்தொகுதி தொடர்ந்து பனிக்கநீராவிவரை முன்னேறி இத்தளத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து, மேலும் தெற்கு நோக்கி முன்னேறி பன்றிக்கெய்த குளம்வரை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து தமது நிலைகளைப் பலப்படுத்தி வலுப்படுத்தி தற்காப்பில் ஈடுபட்டன.

இதேநாள் நெடுங்கேணிச் சமரின் மறுபகுதியில் ஒதியமலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த படைத்தொகுதி தற்காப்பில் ஈடுபட ஜெயந்தன் படையணி அதன் உதவியணிகளுடன் முன்னேறி சிலோன் தியேட்டர், கென்பாம், தனிக்கல், அளவெட்டிக்குளம், வசாவிளான்குளம், பப்பாசிக்குளம் ஆகிய இராணுவ நிலைகளை வெற்றிகொண்டன. தமிழீழத் தாயகத்தின் இதயப்பகுதியான மணலாற்றின் இப்பிரதேசங்கள் 15 வருடத்தின் பின் எம்மால் மீட்டெடுக்கப்பட்டன. அன்றைய சமர் அத்துடன் முடிவடைய அணிகள் தற்காப்பு வேலைகளில் ஈடுபட்டன.

ஓயாத அலைகள் -3 இன் முதற்கட்ட இலக்குகளை ஒவ்வொன்றாக வெற்றி கொண்டு புலிக்கொடி நாட்டிச்சென்ற தமிழர்சேனையின் படைத்தொகுதிகள் முதற்கட்ட இலக்கை நிறைவுசெய்து, அதன் பாதுகாப்பிற்காக மேலும் சில பிரதேசங்களில் முன்னேறி தமது தற்காப்பை வலுப்படுத்தின. பொதுவாக இதைத் தொடர்ந்த நாட்களில், பிடிக்கப்பட்ட பிரதேசங்களில் தற்காப்பை வலுப்படுத்துவதிலும், தாக்குதல் அணிகள் ஓய்வெடுத்துக்கொண்டு அடுத்தகட்ட தாக்குதலுக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடுவதிலும் எமது படை இயங்கிவந்தது. பிரத்தியேக படையணிகள் மீட்கப்பட்ட பிரதேசங்களில் சிதறியிருந்த எதிரிப் படைகளைத் தேடியழிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வந்தன.

சமர் நிலைமை இப்படியிருக்க ஸ்ரீலங் காப்பாட்டத்தரப்பு நடவடிக்கையில் ஈடுபடும் தளபதிகளை மாற்றம் செய்தும், புதிய படைவீரர்களை வரவழைத்தும் ஓயாத அலைகள் -3 நடவடிக்கையின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த அவசர நடவடிக்கையில் ஈடுபட்டது. அதேநேரம் இழந்த நிலப்பரப்பை மீண்டும் பிடிப்பதற்கும் எதிரியின் படைத்தலைமை கூடி ஆராய்ந்தது. ஆனால் தமிழரின் படைத்தலைமையான எமது தலைவர் தளபதிகளுக்கு அடுத்தகட்ட தாக்குதல் நடவடிக்கைகளை விளக்கி தாக்குதலுக்கான தயாரிப்புகளில் ஈடுபடுமாறு உத்தரவிட்டார்.

## 18ம் திகதி இரண்டாவது இலக்கு நோக்கி

ஓயாத அலைகள்-3 இன் இரண்டாவது இலக்கு, போர்முழக்கம் (ரணகோஷ) என்று வந்த படைகளுக்கு புலிகளின் போர்க்குணத்தை புரியவைப்பதற்கான நடவடிக்கையின் தொடக்க நாளாக 18ம் திகதி அமைந்தது: 'ரணகோஷ' வினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் சில ஏற்கனவே விடுவிக்கப்பட்டபோதிலும், 'ரணகோஷ' வின் பிரதான இலக்காக இருந்த மன்னார்-பூநகரி பாதையைக் கைப்பற்றுவதற்கான முயற்சியில் முன்னேறியிருந்த படைகளுக்கு, உயிரை விடுவதா? ஓடித்தப்புவதா? என்ற இரண்டிலொரு முடிவை எடுக்க வற்புறுத்தும் சண்டையை சமரின் தொடர்ச்சியாக புலிகள் மன்னாரில் தொடங்கினர்.



ஜயசிக்குறுய்க்கு முன்

தலைவரிடமிருந்து விளங்கப்பட்ட திட்டத்திற்கேற்ப படைத்தொகுதிகள் தாக்குதலில் இறங்கின. நந்திரோபாயச் செயற்பாட்டிற்கான தாக்குதல் அணிகளும் களம் குதித்தன. 17ம் திகதி இருட்பொழுதில் தளபதி லெப். கேணல் ராபட்டின தலைமையில் ஜெயந்தன் படையணியும், எல்லைப்படை சிறப்புத் தாக்குதல் அணியும் இணைந்த ஒரு படைத்தொகுதி பெரியமடுவிலிருந்து நகரத் தொடங்கியது. இதேநேரம் பள்ளமடுவிலிருந்து தளபதி லெப் கேணல் லக்ஸ்மனின் தலைமையில் மாலதி படையணி, மன்னார் படையணி, எல்லைப்படை சிறப்பு தாக்குதல் அணிப்பிரிவு ஆகியவை அடங்கிய ஒரு படைத்தொகுதி நகர்ந்தது.

முன்னேறிய படைத்தொகுதியினருக்கு நள்ளிரவு கடந்து ஒருமணிக்கு தாக்குதலைத் தொடங்குவதற்கான கட்டளை கிடைத்தது. பெரியமடுவிலிருந்து நகர்ந்து காத்திருந்த படைத்தொகுதி எதிரியின் முன்னரங்க காவலரண்களைத் தகர்த்தழித்து அதன் தொடர்புகளைப் பிளந்து முன்னேறியது. வலம், இடமாக இருந்த தொடர் காவலரண்களை இரு அணிகள் தகர்த்தழித்துச் செல்ல, பாலம்பிட்டி நோக்கி முன்னேறியது பிரதான படைத்தொகுதி. எதிரியின் மினிமுகாங்களைத் தகர்த்தழித்தனர் புலிகள். தொடர்ந்து முன்னேறிய படைத்தொகுதி பாலம்பிட்டி - தட்சனாமருதமடு பிரதான படைத்தளத்தை வந்தடைந்தது. பாலம்பிட்டி, தட்சனாமருதமடுவை உள்ளடக்கியதாக அமைந்திருந்த இப்பிரதான படைத்தளம் 21-4 பிரிகேட் தலைமையகத்தை உள்ளடக்கியதாகவும், மேலதிக முறியடிப்புத் தாக்குதலணிகளைக் கொண்டதாகவும், மோட்டார் பீரங்கித் தளங்களைக் கொண்டதாகவும், அளவில் சற்றுப் பெரிதான வலுவுள்ள படைத்தளமாக இருந்தது.

தளபதி [redacted] கேணல் ஜெயத்திசுக்கு நியமிக்கப்பட்டிருந்த இச்சமர்முனை, 17ம் திகதி இருட்பொழுதில் நகர்வை ஆரம்பித்து நள்ளிரவு தாண்டி 18ம் திகதி தொடக்கப் பொழுதினில் தொடங்கப்பட வேண்டும் என்று தலைவர், சமரின் ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் கருணாவிற்கு உத்தரவிட்டிருந்தார். புலிகளின் ஓயாத அலைகள்-3 இன் தொடர்ச்சியை எதிர்பார்த்து 'ரணகோஷ' படைகள் காத்திருந்தன. புலிகளின் ஓயாத அலைகள்-3 நடவடிக்கைக்கு இன்னமும் முகங்கொடுக்காத அல்லது, அதிகம் சேதத்திற்குள்ளாகாத 21வது டிவிசன் இப்பகுதிகளில் நிலைகொண்டிருந்தது; எனவே, சண்டை பற்றிய முன்னறிவிப்போடும்,



ஓயாத அலைகள் -03 பின்

அதை எதிர்கொள்வதற்கான படைவலுவோடும், அதற்கான தயார்ப்படுத்தல்களோடும் சிங்களப் படைகள் காத்திருந்தன என்றே சொல்ல வேண்டும். இருந்தும், தலைவர் வழிநடத்திய ஓயாத அலைகள்-3, அவர்களின் முன்னேற்பாடுகளை முட்டிமோதி முன்னேறியபோது சிங்களப் படைகள் தமது உறுதிக்குலைவை மூட்டிக்கொண்டன.

விடிகாலையில் வலுவான இப்படைத்தளத்தின் மீது கிட்டு பீரங்கிப் படையின் சூட்டாதரவுடன் ஒரு கடுமையான →



www.eelamview.com




சண்டையைத் தொடங்கியது எமது படைத்தொகுதி. நெருங்கிய சண்டைகளில் இராணுவத்தை எதிர்கொண்டு சிங்களப் படைகளைத் தோற்கடிக்கத் தொடங்கினர் புலிகள். படைத்தளம் மெல்ல மெல்ல எமது கைகளில் விழத்தொடங்கியது. திக்குக்கொன்றாய் பிரிந்த எமது தாக்குதல் அணிகள் படைத்தளத்தில் எதிரியைத் துடைத்தழிக்கத் தொடங்கியது. தளத்தின் ஒரு பகுதியை எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த எமதணிகள் புதிய தற்காப்பு. தாக்குதல் அணிகளை வரவழைத்து பிடித்த பகுதியில் தற்காப்பில் ஈடுபட, புதிதாக வரவழைக்கப்பட்ட அன்பரசி படையணியையும் இணைத்துக்கொண்டு கிரிசுட்டான் நோக்கியும், எஞ்சியிருந்த தட்சனாமருதமடு தளத்தைத் துடைத்தழித்துக்கொண்டு மடுவை நோக்கியும் இரு பிரிவுகளாக முன்னேறத் தொடங்கியது அப்படைத்தொகுதி. அன்றைய பொழுதிற்கிடையில் கிரிசுட்டான்வரையும், மறுதிசையில் தட்சனாமருதமடு கடந்தும் எதிரி நிலைகளைத் தோற்கடித்து நிலைகொண்டன. பிடிக்கப்பட்ட கிரிசுட்டானிலிருந்து லெப். கேணல் ஜெயத்தின் தலைமையில் ஜெயந்தன் படையணி, இம்ரான்-பாண்டியன் படையணிகளைக்கொண்ட மூன்றாவது படைத்தொகுதி முள்ளிக்குளம் நோக்கி முன்னேறத்தொடங்கியது. எதிரியின் மினிமுகாங்களை ஒவ்வொன்றாக வெற்றிகொண்டு முள்ளிக்குளம் வான் படையினரின் பிரதான படைத்தளத்தை நெருங்கியது அப்படைத்தொகுதி. வெவ்வேறு திசைகளில் பாதையமைத்து படைத்தளத்தினுள் புகுந்த புலிகள், தமது தாக்குதலால் எதிரியைத் திணறடித்தனர். சண்டைக்காகக் காத்திருந்த படையினரை செயலில் இறங்கவிடாது. அப்படையணியின் தாக்குதல் வேகம் இருந்தது. அன்றைய மாலைப்பொழுது இருளும் வேளையில் படைத்தளம் முற்றாக எமது கைகளில் வீழ்ந்தது. அதனைத் தொடர்ந்து அப்படைத்தொகுதி இரணைஇலுப்பங்குளம் நோக்கி சில கிலோமீற்றர் தூரம் முன்னேறி நிலையெடுத்துக்கொண்டது.

மறுபகுதியில் நள்ளிரவு கடந்த ஒருமணிக்கு பள்ளமடுவிலிருந்து தாக்குதலைத் தொடங்கிய மற்றைய படைத்தொகுதி எதிரியரண்களைத் தகர்த்தழித்து முன்னேறியிருந்தது. வலம், இடமாகப்பிரிந்த இரு அணிகளால் எதிரிக் காவலரண்கள் தகர்த்தழிக்கப்பட பாப்பாமோட்டை பிரதான தளம் நோக்கி அப்படைத்தொகுதி முன்னேற வேண்டியிருந்தது. இந்த முன்னேற்றத்தின்போதும், பள்ளமடுவிலிருந்து பெரியமடு நோக்கிய காவலரண் தொடரிலும், அதன் பிற்பகுதியிலமைந்த மினிமுகாங்களிலும் இப்படைத்தொகுதி கடுமையான சண்டைகளில் ஈடுபட நேர்ந்தது. இவ்விடங்களை எதிரி பிடிப்பதற்கு கடுமையான உயிர்ப்பலிகளை முன்னர் கொடுத்திருந்தான். அதனை இலகுவில் இழந்துவிட எதிரி விரும்பவில்லை. எனவே எதிரியின் மனவுறுதியை உடைக்கக்கூடியளவிற்கு எமது தாக்குதலின் வேகமும், விவேகமும், உக்கிரமும் அங்கு தேவைப்பட்டது. வெற்றிக்கு வேண்டிய அப்பண்புகளுடன் போரிட்டது முன்னேறிய எமது படைத்தொகுதி. புலிவீரத்திற்முன் வீழ்ந்தது அப்படைத்தளம். இறுதியில் அப்பிரதேசம் முழுவதும் எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. பெரியமடுவிலிருந்து முன்னேறிய அணிகளுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொண்ட அதேநேரம் பாப்பாமோட்டை பிரதான தளத்தை நெருங்கியிருந்தன அப்படைத்தொகுதியின் மற்றைய தாக்குதல் அணிகள். இதன் பிறிதொரு தாக்குதலணி ஆண்டான்குளம் நோக்கி தனது முன்னேற்றத்தைத் தொடங்கியது.

மறுநாள் இப்படைத்தொகுதி பாப்பாமோட்டை பிரதான படைத்தளம் மீதான தாக்குதலில் ஈடுபட்டது. தளத்தை முற்றுகையிட்டு, அன்றைய நாளில் முற்றுகையை மேலும் இறுக்கியது அப்படைத்தொகுதி. தட்சனாமருதமடு, கிரிசுட்டான் பிரதேசங்கள் மீட்டெடுக்கப்பட்டதால் இதேநாளான 19ம் திகதி மடு புனிததேவாலயம் உள்ளடங்கிய பகுதிகள் அனைத்தும் விடுவிக்கப்பட்டிருந்தன.

தட்சனாமருதமடுப் பிரதேசத்தை மீட்ட அப்படைத்தொகுதி அங்கிருந்து ஆண்டான்குளம் நோக்கி தமது முன்னேற்றத்தைத் தொடங்கியது. மிக வேகமான முன்னேற்றத்தை அப்படைத்தொகுதி சாதித்ததன் மூலம் எதிரிகளைத் திகைப்புக்குள்ளாக்கி, தன் முன்னேற்றத்தின் வெற்றியை நிச்சயித்துக்கொண்டது. அன்றைய மாலைப்பொழுது இருண்ட வேளையில் பள்ளமடுவிலிருந்து ஆண்டான்குளத்திற்கு முன்னேறிவந்த மற்றைய படைத்தொகுதியின் அணிகளுடன் இவ்வணி இணைந்தபோது ஆண்டான்குளப் பிரதேசம் முழுமையாக எம்மால் மீட்கப்பட்டிருந்தது.



பாப்பாமோட்டை பிரதான தளத்தை தொடர் தாக்குதலுக்குட்படுத்திய லெப். கேணல் லக்ஸ்மனின் படைத்தொகுதி 20ம் திகதி அதிகாலையில் தீர்மானகரமான சண்டைகளில் இறங்கியது. பாப்பாமோட்டையின் இழப்பு தள்ளாடி இராணுவத் தளத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலைத் தரும் என்பதை எதிரிப்படைத் தலைமை உணர்ந்திருந்தது. இரு தளத்திற்குமிடையில் எமது அதிவேக முன்னேற்றத்தை தடுக்கக்கூடியவாறான பிரதான தளங்கள் எதுவும் அமைக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, பாப்பாமோட்டைத் தளப்பிரதேசத்தை தக்கவைக்க வேண்டிய தேவை சிங்களப் படைகளிற்கு அவசியமாயிற்று. இது எம்மால் விளங்கப்பட்டேயிருந்தது. எனவே உதவியணிகளை இணைத்துக்கொண்டு வலுவான சண்டையைத் தொடங்கிய அப்படைத் தொகுதி முற்றுகைக்குட்பட்டிருந்த எதிரியின் உயர் பாதுகாப்பு வலயமான அத்தளத்தை ஊடறுத்து தாக்கத் தொடங்கியது: அன்றைய நாளின் தொடர் சண்டையால் பகல் 12 00 மணிக்கு அப்படைத்தளம் எமது கைகளில் வீழ்ந்தது. அதன் வீழ்ச்சியோடு பாப்பாமோட்டை பிரதேசத்தை மீட்டெடுத்துக்கொண்டனர் புலிகள்.

இதேநாள் ஆண்டான்குளத்தில் இணைந்திருந்த இரு படைத்தொகுதிகளின் அணிகளும் அப்பிரதேசத்தில் தற்காப்பு அணிகளை நிலைப்படுத்திவிட்டு இருவேறு திசைகளில் முன்னேறத் தொடங்கின. தட்சனாமருதமடுவிலிருந்து முன்னேறிய படைத்தொகுதி மாந்தையை நோக்கியும், பள்ளமடுவிலிருந்து முன்னேறிய படைத்தொகுதியின் பிரிவு வட்டக்கண்டல், உயிலங்குளம் நோக்கியும் முன்னேறின. இரு படைதொகுதிகளும் அன்றைய மாலைப் பொழுதிற்குள் மாந்தையையும், வட்டககண்டலையும் மீட்டெடுத்து எதிரிகளைத் தோற்கடித்திருந்தன. அதே நேரம் உயிலங்குளம் நோக்கியும் சில கிலோமீற்றர் தூரம் முன்னேறி நிலையெடுத்துக்கொண்டது அவ்வணி: அன்றைய முன்னேற்றத்தின் முடிவோடு தமிழீழ தேசிய நாளான மாவீரர் நாளை சிறப்பிப்பதற்காக இச்சமர் நடவடிக்கை தற்காலிக ஓய்வுக்கு வந்தது. மறுநாள் மீட்டெடுக்கப்பட்ட பிரதேசங்களில் தற்காப்பு நிலைகளை அமைப்பதிலும், வலுப்படுத்துவதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கிராமபபடை உள்ளிட்ட புலியணிகள் ஈடுபட, தொடர்ந்த நாட்களில் தற்காப்புப் போர்முறையில் தேர்ச்சிபெற்ற அணிகள வரவழைக்கப்பட்டு மீட்கப்பட்ட பிரதேசங்களில் பாதுகாப்பை வலுப்படுத்தி அதனை உறுதிப்படுத்திக்கொண்டன.

மாவீரர் நினைவு மாதத்தின் முதல் நாள் தொடங்கப்பட்ட ஓயாத அலைகள் -3 நடவடிக்கை மாவீரர் வீரத்தின் தொடக்கத்தில் தற்காலிக ஓய்வுக்கு வந்தபோது சமர்க்களத்தின் மேற்கு முனையில் தளளாடியை அண்டியும், கிழக்குச் சமர்முனையில் மணிலண்டிமலையை நெருங்கியும், தெற்கு முனையில் ஓமந்தையை அண்மித்தும் புலிகளின் படைத்தொகுகள் நிலையெடுத்துக்கொண்டன. சிங்களதேசத்தின் படைகள் மமதையோடு ஆக்கிரமித்திருந்த எமது நிலங்களில் வைத்தே தோற்கடிக்கப்பட்டு தொடர் தோல்விக்காக காத்திருக்கவேண்டிய கட்டாயத்தையும் ஏற்படுத்தியிருந்தது ஓயாத அலைகள் -3 தமிழர்களை ஒழிப்பதற்காக வளர்க்கப்பட்ட சிங்கள இராணுவம் வெற்றிப்பூரிப்போடு தன்பொன் விழாவைக் கொண்டாடியிருந்தபோது தமிழர்களின் போர்ப்பலம் என்ன என்பதை சிங்கள தேசத்திற்கு புரியவைத்துள்ளது தமிழர்சேனை. தமிழர்களை இழிநிலைப்படுத்தி திமிர்த்தனமான அறிக்கைகளை விடுத்த இனவெறியாளர்கள் இப்போது மௌனத்தின் அழத்தில் தம்மைத் தாமே அறைந்துகொண்டுள்ளார்கள்.

''அமைதியான அடிமை வாழ்வை விடவும் ஆபத்தான சுதந்திர வாழ்வு மேலானது'' என்ற தலைவரின் அறைகூவலுக்கு அணிதிரண்ட மக்கள்சேனையின் புரட்சிப் பிரவாகம் இது ஆர்ப்பரித்தெழும் விடுதலை வேட்கையின இப்புரட்சிப் பிரவாகம் தன் எதிர் நிற்கும் எந்தத் தடையையும் வீரத்தின் எரிதணலால் சுட்டெரித்து சுதந்திர தேசத்தை சொந்தமாக்கும்வரை ஓய்ந்து போகாது. இதை சிங்களதேசம் புரிந்துகொள்ளாதவரை தன் சாவுகளையே தனக்கு சொந்தமாக்கிக்கொள்ள முடியும்.

O



www.eelamview.com

# இருள்சூழ்ந்த நகரத்தின் விடுதலைக்கதை

சுதந்திரம்! அதை விரும்பாதார் இவ்வுலகில் யார்தான் இருக்கிறார்கள். அதில் ஒரு நிகரில்லா உன்னதம் இருப்பதால்தான், உலகில் அதன் பெறுமதிக்கு நிகராக எதுவுமே இருப்பதில்லை. பசி, பஞ்சம், பட்டினி என்பவற்றுக்கு அப்பால், சாவுகள், அழிவுகளுக்கும் அப்பால் நம்பிக்கையுடன் தொடரும் போராட்டங்கள்தான் ஒடுக்கப்படும் இனத்திற்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்கிறது. வாழ்வதற்கான எந்த அனுகூலங்களும் மறுக்கப்பட்ட நிலையிலும் அடிமை வாழ்வில் கிடைக்கும் கீழ்த்தரமான சுகபோகங்களைப் பற்றிப்பிடித்து ஏதோ வாழ்ந்துவிட்டு போவோம் என்று எண்ணாது விடுதலைக்காக விலைகொடுத்து போராடத் துணியும் மனிதர்களுக்கே இவ்வுலகில் சுதந்திரம் சொந்தமாக்கப்படுகின்றது.

அசுர பலத்தோடு வந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியாது மரணப் புயலின் மையத்தில் நின்று 900 நாள் முற்றுகையில் வாழ்வையும், உயிரையும் விலையாகக் கொடுத்து, வந்த எதிரிகளுக்கு மரணத்தைப் பரிசளித்த மகத்தான மனிதர்கள் 'லெனின் கிராட்' மக்கள். உலக வரலாற்றில் ஒப்பற்ற சுமைகளைத் தாங்கி, தியாகங்கள் புரிந்து, அடிபணியாது தமது இறைமையை நிலைநாட்டிய அந்த மக்களின் விடுதலை உணர்வு ஒடுக்கப்படும் மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

1941 யூன் மாதம். லெனின் கிராட் நகரம் இனவெறிகொண்ட கிட்லரின் படைகளின் இறுக்கமான முற்றுகைக்குள் சிக்கியது. உலகை பேரழிவுக்குள்ளாக்கிய இரண்டாம் உலகப் பெரும் யுத்தத்தில் சோவியத் யூனியனை வீழ்த்துவதற்காக கிட்லர் எடுத்த 'ஒபரேசன் பார்பரோசா' வின் ஒரு சமர்முனை லெனின் கிராட் நகர் மீது திறக்கப்பட்டது. எல்லா வகையிலுமே மிகக் கொடூரமான முற்றுகை அது. முப்பது இலட்சம் மக்கள் அந்த முற்றுகைக்குள் அகப்பட்டார்கள். தம்மிலும் பலங்கொண்ட எதிரியை இறுதிவரை எதிர்கொள்வதென லெனின்கிராட்டுக்கள் உறுதி கொண்டார்கள்.

1941ம் ஆண்டு யூன் 21ம் நாள், ஒப்பரேசன் பார்பரோசாவின் தொடக்க நாள். லெனின்கிராட் முனையில் ஜேர்மன் படைகள் மின்னல் வேகத்தில் முன்னேறத் தொடங்கின. ஜேர்மனியரின் படையெடுப்பை அவ்வளவு விரைவிலேயே எதிர்பார்க்காத ரஷ்யப் படைகள் பேரழிவைச் சந்தித்துக்கொண்டிருந்தன. முதல் நாள் சமரிலேயே ரஷ்ய வான்படை தனது ஆயிரத்து இருநூறு வானூர்திகளை இழந்தது. சுமார் இரண்டு வாரங்களிலேயே 300 மைல்கள் கடந்து, ஜேர்மன் படைகள் முன்னேறிக்கொண்டிருந்தன. ரஷ்யப் படைகளோ, தமது ஆளணியில் மிகப்பெரும் அழிவுகளைச் சந்தித்திருந்தது. இருபத்தெட்டு 'டிவிசன்' களைச் சேர்ந்த நான்கு இலட்சத்து இருபதினாயிரம் ரஷ்யப் படையினர் அழிந்து போயினர். மேலும் எழுபது டிவிசன் படையணிகள் தமது அரைவாசி ஆளணியை இழந்திருந்தன.

ரஷ்யர்களின் ஆட்டிலறி படையணிகள் தமது பலத்தில் அரைவாசியை இழந்த இந்நிலையில் லெனின்கிராட் நகரின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியது. அது விரைவிலேயே ஜேர்மனியரின் காலடியில் அடிபணிந்துவிடுமென்றே உலகம் நம்பியது.

கிட்லர் தனது படைகளின் முன்னேற்றத்தில் பெரும் நம்பிக்கை வைத்தான். இன்றைய சிங்களத் தலைமைகள் தமது இராணுவ பலத்தில் நம்பிக்கைகொண்டு காலக்கெடுக்கள் விதிப்பது போலவே கிட்லரும் சூளுரைத்தான். எண்ணி நான்கே நான்கு வாரத்தில் லெனின்கிராட்டை தனது காலடியின் கீழ் கொண்டுவருவதாக சபதம் செய்தான். ''யூலை-21 ற்கு முன்னரேயே லெனின்கிராட் மாளிகைச் சதுக்கத்தில் வெற்றிவிழா கொண்டாடுவேன்'' என பிரகடனம் செய்தான்

இவையெல்லாம் லெனின்கிராட் மக்களை நம்பிக்கையிழக்கச் செய்துவிடவில்லை. அவர்கள் நம்பிக்கை கொள்ளக்கூடியதாய் அங்கு எதுவுமே நடக்காதபோதும், தமது கைகளை மட்டுமே அவர்கள் நம்பினார்கள். நம்பிக்கையின் முன் எல்லாமே தூசு என்பதில் அவர்களுக்கு அசையாத நம்பிக்கையிருந்தது. ''உங்களது நகரைக்காக்க லெனின்கிராட் மக்களே அணிதிரளுங்கள்'' என்ற கோரிக்கையை உடனடியாகவே அந்த மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஒருவாரத்தில் மட்டுமே இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் போருக்குப் புறப்பட்டார்கள். அனைத்து மக்களையும் படையணிகளாக்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

''இதுவரை சமாதானத்திற்கான வேலைகள் மட்டுமே எனக்கு தெரிந்தது. இப்போதிலிருந்து ஆயுதமேந்துவதற்கு நான் தயாராகிவிட்டேன். சண்டையிடுவதால் மாத்திரமே நாங்கள் அழிவிலிருந்து மனித இனத்தைக் காப்பாற்ற முடியும்'' எனக் கூறிவிட்டுப் போருக்காகப் புறப்பட்டுப்போனார் ஒரு பாடலாசிரியர். இவ்வாறு மக்கள் எல்லோருமே போர்க்களத்திலே ஓய்வுறக்கமின்றி அல்லும்பகலுமாய் உழைத்தார்கள். போர்க்களங்களில் இருந்து தம்மால் மீண்டு உயிருடன் திரும்ப முடிகிறதோ, இல்லையோ தங்களுடைய நகருக்கு மீண்டும் விடியலைக் கொண்டுவந்துவிடவேண்டும் என்றே அவர்கள் விரும்பினார்கள்.

போருக்கென புறப்பட்டவர்களுக்கு இராணுவப் பயிற்சிகளை வழங்குவதற்குக்கூட ஜேர்மனியர்கள் அவகாசம் கொடுக்கவில்லை. அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களைக்கூட உடனடியாக வழங்கமுடியவில்லை. பயிற்சிகள் இன்றியே போர்க்களங்களிற்கு அவர்கள் புறப்பட்டார்கள். கையில் அகப்பட்ட கோடாரிகள், மண்வெட்டிகள், கத்திகள் அலவாங்குகள் என்பவற்றையும் தங்களுடைய ஆயுதங்களாக அவர்கள் எடுத்துச் சென்றார்கள். போர்க்களங்களிலே அவர்கள் காட்டிய வீரமும், தியாகமும் ஜேர்மனியர்களுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. எதிரியின் முக்கியத்துவம் வாய்ந்த நகர்வுகளையெல்லாம் பல சமயங்களில் இவர்கள் தனித்து நின்றே வெற்றிகொண்டார்கள்.

சோவியத் படைகள் ஆரம்பத்தில் அடைந்த பேரழிவுகளை வைத்து, ஜேர்மனியர் கட்டிய வெற்றி பற்றிய கற்பனைகளெல்லாம் லெனின்கிராட் மக்களின் எழுச்சியால் சுக்குநூறாகியது. தொடர்ச்சியான சண்டைகளில் ஏற்பட்ட தோல்வியின் இழப்புக்களால் லெனின்கிராட் நோக்கிய தமது முன்னேற்றப்பாதையை தமது ''சாவுக்கான பாதை'' என வர்ணித்து மனமுடைந்து போனார்கள் கிட்லரின் தளபதிகள். ''ரஷ்யர்களின் பெரும் படைபற்றி நாம் குறைவாக மதிப்பீடு செய்துவிட்டோம்'' என்றான் கிட்லரின் படைக்கல முதன்மை அதிகாரியொருவன்.

இப்படியே தனது படைவீரர்களும், தளபதிகளும் மனமுடைவதை நன்கு அவதானித்த கிட்லர், எழுச்சிகொண்ட லெனின்கிராட் மக்களை முற்றுகைக்குள்ளாக்கி, தனிமைப்படுத்துவதன் மூலம் அவர்களை அடிமைப்படுத்துவதற்கென திட்டங்களைத் தீட்டினான். லெனின்கிராட் நகருக்கும், சோவியத்யூனியனின் ஏனைய பகுதிகளுக்கும் தரைத்தொடர்பாக இருந்த இரண்டு பாதைகள் 1941 செப்ரெம்பர் எட்டாம் நாள் ஜேர்மன் படைகளிடம் வீழ்ச்சி கண்டது. முற்றுகைக்குள்ளான லெனின்கிராட் மீது மேலும் தாக்குதலை தீவிரப்படுத்தி அந்த மக்களை விரைவிலேயே சரணடைய வைத்துவிடலாம் என்று கிட்லர் சந்தேகத்திற்கிடமின்றி நம்பினான். லெனின்கிராட் மக்கள் என்ன செய்யப்போகிறார்களோ என்று உலகம் கண்ணீர் சிந்தியது. எல்லோருடைய கணிப்பீட்டின்படியும், லெனின்கிராட் மக்களுக்கு சரணடைவதைத் தவிர வேறு வழியேதும் இல்லையென்றே நம்பப்பட்டது. ஆனாலும், லெனின்கிராட் மக்கள் தொடர்ந்தும் போரிட்டார்கள். என்றோ ஒருநாள் அந்த முற்றுகையை உடைத்து புதியவழியமைப்போம் என்ற நம்பிக்கை அவர்களுக்குள் இருந்தது.

தமது நகருக்குள் எதிரிகள் உட்புகுந்துவிடுவார்களானால், தாம் வியர்வை சிந்தி உருவாக்கிய எதையுமே எதிரி அனுபவித்துவிடக்கூடாது என்பதில் லெனின்கிராட் மக்கள் உறுதியாக இருந்தார்கள். தமது வீடுகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், பூங்காக்கள், வீதிகள் எல்லாமே எந்த நிமிடமும் அழிக்கப்படக்கூடிய நிலையில் வெடிகுண்டுகளைப் பொருத்தி வைத்திருந்தார்கள்.

முற்றுகை லெனின்கிராட் மக்களை வாட்டத் தொடங்கியது. பட்டினியால் நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு இறந்தார்கள். பெரிய உணவுக் களஞ்சியங்கள் கூட ஜேர்மனியத் தாக்குதல்களால் அழிந்துபோயிருந்தன. எஞ்சியிருந்த உணவுப்பொருட்களில் மிகச்சிறிய அளவை தமக்குள் பங்கிடு செய்துகொண்டு ஏனையவற்றை போர்க்களங்களில் கடுமையாக உழைப்பவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் அனுப்பிவைத்தார்கள். லெனின்கிராட்டில் இருந்த நாய்கள், காகங்கள், எலிகள் என்பன கூட உணவில்லாததால் அங்கிருந்து வெளியேறி ஜேர்மன் படைகள் நிலைகொண்டிருந்த பகுதிகளுக்குச் சென்றன. மக்களோ பசிக்கொடுமையால் கையில் கிடைத்தவைகளையெல்லாம் உண்ணத் தொடங்கினார்கள். ஜேர்மனியர்களால் அழிக்கப்பட்ட களஞ்சியம் ஒன்றில் தொன்கணக்கான சீனி நிலத்தோடு அழிந்து போயிருந்தது. பல மாதங்களின் பின் அந்த சீனி கலந்த மண் வெட்டியெடுக்கப்பட்டு அங்கு விற்பனை செய்யப்பட்டது. சாவின் மையத்தில் நின்ற இத்தகைய நிலையிலும் லெனின்கிராட் மக்கள் அடிபணிய மறுத்தனர். இந்த இறுமாப்பே அவர்களைப் பின்னர் மனிதர்களாக வாழவைத்தது; உலகத்தை அவர்கள் பற்றிப் பேசவைத்தது.

உணவுக்கு மாற்றீடாக உண்ணக்கூடியவைகளையெல்லாம் கண்டுபிடித்து பசி தீர்த்துக்கொண்டு தமது இறைமையைக் காக்க அவர்கள் போரிட்டார்கள் போர்க்களம் தவிர்ந்த இடங்களில் எல்லா மக்களுமாக உற்பத்தியில் இறங்கினார்கள். லாபம் என்பதற்கு அப்பால் எல்லாமே போரை வென்றெடுப்பதற்காகச் செய்யப்பட்டது. குளிரால் பனிக்கட்டியாக உறைந்திருந்த 'லடோகா' என்ற நீளமான ஏரியூடாக தமதுநாட்டினூடான தொடர்புகளை ஏற்படுத்தினார்கள் லெனின்கிராட்டுக்கள். அதுமட்டுமே அவர்களுக்குரிய ஒரேயொருதொடர்புப் பாதையாக இருந்தது. அதனால்தான் அந்தப்பாதையை அவர்கள் ''வாழ்விற்கான பாதை'' என்று அழைத்துக்கொண்டார்கள். அதனூடாக மிகச் சொற்பமான உணவுப் பொருட்களையே அவர்களால் கொண்டுவர முடிந்தது. அதனூடாக பயணம் செய்த வேளைகளில் குளிரால் உறைந்து இறந்துபோனவர்கள் பலர். ஜேர்மனியரின் பீரங்கிகளும், விமானங்களும் முழுமூச்சுடன் செயற்பட்டு அந்தப் பாதையை தடைசெய்துவிட முயன்றபோதும் வாழ்விற்கான பயணம் தொடர்ந்தது. அது வெறுமனே உயிர் வாழ்தல் என்பதற்கப்பால் போரை வெற்றிகொள்வதற்காய் இருந்தது.

''வெற்றி ஒரு சிறந்த நாளைக் கொண்டு வரும்'' என்ற நம்பிக்கையில் அந்த வெற்றிக்காக லெனின்கிராட் காத்திருந்தது. அதற்காக உழைத்தது. இயலாத, நோயுள்ள நிலையில் இருந்த மக்கள் லெனின்கிராட்டிலிருந்து 'லடோகா' ஏரியூடாக அப்புறப்படுத்தப்பட்டார்கள். போர்க்களங்களிற்கு இலட்சக்கணக்கில் திரண்டு வந்த மக்களும், உற்பத்தியில் ஈடுபட்டு லெனின்கிராட்டை முற்றுகைக்குள் வாழ உதவிய உழைப்பாளர்களும், ரஷ்யப் படைகளின் வலிந்த தாக்குதலுக்கான தயார்ப்படுத்தலுக்கு உதவினார்கள். புதிதாக அணிதிரண்ட மக்கள் படையணிகளாலே முன்னணிப் பகுதிகள் காவல்காக்கப்பட்டன. லெனின்கிராட் மக்களின் கைகளில், நகரைக் காவல்காக்கும் பொறுப்பை ஒப்படைத்த முன்னணி இராணுவப் படைகள், தமது மண்ணில் காலடி வைத்திருக்கும் ஜேர்மன் படைகளைத் துவம்சம் செய்து தமது நகரை மீட்டெடுப்பதற்காக கடுமையான பயிற்சிகளிலும், தயார்ப்படுத்தலிலும் ஈடுபட்டன. இறுதியில், அந்த மக்கள் தமது உழைப்பின் அறுவடையைப் பெறத்தொடங்கினார்கள். பெரும் ஆட்பலத்தைப் பெற்றிருந்த ரஷ்யப் படைகளுக்கு இப்போது போதிய ஆயுதங்களும் வந்து சேர்ந்தன. முற்றுகையின் சரியாக 506ம் நாள் லெனின்கிராட்டுக்குரிய தரைப்பாதைகளில் ஒன்றான 'சிலிஸ்பேர்' ரஷ்யப்படைகளிடம் வீழ்ந்தது அப்போது லெனின்கிராட்டில் ஒலித்த கார்களின் 'கோண்' ஒலிகளும், மக்களின் இசைநிகழ்ச்சிகளும், கூக்குரலும், மகிழ்ச்சி ஆரவாரங்களும் ஜேர்மன் படைகளை எரிச்சலடைய வைத்தது.

அன்றிலிருந்து படிப்படியாக வெற்றிகளைப் பெற்று உறுதியாக முன்னேறினார்கள் லெனின்கிராட் மக்கள். முற்றுகையின் 880ம் நாள் ஜேர்மன் படைகள் முற்றுமுழுதாகவே அவர்களால் வெற்றிகொள்ளப்பட்டது. அந்த மக்களின் உறுதி, இறுதியில் வெற்றிபெற்றது. பஞ்சமும், பட்டினியும், விடுதலைக்காக அவர்கள் அர்ப்பணித்த வாழ்வும், இறுதியில் அவர்களின் இறைமையைக் காப்பாற்றியது. மின்னலெனப் புறப்பட்ட ஜேர்மன் படைகளை தமது மனவுறுதியால் தடுத்து நிறுத்திய மக்கள், தமது சண்டைப் படைகளுக்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுத்து இறுதி வெற்றிக்கு வழிகோலினார்கள். அந்த மக்களின் அசையாத உறுதி, கிட்லரின் ஆக்கிரமிப்புப் படைகளை ரஷ்யாவின் எல்லைக்கோட்டோடு மட்டும் விட்டுவிடாது ஜேர்மனியரின் 'பேர்லின்' சுவர்வரை விரட்டிச் சென்றது. அந்தத் தோல்வியின் முடிவில் இலட்சக்கணக்கான தனது படைவீரர்களை பறிகொடுத்த கிட்லர் இறுதியில் தற்கொலை செய்துகொண்டான். இன்று தமிழர் போராட்டம் சந்திக்கும் இத்தகைய நிலை, விரைவுபடுத்தப்படப் போகும் விடுதலையின் நாட்களை நினைத்துப்பார்க்க வைக்கிறது.

''வெற்றி ஓர் நிம்மதியான நாளைக் கொண்டு வரும்'' என்ற தமது எதிர்பார்ப்பை எமது மக்கள் வென்றெடுக்கப்போகிறார்கள். ''சாவுக்கும் அழிவுக்கும் அப்பால், பசிக்கும் பஞ்சத்திற்கும் அப்பால், சுயநல வாழ்வின் சுகபோகங்களுக்கும் அப்பால், ஒரு சுதந்திரமான கௌரவமான வாழ்வில் காதல்கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப்பற்றை நான் பாராட்டுகின்றேன்'' என தலைவர் அவர்களை நம்பிக்கை கொள்ளச்செய்த மக்கள், இன்று எதையும் தாங்கிக்கொள்ளும் உறுதியுடன் மேலும் எழுச்சிகொண்டு நிற்பது தமிழீழ விடுதலையின் நாட்கள் எண்ணப்பட்டு வருவதை உணர்த்தி நிற்கிறது.

○



www.eelamview.com

# 1999 - தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை

**1999ஆம் ஆண்டு மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரையை இங்கே முழுமையாகத் தருகின்றோம்.**



எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே !

இன்றைய நாள் எமது தேசத்து விடுதலை வீரர்களின் நினைவு நாள்..

தாயக விடுதலையை தமது உயிரிலும் மேலாக நேசித்து, அந்த இலட்சியத்திற்காகப் போராடி மடிந்த எமது தேசத்தின் சுதந்திர வீரர்களை இன்று நாம் எமது இதயத்துக் கோயில்களில் சுடரேற்றிக் கௌரவிக்கிறோம்.

எமது தாயக தேசத்தின் விடுதலைக்காக ஆயிரமாயிரம் புலிவீரர்கள் களமாடி வீழ்ந்தார்கள். எமது வீர மண்ணின் மார்பைப் பிளந்து அந்த வீரர்களைப் புதைத்தோம். உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணிற்குள் மறையவில்லை. விடுதலையின் விதைகளாகவே எமது தாயின் மடியில் அவர்களைப் புதைத்தோம். வரலாற்றுத்தாய் அவர்களை அரவணைத்துக்கொண்டாள். ஆயிரமாயிரம் தனி மனித உயிர்கள் சரித்திரத்தின் கருவூலத்தில் சங்கமித்தன. அவ்வுயிர்கள் கருவாகி, காலத்தால் உருவம்பெற்று, தேசத்தின் சுதந்திரமாக வடிவம்பெற்று வருகிறது. தமிழீழம் என்ற அந்த சுதந்திர தேசம் வரலாற்றின் குழந்தையாக விரைவில் பிறப்பெடுக்கும். அந்த சுதந்திர தேசத்தின் ஆன்மாவாக, ஆளுமையாக எமது மாவீரர்கள் என்றும் எம்முடன் நிலைத்து வாழ்வார்கள்.

எமது வீர விடுதலை வரலாற்றின் ஒரு முக்கிய திருப்புமுனையில் நின்றவாறு இன்று எமது மாவீரர்களை நாம் நினைவுகொள்கிறோம்.

## மகத்தான இராணுவ வெற்றியும் நம்பிக்கையான எதிர்காலமும்

எமக்கு முன்னால், காலவிரிப்பில், ஒரு புது யுகம் எமக்காக காத்துநிற்கிறது. எமக்குப் பின்னால் கடந்த காலத்தில், இரத்தம் தோய்ந்த விடுதலை வரலாறு நீண்டு செல்கிறது. மானிடத்தின் விடுதலைக்காக மாபெரும் இயாகங்கள் புரிந்த வரலாற்றுப் பெருமையுடன், எமது விடுதலை இயக்கம் பிறக்கப்போகும் புதுயுகத்தில் காலடி வைக்கிறது.

இப்புதுயுகம் எமக்குச் சொந்தமானது. அநீதியையும், அடக்குமுறையையும் எதிர்த்து, நீதிக்கும் சுதந்திரத்திற்குமாகப் போராடிய மக்களுக்குச் சொந்தமானது. இப்புதுயுகத்தில், எமது மக்களின் நெடுங்காலக் கனவு நிறைவு பெறும். இத்தனை காலமும் எமது மக்களைப் பிடித்த துன்பமும், துயரமும் அகன்று எமது மக்களுக்கு விடிவுபிறக்கும். எமது மண்ணுக்கு விடுதலைகிட்டும். எந்த இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் போராடி மடிந்தார்களோ அந்தப் புனித இலட்சியம் இப்புதுயுகத்தில் நிறைவுபெறும்.

ஒப்பற்ற மாபெரும் இராணுவ வெற்றியின் சிகரத்தில் நின்றவாறு, இன்று நான் மாவீரர் நினைவுரையை நிகழ்த்துகிறேன்.

இந்த மகத்தான இராணுவ வெற்றி முழு உலகத்தையும் வியப்பிலும், திகைப்பிலும் ஆழ்த்தியிருக்கிறது. இது ஒரு சாதாரண போரியல் சாதனையல்ல. போரியற்கலையில் ஒரு ஒப்பற்ற உலக சாதனையாகவே இவ்வெற்றி கருதப்படும். இந்த வெற்றியின் விஸ்வரூபப் பரிமாணம் கண்டு எமது எதிரிமட்டுமல்ல, எதிரிக்குப் பக்கபலமாக நின்று, பயிற்சியும், ஆயுதமும், பணஉதவியும் வழங்கிவந்த உலகநாடுகளும் மலைத்துப்போய் நிற்கின்றன. 'ஓயாத அலைகள் மூன்றாகக்' குமுறிய இப்பெருஞ்சமர் ஒரு சில நாட்களில் இமாலய சாதனையைப் படைத்தது.

## மணலாற்று மீட்பு மகிழ்ச்சிக்குரியது

முழுப்பலத்தையும் ஒன்று குவித்து, பெரும் படையெடுப்புக்களை நடத்தி, வருடங்களாக, மாதங்களாக தொடர் சமர்களை நிகழ்த்தி, ஆயிரக்கணக்கில் உயிர்ப்பலி கொடுத்து சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருந்த வன்னியின் வளமிகு பகுதிகளை எமது வீரர்கள் கடுகதி வேகத்தில் மீட்டெடுத்தனர். வன்னி மண்ணில் அகலக் காலூன்றிய எதிரி, தொடர் வலையமாக நிறுவிய படைத்தளங்களும், கட்டளைப்பீடங்களும், இரும்புக் கோட்டைகளாக அமைக்கப்பட்ட இராணுவ முகாங்களும், மிகக் குறுகிய காலத்தில், மிகக்கூடிய வேகத்தில் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த அற்புதம், உலகத்தின் புருவத்தை உயர்த்தியது. வன்னியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பழம் பெரும் பட்டினங்களிலிருந்து எதிரி இராணுவம் விரட்டப்பட்டது. அங்கெல்லாம் இப்பொழுது புலிக்கொடி மார்தட்டி பெருமையுடன் பறக்கிறது. காட்டுத் தீயாகப் பரவிய இப்பெருஞ்சமரில் எமது தாயகத்தின் இதயபூமியான மணலாற்றின் ஒரு பகுதி மீட்கப்பட்டதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். காலம் காலமாகத் தமிழர் வாழ்ந்த இப்புனித மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து தமிழர்களைக் கொன்றழித்து, அங்கு சிங்களக் குடியேற்றங்களை நிறுவிய சோக வரலாற்றினை எமது மக்கள் நன்கறிவர். வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாக இணைத்து, வன்னியின் மிகச்செழிப்பான நிலங்களைக் கொண்ட எமது தேசத்தின் இதயபூமி மீண்டும் எமது கட்டுப்பாட்டில் வந்துகொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். இந்த மண்மீட்பு எமது போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தைச் சுட்டுகிறது.

போரியற் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த 'ஓயாத அலைகள் மூன்று' என்ற வன்னிப் பெருஞ்சமர் உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது. எமது படையணிகளின் சமரிடும் வேகமும், வீச்சும், குலையாத கூட்டுச் செயற்பாடும், துரிதகதியில் படைநகர்த்தும் ஆற்றலும், எதிர்த்துத்தாக்கும் உத்திகளும், அபாரமான துணிவும், நேர்த்தியான கட்டுப்பாடும் உலக இராணுவ நிபுணர்களை வியக்கச் செய்து வருகிறது.

இந்த வரலாற்றுச் சமரில் களமாடி வீர சாதனை படைத்த சகல போராளிகளுக்கும், படைநகர்த்திய தளபதிகளுக்கும், இச்சமரில் பங்குகொண்டு போராடிய எல்லை காப்புப் படையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள். இந்தப் பெருஞ்சமரில் எமது போராளிகளுக்கு ஊக்கமளித்து, உணவளித்து, இரத்தமளித்து, பின்கள வேலைகளில் உதவிபுரிந்து பெரும்பங்காற்றிய தமிழீழ மக்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றி.

## தேசவிடுதலைப் போரின் உச்சக்கட்டமான மக்கள் எழுச்சியும் - மக்கள் போரும்

நில மீட்பிற்காகவே இந்தப் போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழீழம் எமக்குச் சொந்தமான நிலம். வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான நிலம். எமது வாழ்விற்கும், வளத்திற்கும் ஆதாரமான நிலம். நாம் பிறந்து, வாழ்ந்து, வளர்ந்த நிலம். எமது தேசிய அடையாளத்திற்கு அடித்தளமான நிலம். இந்த நிலத்தை தனது சொந்த நிலம் என்கிறான் எதிரி.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத் தீவில் சிங்கள இனவாதிகள் ஆட்சிபீடம் ஏறிய காலத்திலிருந்து தமிழர் நிலம் விழுங்கப்பட்டு வருகிறது. தமிழர் நிலத்தை அபகரித்து சிங்களமயமாக்குவது ஒரு புறமும், தமிழர் நிலத்தை ஆக்கிரமித்து, அதன் வளங்களை அழித்து, அங்கு வாழ்ந்த மக்களை அகதிகளாக்குவது இன்னொரு புறமுமாக, எமது நிலம் மீது கொடுமை நிகழ்ந்து வருகிறது இந்த அநீதிக்கு எதிராகவே நாம் போராடுகிறோம். ஆகவே, சாராம்சத்தில் எமது விடுதலைப்போரானது ஒரு மண்மீட்புப் போராகும். எமக்குச் சொந்தமான நிலத்தை மீட்டு, அந்த நிலத்தில் எமது ஆட்சியுரிமையை, இறைமையை நிலைநாட்ட நடைபெறும் போர்.

இந்தப் போரின் நோக்கம், குறிக்கோள் என்ன என்பதை எமது மக்கள் இப்பொழுது நன்கு உணரத்தொடங்கியுள்ளனர். சொந்த நிலத்தை இழந்து, அந்த நிலத்தில் அமைந்த வாழ்வை இழந்து, அகதிகளாக அலையும் மக்களுக்கு சொந்த மண்ணின் மகிமை புரியும். அந்த மண்ணில் ஆக்கிரமிப்புக்காலூன்றி நிற்கும் அந்நியனை விரட்டவேண்டிய அவசியம் புரியும். இந்த புரிந்துணர்வால் ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாகவே இந்த மண்மீட்புப் போரில் எமது மக்கள் எமக்குப் பக்கபலமாக நின்று, பல்வேறு வழிகளில் பங்களித்து வருகிறார்கள். இன்று, எமது தேச விடுதலைப் போரானது விரிவடைந்து மக்கள் போராக வளர்ச்சியும், எழுச்சியும் பெற்று வருகிறது.

→





www.eelamview.com

எனது அன்பார்ந்த மக்களே!

ஆண்டுதோறும் எனது மாவீரர் நினைவுரையில நான் சமாதானத்தையும், சமாதான வழியிலான அரசியற் தீர்வையும் வலியுறுத்தத் தவறவில்லை அதேவேளை, சமாதானவழியில் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண சிங்களப்பேரினவாதம் தயாராக இல்லை என்பதையும் நான் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

## சந்திரிகாவின் அராஜக ஆட்சி

சிங்களத்து அரசியலில் ஆதிக்கம் செலுத்தி, மாறி, மாறி ஆட்சிபீடம் ஏறிவரும் இரு பிரதான சிங்களக் கட்சிகளும், சாராம்சத்தில் இனவாதக் கட்சிகளே. இவ்விரு கட்சிகளும், சிங்கள - பௌத்த பேரினவாத சித்தாந்தத்தில் வேரூன்றி வளர்ந்தவை. அந்த வெறிபிடித்த, தமிழ்விரோதச் சித்தாந்தத்தில் திளைத்தவை. கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக தமிழினத்திற்கு எதிரான ஒடுக்குமுறையை முடுக்கிவிடுவதில் போட்டியிட்டு செயற்பட்டவை. இந்த இன ஒடுக்குதல் வரலாற்றில் என்றுமில்லாத வகையில் தமிழருக்கு கொடுமை இழைத்த பெருமை சந்திரிகாவின் ஆட்சியையே சாரும்.

சந்திரிகாவின் ஐந்தாண்டு ஆட்சிக்காலம் தமிழினத்திற்கு ஒரு சாபக்கேடாக அமைந்தது. தொடர்ச்சியான போரும், வன்முறையும், சாவும், அழிவும், பசியும், பட்டினியும், இடப்பெயர்வுமாக இக்காலகட்டத்தில் எமது மக்கள் எதிர்கொண்ட பேரவலம் மிகக்கொடுமையானது. இருண்ட, இரத்தம் படிந்த வரலாற்றுப் பக்கங்களைக் கொண்டதாக சந்திரிகாவின அடக்குமுறை ஆட்சிக்காலம் நீண்டது. இந்தக்கொடிய ஆட்சியானது தமிழினத்தின் தேசிய ஆன்மாவில் என்றும் அழியாத வடுவை ஏற்படுத்தியது.

உள்நாட்டில் தமிழருக்கு எதிராக ஒரு பயங்கரவாத ஆட்சியை நடத்திக்கொண்டு, வெளியுலகில் சமாதானம் விரும்பும் ஒரு சனநாயக தேவதையாக நாடகமாடினார் சந்திரிகா. தமிழர் தாயகத்தை முழுமையாக ஏப்பம்விடும் ஒரு நாசகாரப் போர்த்திட்டத்தை நடைமுறைப் படுத்திக்கொண்டு, அதனை ஒரு சமாதானத்திற்கான போர் முயற்சியாக வர்ணித்தார். முழு உலகமும் அவரை நம்பியது. அவரது சமாதானப் போருக்கு ஆதரவு வழங்கியது. முழு உலகத்தையும் கண்கட்டி ஏமாற்றிய அரசியல் பரப்புரை வித்தைகளில் தமிழினத் துரோகிகளே சந்திரிகாவுக்கு பக்கத்துணையாக நின்றனர்.

## சந்திரிகா அம்மையார் பேரினவாதத்தின் நவயுக பிரதிநிதி

நாம் சந்திரிகாவை நம்பவில்லை. தமிழரின் தேசிய பிரச்சினையை நீதியான முறையில் தீர்த்துவைக்கும் நேர்மையும், உறுதிப்பாடும் அவரிடம் இருக்கவில்லை. சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் நவயுகப் பிரதிநிதியாகவே நாம் அவரைக்கண்டோம். எனவேதான், நாம் சந்திரிகா அரசுடன் நேரடியாகப் பேச்சுக்களை நடத்த விரும்பவில்லை. ஆயினும் நாம் சமாதானக் கதவுகளை மூடிவிடவில்லை. சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடன் சமாதானப்பேச்சுக்களில் பங்குகொள்ள நாம் தயாராக இருப்பதாக சென்ற ஆண்டு மாவீரர் நினைவுரையில் நான் அறிவித்தேன்.

நாம் சர்வதேச மத்தியத்துவத்தை வேண்டியபோதும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஏற்றதான சமாதானப் புறநிலைகள் உருவாக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினோம். போர் நெருக்கடி நீங்கிய நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பும், பொருளாதார நெருக்குவாரங்களும் அகன்ற ஒரு இயல்பான, நல்லெண்ண சூழ்நிலையில் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என்பதை நாம் தெளிவாக விளக்கியிருந்தோம்.

சமாதானப் பேச்சுக்களுக்கு உகந்ததான ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும் என்ற எமது யோசனையை சந்திரிகா அரசு ஏற்க மறுத்தது. போருக்கு ஓய்வு கொடுக்கவோ, நில ஆக்கிரமிப்பை நிறுத்தவோ, பொருளாதாரத் தடைகளை நீக்கவோ சந்திரிகா விரும்பவில்லை. போரையும் பொருளாதாரத் தடைகளையும் தமிழர் மீதான அரசியல் அழுத்தங்களாகப் பாவிக்கவே அரசு விரும்பியது.

'சமாதானத்திற்கான போர்' என்ற சந்திரிகா அரசின் கோட்பாடு ஒரு இராணுவத் தீர்வையே குறித்து நிற்கிறது. போர்மூலமாக தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, புலிகள் இயக்கத்தை தோற்கடித்து, தமிழினத்தை அடிமைகொள்வதே இத்திட்டமாகும். கடந்த ஐந்தாண்டு காலமாக இப்போர்திட்டத்தை செயற்படுத்தவே அவர் ஓயாது உழைத்தார். எத்தனையோ பேரழிவுகளைச் சந்தித்த போதும் அவர் தனது இராணுவத் தீர்வுத் திட்டத்தை கைவிடவில்லை. இதனால் சமாதான வழிமுறைகள் பற்றியோ, சமாதானப் பேச்சுக்கள் பற்றியோ அவர் அக்கறையோடு சிந்திக்கவில்லை. அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் எதையும் எடுக்கவில்லை.




போரைத் தொடர்ந்து நடத்தியவாறு, சில வரையறைகளுடன், இரகசியமாக பேச்சுக்களை நடத்தலாமென மூன்றாம்தரப்பு மூலமாக சந்திரிகா எமக்கு தூது அனுப்பியிருந்தார். நாம் அந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு புறம் போரை நடத்திக் கொண்டு, மறுபுறம் சமாதானப் பேச்சை நடத்துவது நடைமுறைச்சாத்தியமற்றது. அத்தோடு அபத்தமானதும் கூட. தொடரும் போரினால் எமது மக்கள் சாவையும், அழிவையும், அவலங்களையும் சந்தித்து நிற்க நாம் எதிரியோடு கைகோர்த்து சமரசம் பேசுவது முடியாத காரியம். அத்துடன் எந்தவொரு நிபந்தனையோடும், காலவரையோடும் பேச்சுக்களை நடத்த நாம் தயாராக இல்லை சந்திரிகா உண்மையில் சமாதானத்திற்காக அன்புக்கரம் நீட்டவில்லை. பேச்சு என்ற போர்வையில் ஒரு பொறியை வைக்க முயன்றார் நாம் அந்த சமாதானப்பொறிக்குள் சறுக்கிவிழத்தயாராக இல்லை.

## சிங்களத்தின் போர்த் திட்டம் கடலோரத்து மண்வீடானது

கடலோரம் கட்டிய மண்வீட்டுக்கு நிகழ்ந்த கதிபோல சந்திரிகாவின் போர்த்திட்டத்தை விடுதலைப்புலிகளின் 'ஓயாத அலைகள்' அடித்துச் சென்றுள்ளது. இச்சமரில் நாம் ஈட்டிய மாபெரும் வெற்றியின் விளைவாக இராணுவச் சமபலம் எமக்குச் சார்பாகத் திரும்பியிருக்கிறது. புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, இராணுவ மேலாதிக்க நிலையைப் பெற்றுவிடவேண்டுமென்ற சந்திரிகாவின் ஐந்தாண்டு கால பகீரத முயற்சியை நாம் ஒரு சில நாட்களில் முறியடித்துள்ளோம்.

ஆட்பலம், ஆயுதபலம், ஆன்மபலம், மக்கள பலம் என்ற ரீதியில் சகல பலத்தோடும் நாம் வலுப்பெற்று நின்றபோதும், எமது தாயகத்தை மீட்டெடுக்கும் போரியல் சக்தி எம்மிடம் இருந்த போதும், நாம் சமாதானப் பாதையைக் கைவிடவில்லை. உயிரழிவையும் இரத்தக்களரியையும் தவிர்த்து, சமாதான வழியில், நாகரீகமான முறையில், தமிழரின் சிக்கலைத் தீர்க்கவே நாம் விரும்புகிறோம்.

சமாதானப் பேச்சுக்கள் ஒரு சமாதான நல்லெண்ணப் புறநிலையில் மூன்றாம் தரப்பு சர்வதேச மத்தியத்துவத்துடன் நடைபெற வேண்டும் என்பதையே நாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். சமாதானப் புறநிலை எனும்பொழுது போர் ஓய்ந்து, பொருளாதாரத் தடைகள் அகன்று, எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் படைகள் விலகிய ஒரு இயல்பு நிலையையே நாம் குறிக்கிறோம்.

போரையும், நில ஆக்கிரமிப்பையும், பொருளாதார நெருக்குவாரங்களையும் தமிழர் மீது அழுத்தம் செலுத்தும் உத்திகளாகப் பாவிப்பதை நாம் அனுமதிக்க முடியாது. எவ்வித புறநிலை அழுத்தங்களும் இல்லாத இயல்பு நிலையில் சமத்துவமும், புரிந்துணர்வும் நிலவும் நல்லெண்ண சூல்நிலையில் பேசுவதையே நாம் விரும்புகின்றோம்.

நாம் பேச்சுக்கான கதவை திறந்தபடி சிங்கள தேசத்திற்கு ஒரு நல்லெண்ண சமிக்கையைக் காட்டுகின்றோம். ஆயினும் நாம் வேண்டுவது போன்று ஒரு சமாதான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கு சிங்கள அரசியற் தலைமைகள் இணங்கப்போவதில்லை என்பது எமக்குத் தெரியும். நீண்டகாலமாக கடைப்பிடித்துவரும் இராணுவ வன்முறைப்பாதையை சிங்கள இனவாதிகள் இலகுவில் கைவிடப் போவதில்லை என்பதும் எமக்குத் தெரியும். எனவே, சிங்கள அரசியற் தலைமைகளுடன் பேசி, இணக்கம் கண்டு, எமது தேசியச்சிக்கலுக்கு தீர்வுகாணலாமென நாம் கற்பனையில் வாழவில்லை.

## தமிழீழத் தனியரசு தவிர்க்க முடியாத தீர்வு

மனித உரிமைகளை மதியாத சிங்கள இனவாத அரசியலும், அதன் தமிழர் விரோதப் போக்கும் தமிழ்மக்களுக்கு ஒரேயொரு மாற்று வழியையே திறந்து வைத்திருக்கிறது. அது தான் போராடிப் பிரிந்துசென்று தனியரசை உருவாக்கும் ஒரே வழி. இந்த வழியில தான் சிங்கள தேசம் தமிழினத்தை தள்ளிக்கொண்டிருக்கிறது.

சுதந்திர தமிழீழத் தனியரசே எமது தேசியப் பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதை எமது மக்கள எப்பொழுதோ தீர்மானித்து விட்டார்கள். எமது மக்களின் சுதந்திர அபிலாசையை, சிலுவையாக தோளில் சுமந்து இத்தனை ஆண்டுகளாக எமது இயக்கம் இரத்தம்சிந்திப் போராடிவருகிறது. இன்று, எமது சுதந்திரப் பயணத்தில், அந்த நீண்ட விடுதலை வரலாற்றில், ஒரு முக்கியமான திருப்பத்தை அடைந்துவிட்டோம்.

எமது போராட்ட இலக்கு, ஒளிமயமான எதிர்காலமாக, எமது கண்களுக்குத் தெரிகிறது.

நாம் நம்பிக்கையுடன் எமது இலட்சியப் பயணத்தைத் தொடர்வோம்.

எமக்கு முன்னால் எழக்கூடிய எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நாம் நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து செல்வோம்.

நாம் ஒரே மக்கள் சக்தியாக, ஒன்றுபட்ட தேசமாக, ஒருமித்தெழுந்து, எமது இலட்சியப் பாதையில் விரைந்து செல்வோம்.

சாவைத் தழுவிய எமது வீரர்களின் ஆன்மாவாக சுதந்திரம் எமக்காக காத்துநிற்கிறது.

o



www.eelamview.com

# "வணங்கா மண்"

## வே. பாலகுமாரன்

ஓயாத அலைகள் மூன்றின் இரண்டாம் நாளன்றே நெடுங்கேணியும், ஒதியமலைப்பகுதிகளும் மீட்கப்பட்டுவிட்டன என்கிற செய்தி ''ஆன்பத் தேனாக'' எல்லோர் காதுகளிலும் பாய்ந்தது. தாயக மண்மீட்பு வரலாற்றுக்குள்ளே ''ஒரு வரலாற்று மீட்பாக'' இன்று மணலாற்றின் குறிப்பிடத்தக்க பகுதி மீட்கப்பட்டமை சிறப்பிடம் பெறுகின்றது. தமிழீழ தாயகத்தை துண்டாட முயன்ற சிங்களத்தின் வாள் இப்போது சிதைக்கப்பட்டுவிட்டது. இப்போது சிங்களவரின் குடியேற்ற ஆக்கிரமிப்பு எல்லை ''முன்னைய நிலையான'' பதவில் குளம்(பதவியா) எனும் எமது பாரம்பரிய மண்ணுக்கு பின்நகர்ந்துவிட்டது. ''முன்னைய நிலை'' என்பது சிங்களக் குடியேற்றங்களை செயற்கையாகத் திட்டமிட்டு உருவாக்கும் பணியின் தந்தையான டி.எஸ்.சேனநாயக்கா 1948களில் திருமலையில் சிங்களவரைக் குடியேற்ற பிள்ளையார் சுழிபோட்ட காலத்தினைக் குறிக்கும். அன்றிலிருந்து 1980கள் வரை பதவியாவாக மாற்றப்பட்ட பதிவில் குளமே சிங்கள ஆக்கிரமிப்பின் முன்னரங்க எல்லை. பதிவில் குளத்தை அண்டிப் பாய்ந்த பெரியாறு 'மாஓயா' வாகியது. பதவியா என்பது சிங்களப் பேரினவாத இன அழிப்பின் வடிவமான அரசியல் இராணுவ குடியிருப்புச் சின்னமாகவே இன்றளவும் உள்ளது. அவசரம் அவசரமாக அண்மையில் ஓடித்தப்பிய இராணுவத்தினர் பதவியாவில் தளமமைக்க முயல்வதும் இதனொரு வெளிப்பாடே. 1983 ஆம் ஆண்டின் பின் தமிழன் இதயத்துள் செருகப்பட்ட குத்தீட்டியாக பதவியா நகர்ந்து மணலாற்றை வெலிஓயாவாக்கிய கதை, நாமறிந்த கதை. இப்போது பதவியாவிலிருந்து மதவாச்சி வரை புதிய எல்லை போட சிங்களம் முயல்வது புதிய கதை.

நாமறிந்த கதைகளுக்குப் பின்னே இன்னொரு கதையுளது. சிங்களத்தை மாறி, மாறி ஆளும் கட்சிகளுக்குப் பின்னே என்றும் மாறாத ஆட்சியாளராக சிங்களத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் சிங்கள உயர் மேட்டுக்குடியின் மேலாண்மைமிக்க குழுவின் கதையிது. இக்கதையினை முதலிருந்து அறிய 1983 யூலைக்கு முன்-பின்னான காலத்திற்கு நாம் செல்லவேண்டும். தமிழர் தாயகத்தைச் சிதைக்கும் எண்ணமும் அதன் செயல் வடிவங்களும் 1930களிலிருந்தே தொடங்கப்பட்டது. அதன் இன்னொரு வடிவம் 1983ன் பின்னே விரிவாகியது. ஆசியாவிலே இந்த நூற்றாண்டிலே வரலாற்றுத் திருப்புமுனையாகிவிட்ட நிகழ்வுகளில் ஒன்றாக, அமெரிக்க 'ரைம்' ஏட்டில் (ஆகஸ்ட் 23-30) கணிக்கப்பட்ட 1983 யூலை திருநெல்வேலி தாக்குதலின் பின்னே, தமிழர் தாயகத்தை துண்டாடிச் சிதைக்கும் எண்ணம் திரைமறைவிலே வீறுபெற்றது. மணலாற்றுப் பகுதியே இதன் இலக்காகியது.


முதற்கட்டமாக கென், டொலர் பண்ணைகளிலே சிறைச்சாலை அதிகாரிகள் மேற்பார்வையிலே சிங்களக் கைதிகள், காடையர் கூட்டம் குடியேற்றப்பட்டனர். 1983 யூலை இனஅழிப்பிலே பங்குபற்றிய குண்டரும் இதனுள் அடக்கம்.

இக்குடியேற்றங்களையும், இதற்கு முன்னரே மிக நீண்டகாலமாக இருந்த கொக்கிளாய், நாயாறு மீனவக் குடியேற்றங்களையும் விரட்டியடிப்பதற்கு தமிழ்மக்கள் பெரும் அவாவுற்றிருந்தனர். புலிகள் சிறிய கரந்தடிப் படையாகவிருந்த காலத்திலிருந்தே மணலாற்றில் அந்நியர் கால் படுவதைத் தடுக்கவே முயன்று வந்துள்ளனர். (இது தொடர்பில் சிங்களக்குடியேறிகட்கு விளக்கமளிக்கும் துண்டுப்பிரசுரங்களை தொடக்கத்தில் புலிகள் வெளியிட்டுள்ளனர். 100றகும் மேற்பட்ட தாக்குதல்கள் இதயபூமியில் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன) இவற்றையெல்லாம் அவதானித்த சிங்கள ஆளும் வர்க்கம் காமினியின் காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அமைச்சிலே 1984 நவம்பர், டிசெம்பர் மாதங்களிலே அடிக்கடி கூடி இரகசிய நாசகாரத்திட்டங்களை வகுத்தது. இவ்வாறான கூட்டமொன்றிலே சிங்கள அதிகாரியொருவரால் கூறப்பட்ட கூற்று இன்று எவ்வளவு பொருத்தமாகின்றது என்பதைப் பாருங்கள். ''பதவியா வீழ்வதென்பது றோசாச் செடியொன்றின் வாடிவிட்ட கடைசி மலரின் கடைசி இதழும் உதிர்வதற்குச் சமம்'' (பக்கம் 189, நூல், இறைமையுள்ள நாடொன்றிற்காக -மலிங்க குணரட்ணவினால் 1985களில் எழுதப்பட்டு 1988 முதற்பதிப்பைக்கண்ட சிங்களவரின் 'மெயின்காம்ப்' ஆகிவிட்ட இந்நூல் மிக அண்மையில் மீண்டும் வெகு சிறப்பாக வெளியிடப்பட்டமை கவனிக்கத்தக்கது).

இன்றைக்கும் பொருத்தமான இன்னொரு காட்சிக்கும் நகர்வோம். மணலாற்றிலிருந்து விரட்டப்பட்ட சிங்களக் குடியேற்றவாசிகள் பதவியாவில் குழுமி நிற்கின்றனர். நிலைமைகளை அவதானிக்க கொழும்பிலிருந்து வந்தோரும் அங்கு நின்றனர். இவர்கள் முன் பதவியா ராஜமகா விகாரையின் தலைமைப்பிக்கு ரத்னசார தேரர் பெரும் கோபத்தோடு கொந்தளிக்கிறார் ''பயந்து ஓடாதீர்கள். துணிவு கொள்ளுங்கள். துட்டகாமினியின் மரபில் வந்தவர்களல்லவா நீங்கள். அன்று மகாசங்கப் பிக்குகள் கூட அங்கிகளைக் களைந்து தமிழருக்கு எதிரான போரில் துட்டகைமுனு மன்னனோடு இணையவில்லையா? புத்தம், சங்கம், தர்மம் சார்பாக வேண்டுகிறேன். இது எங்கள் நிலம். இதை எவ்வாறேனும் தக்க வைக்க வேண்டும். எமது தலைவிதியே இந்நிலத்தில் தானுள்ளது. நாமே எல்லைக்காவற்படை. உங்கள் நிலத்திற்கு உங்களை நான் கூட்டிச்செல்வேன்.'' இக்கூற்று கூறப்பட்டநாள் 1984 டிசம்பர் 07. இவ்வாறாகத்தான் தமிழர் தாயகத்தின் இதயப்பகுதி பதவியாவுக்கு அப்பாலும் இப்பாலுமாக திருமலை, முல்லை, வவுனியா மாவட்டங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு வெலிஓயாவாகி - பதவிய பிரதேச செயலர் பிரிவாகி - கடல் எல்லையில்லாத அனுராதபுர மாவட்டத்திற்கு கொக்கிளாய் கடல் எல்லையாகி - இப்போது திருமலை மாவட்ட புவிசார் குடித்தொகையை முற்றிலும் சிங்களமயமாக்குவதற்காக திருமலை மாவட்டத்தோடு மீண்டும் இணைக்கப்பட்ட கதை நடந்து முடிந்துள்ளது.

இது எவ்வாறு நடந்தேறியது? வேதனைமிக்க வரலாற்றின் பக்கங்களை மீண்டும் புரட்டுவோம். சிங்களவருக்கு வாக்களிக்கப்பட்ட பூமிக்காக முதலில் திருமலை மாவட்டத்தின் தொன்மைத் தமிழ்க் கிராமங்களான கோட்டைக்கேணி, தென்னமரவடி, அமரிவயல், புல்மோட்டை என்பன ஏப்பம் விடப்பட்டன. ஒரு நாளிலே வவுனியா, முல்லை மாவட்டங்களைச் சேர்ந்த 2100 மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் சிங்கள இராணுவத்தால் விரட்டப்பட்ட நாள் 1984 டிசெம்பர் 24. அச்சுறுத்தப்பட்டும், வெட்டியும், சுட்டும், கொன்றும், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி உடுத்த உடையோடு - உண்ட உணவை உண்ணவிடாமலும் உடமைகளை எடுக்க விடாமலும் - எமமக்கள் விரட்டப்பட்டனர். ஒதியமலையில் ஒரு இரவில் 29 பேர் பலியெடுக்கப்பட்டனர். முல்லைத்தீவு முகாமிலிருந்து ஜீப்வண்டியொன்றில் சென்ற படையினர் அளம்பில், செம்மலை, குமுழமுனை மக்களை விரட்டினர். அன்று நடந்த அவலத்தை இன்றும் எம்மக்கள் சொல்லிச் சொல்லி மாய்கின்றார்கள். இவ்வாறு முல்லைமாவட்டத்தின் இரு பிரதான கிராமசேவகர் பிரிவில், கொக்குத்தொடுவாயின் 10 கிராமங்களைச் சேர்ந்த 1300 குடும்பங்கள், கொக்குளாயின் 03 கிராமங்களைச் சேர்ந்த 300 குடும்பங்கள், வவுனியா வடக்கின் 05 கிராமங்களைச் சேர்ந்த 300 குடும்பங்கள் நிர்க்கதியாகின. ஏற்கனவே திருமலை மாவட்டத்திலிருந்து விரட்டப்பட்டு கால் நடையாக வந்து குடியேறியவர் போலவே இவர்களும் முல்லையின் பலவிடங்களிலும் சிதறிப்பரவினர். மூவாயிரம் சிங்களக் குடும்பங்கள் உடனடியாகவே எம்மக்களின் வாழ்விடங்களில் குடியேற்றப்பட்டனர்; இத்தோடு 1965 களில் தமிழ்த் தலைவர்கள் மத்திய வகுப்பாருக்கு 25 ஏக்கர் பண்ணைகள் தொட்டு 1000 ஏக்கர் வரையிலான பண்ணைகள் அமைக்க வழங்கப்பட்ட நிலங்களும் பறிமுதலாகின. 1983 யூலை இன அழிப்பால் பாதிக்கப்பட்டு இங்கு வேலைசெய்த மலையகத்

→



போராளிகளுடன், தளபதி கேணல் ஜெயம்



www.eelamview.com

## வாளேந்திய சிங்கத்தின் மரணவிளையாட்டு



ஓவியம்: வீரசந்தானம் (தமிழ்நாடு)

மனுமகன் சித்தத்தின்படியே
உமதண்டையில் அடைக்கலமானோம்
எங்களையேன் கைவிட்டீர் அடைக்கலத்தாயே!

நல்ல ஆயனாகிய
உமது குழந்தையின் மந்தைகளை
திருத்தலத்துள் அடைத்து
குண்டுகளை வெடித்தனர் சாவானுபாவிகள்.
சிங்கமேந்திய வாள்இறங்கும் சுவைக்குருதி பெருக
துண்டு துண்டாய் உடலங்கள் பிய்ந்துபட
நீர் கண்டிருக்கக் கொலையுண்டோம் மாதாவே!

தனது சரீரமாகிய அப்பத்தையும்
இரத்தமாகிய பானத்தையும்
யாருடைய மீட்பின் தீர்வாக
இறைமகன் பங்கிட்டாரோ
அவர்களின் சரீரமும் இரத்தமும் அழிந்து
புனித முற்றத்தில் பழி படிந்தது.
திருமுடி சூடிய ஒளிவட்டம் உருகிவழிந்து
இருள்மண்டியது தேவநிலத்தில்.

ஆவிகளை உமது கையில் ஒப்புவித்து
மண்டியிட்டு கன்னிமையின் மகிமைசொல்லி
மெய்சோர மன்றாடினோமே
கருவமிட்டுச் செபித்தோமே
தீண்டவில்லையா திருமனதை, கருணை மடுமாதாவே!

உமது பாலகனைக் கொல்ல
ஏரோதரசன் பணித்தபோது
என்னமாய் பதைத்தீர்கள் அன்னை மரியாளே!
திருவடியே சரணமென்று தலைபணிந்து கிடந்தவர்கள்
துடிதுடித்துச் செத்தபோது
பார்த்திருக்க முடிந்ததுவா கன்னி மரியாளே!

கல்வாரிக் குன்றில் நேசமகன்
உமது கண்ணறியச் சிலுவையேந்தி
மெய்வருந்தி மரித்தபோது
சூலறையில் தீபடரும் வலிகிளைத்து உயிர்கசங்க நின்றீர்.
நீண்ட நெடுங்காலம் கழிந்து
மீண்டுமொருமுறை
தீபடர்ந்தது சூலறையில்.

– எஸ். உமாஜிப்ரான்

தமிழ்மக்கள் உள்ளிட்டவரும் விரட்டப்பட்டனர். இவ்வாறாக தமிழ்மக்கள் அழிவிலே வெளிஓயா கட்டியெழுப்பப்பட்டது.

நிலப்பறிப்பின் அடுத்த கட்டம் 1988 ஏப்ரல் 15 ம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் விசேட வலயப் பிரகடனத்தோடு ஆரம்பமானது. காணி, மகாவலி அமைச்சின் கூடமிது. இதன்படி மகாவலி 'L' வலயமாக்க இப்பகுதிகள் கையகப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. மேலோட்டமாக இதன் எல்லைகளைப் பார்த்தாலே தமிழீழ தாயகத்தை கற்பனை பூமியாகக இதைவிடச் சிறந்தவழி இருந்திருக்க முடியாது என்பது எவர்க்கும் புலப்படும். தண்ணீரூற்றுச் சந்தி ஒரு மையப்புள்ளி, பதவியா கெப்பொற்றிகொல்லாவ வீதியின் மையம், இன்னொரு புள்ளி, குமுழமுனை, நாயாறு, கொக்குளாய், புலிபாய்ந்தகல் ஊடாக நீண்டு கோட்டைக்கேணி, அமரிவயல், தென்னமரவடி, கெப்பொற்றிக்கொல்லாவவை உள்ளடக்கும் இவ்வலயம், இன்னொரு புள்ளியாக நெடுங்கேணிச் சந்தியை கொள்ளும். மொத்தமாக இணைத்துக் கூட்டி கணக்குப் பார்த்தால் 42 கிராமங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் (ஏற்கெனவே இடம்பெயர்ந்தும்) மீதி இடம்பெயரவும் நேர்ந்திருக்கும். இவ்வாறு தமிழன் இதயம் துண்டாடப்பட்டு இதயமற்ற சிங்களவனுக்குப் பொருத்த எடுத்த முயற்சியிது. தொடர்ந்த விடுதலைப்புலிகளின் விடுதலைப்போர், இதைப் பொருத்த முடியாமல் தடுத்தமை ஜயசிக்குறுய் வரை நீடித்தது.

இவ்வாறாகத்தான் மணலாறு வெலிஓயாவாகி இராணுவ வேலிகள், மண் அணைகள், காப்பரண்கள், மினிமுகாங்கள், பாரிய படைத்தளங்கள், காட்டுப்போருக்கான பயிற்சித்தளங்கள், கொமாண்டோ படையணியின் பயிற்சிக்களங்கள் அமைக்கப்பட்டு பாரிய இராணுவக்கோட்டையாகியது. நடுவிலே பாதுகாப்பாக சிங்களவர் குடியேற்றம் சேராட்டப்பட்டது. இதற்காக நடைபெற்ற பலவேறு படையெடுப்புக்களும் புலிகளின் வீரம் சிலிர்க்கும் தடுப்புச் சண்டைகளும், மணலாற்றின் போராளிகட்கு தாயும் தந்தையுமாக இருந்த லெப். கேணல் அன்பு எனும் அரிய மாவீரனின் அளப்பரிய பங்களிப்பும் எம் மக்கள் மனதிலே உயிர்த்தெழும் நினைவுகளாகின்றன. ஒதியமலையை முன்னரங்கமாகக் கொண்டு சிலோன் தியேட்டர் பண்ணையை பிரிகேட் தளமாக்கி கஜபாபுரவாக மாற்றம் பெற்ற தனிக்கல் சிங்களக் குடியேற்றம் உயர்பாதுகாப்புப் பெற்றது. தமிழீழத்தை துண்டாடும் இராணுவ வேலி கொக்குத்தொடுவாயிலிருந்து முந்திரிகைக்குளம் வீதியை ஆக்கிரமித்தது. மையமாக மண்கிண்டிமலை பாரிய படைமுகாமாகியது. வரிசையாக முந்திரிகைக்குளம், சாம்பன்குளம், கொக்குத்தொடுவாயின் கோட்டைக்கேணி என இராணுவம் குடியேறியது. இவற்றில் கணிசமான பங்களிப்புச் செய்த இராணுவத் தளபதி ஜானக பெரேராவை நினைவிற் கொள்ள மண்கிண்டிமலை ஜானகபுரவாக மாற்றங்கண்டது இக்கட்டத்தில் தான் டி. எஸ். தொடக்க-ஜே. ஆர் வளர்த்தெடுக்க-சந்திரிகா முடித்துவைக்க முயன்றபோது- பிரபா ஓயாத அலைகள் மூன்றை தொடக்க, மணலாற்று மண் மாவீரன் அன்பு அழைத்தது போல் ''வணங்கா மண்'' ஆகிறது.

மணலாற்று மண் விளைவிக்கும் அற்புதங்கள் வரலாற்றின் மிகப் பொருத்தப்பாடான ஒரு சமன்பாடாக மாறுகின்றது. எவ்வாறு 1984 டிசெம்பரில் ஒரு நாளில் எம்மவர் விரட்டப்பட்டனரோ அவ்வாறே 1999 நவம்பரில் சிங்களக் குடியேறிகள் மட்டுமல்ல. இராணுவமும் விரட்டப்பட்டனர். உணவில் வைத்த கையை வாய்க்கு கொண்டுபோக முடியாமல் இவர்கள் விரட்டப்பட்டனர். சிங்களப்படையின் எந்த முகாமிற்குள்ளும் சென்றால் உண்ணாத உணவு எங்கும் இறைந்து கிடப்பதைக் காணலாம். 1984 டிசெம்பரில் மேஜர் போரான் என்பவர் மணலாற்றிலிருந்து எம் மக்களை விரட்டி வீரசாகசம் புரிந்தார்; இன்று அவர் 55வது டிவிசனின் மேலாளர் பிரிகேடியர் போரான் ஆகி, காட்டிற்குள் ஒளிந்து ஓடிப் புரிந்த சாகசத்தால் வீட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இன்றைய வெற்றியையும் இனிவரப்போகும் வெற்றியினதும் காலத்தைத் தீர்மானித்த தலைவனை, அன்று காத்த மண் இன்று தமிழீழ மக்களை காத்து நிற்கின்றது. அந்த மண் வள்ளுவன் வாயால் எம் மக்களுக்குச் சொல்கின்றது: தக்ககாலம் தக்க இடத்தை அறிந்து செயற்படுங்கள்-எம் மக்களே இந்த உலகம் கூட உங்கள் கைப்படும் ''ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்'' ○



www.eelamview.com

# விடுதலைப் பாதையில் அழியாத தடம்



லெப். கேணல் ராகவன்
சின்னையா கஜேந்திரராசா
நி.முகவரி: வவுனியா

1999 நவம்பர் பத்தாம் நாள் புலிகளுக்கு இறுகமூடியிருந்த உலகின் செய்திக்கதவுகளெல்லாம் இறுக்கம் தளர்ந்து, பொங்கிப் பிரவாகித்த ''ஓயாத அலை'' களின் வீச்சுக்காய் வழிவிட்ட வேளை, உலக இராணுவ சரித்திரத்தில் நிலைபெற்ற அன்றையநாள் லெப். கேணல் ராகவனையும் தன்னுடன் அணைத்துக்கொண்டது. அன்றைய நவம்பர் பதினோராம்நாள் தமிழீழத்தின் சிறந்த போர்த்தளபதிகளில் ஒருவனான ராகவனைப் பறிகொடுத்து விடிந்தது.

வெற்றிமுரசு கொட்டி சிங்களம் செய்த பெரும் போர்நடவடிக்கைகளின் போதெல்லாம் எதிர்த்துநின்று போரிட்ட புலிகளின் போர்த்தளபதி அவன். உலக வரலாற்று ஏடுகளில் பெரும் சரித்திரப்பதிவுகளாகிய தலைவர் பிரபாகரனின் படைநடத்தல்களிலெல்லாம் முன்நின்று உழைத்த வீரப்புலி இவன். அவனே வித்தாகி ''ஓயாத அலைகள்-3'' இன் சரித்திரத்திற்காய் தலைசாய்க்க, விடுதலை வரலாற்றில் பெருமைமிக்க அச்சமர் வெற்றிகளால் நிறைந்தது.

ராகவனை இழந்தும் போரரங்கு வெற்றிகளால் நிறைந்தது என்று எப்படிச் சொல்லிவிட முடியும்? அவன் இரவும் பகலுமாய் வளர்த்துவிட்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் போராளிகள் எதிரியரண்களை உடைத்து உட்புகுந்து புளியங்குளம் வரையும் கைப்பற்றி சற்று ஓய்வெடுத்தபோது சொன்னார்களே ''எங்கட சண்டையையும், வெற்றிகளையும் பார்த்து சந்தோசப்பட ராகவன் அண்ணை இல்லாமல் போட்டார். எதிரி அவரை தடையிலேயே வீழ்த்திப்போட்டான். பாவம் எதிரி. அவனுக்கு எப்படித்தெரியும், ராகவன் அண்ணதான் இப்பவும் எங்கட மனங்களுக்குள்ள இருந்து எங்களை வழிநடத்திறார் எண்டு.'' அதுதான் உண்மையில் நடந்தது. ஆம்— தானில்லாத வேளைகளிலும் வீரர்களை வெற்றியின் பாதையில் வழிநடத்தக்கூடிய வழிகாட்டலில் அவனது உயரிய தலைமைப்பண்பு, எங்கள் தலைவன் வளர்த்தெடுத்த அந்த தளபதியிடம் இருந்தது.

**– அ. பார்த்தீபன் –**

ராகவன்! அவன் ஒரு அற்புதமான போராளி. ஆற்றல்மிக்க போர்த்தளபதி. எல்லோரையும் நேசித்ததால் எல்லோராலும் நேசிக்கப்பட்ட ஒரு உயரிய மனிதன். நீண்ட-ஈடிணையற்ற விடுதலைப்போர் வரலாற்றில் அவன் ஓர் அத்தியாயத்தின் பதிவு. அவனின் வரலாற்றை எழுதுவதானால் ஈழப்போரில் தொண்ணூறுகளின பின்னதான போரியலில் முக்கியமான வரலாற்றுக் கட்டமொன்றை எழுதியாக வேண்டும். அக்காலகட்டத்தின் முக்கியத்துவமான போர்க்களங்களில் எல்லாம் சரித்திரம் படைத்த வீரனவன்.

90-91 காலப்பகுதியில் மாவட்ட ரீதியில் நடந்த சிறு, சிறு தாக்குதல்கள் பலவற்றில் பங்குகொண்டவன் ராகவன். அந்தப் புலிக்குள்ளிருந்த இராணுவ ஆற்றல்களையும், போராட்ட உறுதியையும் மணலாற்றில் சிங்களப்படைகளின் ''ஒப்பரேசன் மின்னல்'' வெளிக்கொணர்ந்தது வன்னி மாவட்டத்தின் 1.9 படையணியில் தளபதி தீபனின் 150 வீரர்கள் கொண்ட அணியில் சாதாரண போராளியாக ராகவனும் களம் இறங்கினான்.

போராட்ட வரலாற்றில் மிகவும் கடுமையான போர்க்களங்களில் ''மின்னல்'' களமும் முக்கியமானது. ஆனையிறவில் பாய்ந்த புலிகள் இயக்கத்தை பலவீனப்படுத்தி விட்டதாக கற்பனை செய்த சிங்களம் தமிழீழத்தின் இதயபூமியை ஆக்கிரமித்து விடுதலைப்போருக்கு முடிவு கட்டிவிட எண்ணியது. பல்லாயிரமெனத் திரண்டு, நவீனரக ஆயுதங்களை ஒன்றிணைத்து, சிங்களப்படைகள் போரில் குதித்திருந்தன. எறிகணைகள் விமானக்குண்டுகள் என குண்டு மழைக்குள் குளித்தபடி மண்காத்த மறவர்களுள் ராகவனும் ஒருவனாகப் போரிட்டான்.

உலகில் எந்தவொரு போர்·வீரனும் விருப்பம் கொள்ளமுடியாத கடினமான போர்க்களம் அது. அந்தப் போர்க்களத்தின் ஒவ்வொரு நாட்களுமே ராகவனை நன்கு இனங்காட்டியது. உணவும், நீருமின்றி நாட்கணக்காய் போரிட்ட பொழுதெல்லாம் சுறுசுறுப்பாக இயங்கி முன்மாதிரியாக நின்றுகாட்டிய அந்த வீரனின் செயற்பாடுகள் எமது அணித்தலைவர்களுக்குக்கூட உற்சாகத்தைக் கொடுத்ததென்றால் அது மிகைப்படுத்தப்பட்டதொன்றாக நீங்கள் யாரும் எண்ணிவிடக் கூடாதென்பதே எனது ஆதங்கம். 'மின்னல்' களத்திலேயே சமரின் குறுகிய நாட்களில் தளபதி தீபன் அவர்களால் அவன் ஏழுபேர் கொண்ட அணியொன்றின் தலைவனாக்கப்பட்டான். ஒவ்வொரு புலிவீரனும் வரலாற்றில் பெருமைகொள்ளத்தக்க அந்தச் சமரில் பங்கு கொண்டு 1.9 படையணியில் திரும்பிய ஐவருள் ராகவனும் ஒருவனாக இருந்தான்.

''மின்னல்'' முடிந்து சில நாட்களிலேயே சிங்களப்படைக்கு பேரடி கொடுத்த முல்லைத்தீவு இராணுவ முகாமின் மூன்றாம்கட்டை மினிமுகாமின் மீது பாய்ந்த புலியணியில் ராகவன் பதினைந்து பேர்கொண்ட அணியின் பொறுப்பாளனாக இருந்தான். பத்து சிங்களப்படையினரின் உடல்களும், பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்ட அந்த தாக்குதலில் ராகவனின் அணி தனது பணியை செவ்வனே செய்திருந்தது.

1992 ஆம் ஆண்டில் ராகவன் நன்கு இனங்காணப்பட்ட அணித் தலைவனாயிருந்தான். அவனது ஒவ்வொரு செயற்பாடுகளிலும் அவனது ஆளுமை வெளிப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் அந்த வீரன் செய்த பல வெற்றிகரமான அதிரடித் தாக்குதல்கள் சிங்களப் படைகளை கதிகலங்கச் செய்திருந்தன. வண்ணாங்குளம், கொம்பாவே, செட்டிக்குளம்— என இக்காலப்பகுதியில் மட்டுமே பதின்மூன்றிற்கும் மேற்பட்ட வெற்றிகரமான தாக்குதல்களில் அவன் பங்குகொண்டான். குறுகிய காலத்திலேயே வளர்ச்சிகொண்ட அந்தப் போர் வீரன் இப்போது 45 பேர்கொண்ட அணியொன்றின் பொறுப்பாளனாக்கப்பட்டிருந்தான். வன்னியில் எதிரியிருந்த மூலை முடுக்குகளெல்லாம் அந்தப் புலிவீரனின் துப்பாக்கி சட சடத்து, வழிநடத்தும் அவனின் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

இரண்டாம் கட்ட ஈழப்போரில் புலிகளியக்கத்தின் போரியல் ஆற்றலை வெளிக்கொணர்ந்து, சிங்களத்தின் போர் அரசியல் அரங்குகளை அதிரவைத்து, உலகின் புருவங்களை உயரவைத்த ''இதயபூமி-1'', ''யாழ்தேவி'' க்கு எதிரான முறியடிப்புச் சமர், ''ஒப்பரேசன் தவளை'' ஆகிய களங்களில் தனது அணியுடன் முக்கிய சண்டைகளில் இறங்கி காத்திரமான வெற்றிகளை ஈட்டினான்.

ஒவ்வொரு சண்டையிலும் அந்தப் புலியின் ஆளுமை புடமிடப்பட்டது. அந்த வீரனுக்கு அதிஸ்ரவசமாக எண்ணில் அடங்கா சண்டைக்களங்கள் கிடைத்தன என்பதைவிட அந்த இடங்களிலெல்லாம் அவனின் தேவை அவசியப்பட்டதென்றே சொல்லவேண்டும். அதனாலேயே ராகவனின் சண்டைப் பட்டியல் நீண்டுகொண்டே போனது. வன்னியில் நிலைகொண்டிருந்த சிங்களத்துப் படைகளுக்கு ஒவ்வொரு முனைகளிலும் ராகவன் பாடம் புகட்டினான். 1995ல் 3ம் கட்ட ஈழயுத்தம் மூண்டபோது ராகவனின் பணி யாழ்ப்பாணம் வரை விரிந்தது. குடாநாட்டைப் பிடிக்க தன் பலத்தின் முழுமையையும் திரட்டி இறங்கிய சிங்களத்தின் ''சூரியக்கதிர்'' நடவடிக்கையை அங்குலக் கணக்கில் நகரவைத்த போர்க்களத்திலும் ராகவன் தன் அணியுடன் போரிட்டான்.

''சூரியக்கதிர்'' முடிந்து புலிகள் இயக்கத்தின் போராட்டத் தளம் வன்னிக்குப் பக்குவமாக வந்து சேர்ந்தபோது ராகவன் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் இணைக்கப்பட்டான்.

ராகவன் சாள்ஸ் 'அன்ரனி சிறப்பு' படையணிக்கு வந்ததும் அவனிடம் ஒப்படைக்கப்பட்ட முக்கிய பணிகளை எண்ணிப் பார்க்கிறோம். அவை எத்தனை முக்கியமானவை. அவற்றையெல்லாம் நம்பிக்கையுடன் தலைவரவர்கள் அவனிடம் ஒப்படைத்தபோது எத்தனை அக்கறையெடுத்து, தனது கடின உழைப்பால் அவற்றையெல்லாம் பிசகின்றிச் செய்து முடித்தான்.

யாழ்குடாநாட்டை ஆக்கிரமித்து, திமிர்கொண்டிருந்த சிங்களத்தின் இராணுவக்கற்பனைகளை அர்த்தமற்றதாக்கி, ''புலிகள் ஓய்ந்துவிட்டார்கள்'' எனப் பகற்கனவு கண்டவர்களுக்கு எங்கள் தலைவன் நெத்தியடிகொடுத்த ''ஓயாத அலைகள் -1'' இல் ராகவனிடம் ஒப்படைக்கப்பட்ட பணி எவ்வளவு பிரதானமானது. உறுதிப்படுத்தப்பட்ட வெற்றிக்காக இரவு பகலாய் உழைத்த தலைவர் அந்தப் பணியை அவனிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தபோது அதை திறம்பட செய்து முடித்தான். அத்தளத்தின் பிரதான முகாமின் உயர்பாதுகாப்பு அரண்களை பிரித்தெறிந்து, உள்நுழைந்து அதைக் கையகப்படுத்துவதில்தான் வெற்றியின் நிச்சயத்தன்மை தங்கியிருந்தது. நம்பிக்கைக்குப் பாத்திரமாய் அவன் அதை வெற்றிகர

→



**போராளியின் குருதிச்சுவடுகள்**



www.eelamview.com

மாகச் செய்துமுடித்தான். அதனால் தளம் எமது கைகளில் விழ்ந்தது.

மோதல்கள், சண்டைகள், சமர்கள் என தமிழீழப்போரரங்குகளிலெல்லாம் சுற்றிச் சுழன்றான் ராகவன். சண்டைகளால் ராகவன் புடமிடப்பட்டான் என்பதிலும், சண்டைகளை ராகவன் புடமிட்டான் என்பது அதைவிடப் பொருத்தமாக இருக்கலாம். ஆம் அப்படித்தான் இருந்தது நிலைமை. அறிவாலும், அனுபவத்தாலும் போரியலில் அவன் உயர்ந்து நின்றான். தனது களச்செயற்பாடுகளில் அவற்றை வெளிக்காட்டி தலைவரின் தனிப்பட்ட விருப்பைப் பெற்றிருந்தான். ஒரு தளபதிக்கான கடமைகள் அவனிடம் ஒப்படைக்கப்பட்டன.

போர்முனையில் இறுக்கமான கட்டங்களில் எல்லாம் ராகவன் தேவைப்படுவான். எமது படை நடவடிக்கைகள் இறுக்கமான கட்டங்களைச் சந்தித்த பல சந்தர்ப்பங்களில் எல்லாம் அவற்றை உடைத்தெறிந்து எமக்கு சாதகமான நிலைமைகளை அவன் பெற்றுத்தந்திருக்கிறான். அப்படியான வேளைகளில் எல்லாம் எங்கள் மூத்த தளபதிகளின் கண்களுக்குத் தெரிபவர்களுள் ராகவன் முக்கியமானவன். ''இக்கட்டான வேளைகளில் எல்லாம் நேரிலேயே களமிறங்கி நிற்கும் தலைமைப் பண்பு அவனிடம் இருந்தது'' என்றார் தளபதி கேணல் தீபன். ''முன்னரங்க போர் நிலைகளில் தனது போராளிகளுக்கு சண்டையில் வைத்தே சண்டை பழக்கும் தளபதி அவன்'' என்று ராகவனின் தலைமைத்துவத்தை நினைவு கூர்ந்தார் தளபதி கேணல் கருணா.

புளியங்குளத்தில் முகாமமைத்து நிலைகொள்ள எடுத்த எமது இயக்கத்தின் முடிவிற்கு சவாலாக அமைந்திருந்தது, எதிரியின் அன்றைய நகர்வு. எமது பாதுகாப்பு அரண்கள் இல்லாத பகுதியை நோக்கி சன்னாசிப்பரந்தன் ஊடாக புளியங்குளத்தை நெருங்கிக்கொண்டிருந்தான் எதிரி. இக்கட்டான சூழல், எதிரியின் முன்னேற்றத்தை உடனடியாகவே முறியடித்தாக வேண்டும். அந்தப் பலப்பரீட்சையில் நிச்சயம் நாம் வென்றேயாக வேண்டும். தளபதி தீபனின் கண்களுக்குள் ராகவன் நின்றான். ''நான் செய்து முடிப்பன்'' ராகவனின் உருவம் சொல்லாமல் சொன்னது. ராகவன் உடனடியாகவே களமிறக்கப்பட்டான்.

முப்பது போராளிகளை மட்டும்கொண்ட அணியுடன் ராகவன் களமிறங்கினான். எதிரியை வழிமறித்து, ஊடறுத்து எமது பாதுகாப்பு நிலைகளை அமைக்கக் கூடிய பகுதியொன்றின் ஊடாக ராகவன் தனது அணியுடன் உட்புகுந்தான். எதிரியோ மிகக்கடுமையாகச் சண்டை செய்தான். எந்தக் கட்டத்திலும் விட்டுக் கொடுக்க எதிரி தயாரில்லை. களத்தில் ராகவன் நின்றதால் எல்லோர் மனதிலும் நம்பிக்கை இருந்தது; தங்களுடன் ராகவனும் நின்றதால் களத்தில் இருந்த போராளிகளிடம் உற்சாகம் பிறந்தது. இறுதியில் எதிரியை சின்னாபின்னமாக்கி அந்த கடினமான சண்டையை எல்லோரும் நம்பிக்கை வைத்தபடியே செய்துமுடித்தான், அந்த புலிப்போர் தளபதி. புளியங்குளத்தை புலிக்குகையாக்க உழைத்த அந்த வீரன், இறுதியில் சவாலாக வந்த எதிரியின் நகர்வை சவாலாக எதிர்கொண்டு அந்த புலிக்குகையைக் காத்தான். எதிரிக்கு புலிகள் பற்றிப் பாடம் புகட்டினான்.

தென்முனையில் தமது இயலாமையை உணர்ந்துகொண்டு, வடமுனையில் கிளிநொச்சி யூடாக புதிய களமுனையொன்றைத் திறப்பதற்கு எதிரி தயாராகி வந்தபோது ''ஜயசிக்குறுய்'' எதிர்ச் சமரின் துணைக் கட்டளைத் தளபதி கேணல் தீபனுடன் கிளிநொச்சி களமுனைக்குப் புறப்பட்டான் ராகவன். அங்கே அந்த போர்த்தளபதி தமிழீழத்தின் புகழ்பூத்த சாள்ஸ் அன்ரனியின் சிறப்புப் படையணியின் தளபதியானான். அப்போது கிளிநொச்சித் தளத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக அந்த வீரன் நிறைய உழைக்கவேண்டியிருந்தது. 1998 பெப்ரவரியில் கிளிநொச்சித் தளத்தின் மீது புலிகள் பாய்ந்து தளத்தின் தென்பகுதியை வீழ்த்தியபோது அப்பகுதியில் சண்டைக்காக நியமிக்கப்பட்ட எமது ''ராங்'' அணியின் நகர்வு வழிநடத்துனனாக ராகவன் இருந்தான். அதன்பின் எமது முன்னணி அரண்களை எதிரிக்கு அருகாமைவரை நகர்த்தி, நெருங்கிய சண்டையில் எதிரியை அச்சுறுத்த பாதுகாப்புப் பணியில் அவன் நின்றான். அவனது உழைப்புக்கு சவாலாக எதிரி எழுந்த ஒவ்வொரு தடவையும் ராகவன் பாடம் புகட்டினான். அவன் புகட்டிய பாடங்கள் இலங்கை இராணுவத்தின் வரலாற்றில் அவர்களால் என்றைக்குமே மறக்கமுடியாத அளவு முக்கியத்துவம் பெற்றவை.

1998 ஏப்பிரல் நான்காம் நாளன்று கண்டி வீதிக்கு மேற்குப் புறமாக பல முனைகளில் எமது பாதுகாப்பு நிலைகளை உடைத்து எதிரியின் முன்னணிப் படையணிகள் உட்புகுந்து விட்டன. முன்னணி அரண்களில் குறிப்பிடக் கூடிய பகுதியை எதிரி கைப்பற்றி விட்டான். அப்பகுதியில் நிலைகொண்டிருந்த எமது அணிகளும் சேதமடைந்திருந்தன. மிகவும் நெருக்கடியானதொரு களநிலைமை. உடனடியாகவே எதிரியை முறியடிக்க வேண்டும். தளபதி கேணல் தீபன் அனுப்பிவைத்த உதவியணிகளை வைத்து அவரின் கட்டளையின் கீழ் களத்தில் நின்று படைநடத்தினான் ராகவன். நீண்ட நேர 'மரணச் சண்டையின்' பின் எதிரியை ஊடறுத்து, முற்றுகைக்குள்ளாக்கி உள்நுழைந்தவர்களை அழித்து முடித்துத்தான் மூச்சுவிட்டான் அந்த தளபதி. சிங்களத்தின் முன்னணி தாக்குதல் படையில் 200ற்கும் மேலான வீரர்கள் சிதறிச் சின்னாபின்னமாகி வீழ, தமிழர்சேனை வெற்றிவாகை சூடியது. ஐம்பது எதிரி உடல்களும், ஏராளம் ஆயுதங்களும் மீட்கப்பட்ட அந்த வெற்றித் தாக்குதலை நேர்நின்று செய்வித்தவன் தளபதி ராகவன்.

மீண்டும் நான்கு நாட்களில், அடிபட்ட பாம்புபோல் சிறி சிங்களப் படைகள் முன்னேறி வந்தன. இம்முறையும் சிங்களத்தின குறியிலக்கு அதே ராகவனின் பகுதிதான். எமது காவலரண் வரிசையை பலமுனைகளில் உடைத்து உட்புகுந்துவிட்டான் எதிரி. இம்முறையும் அதே இறுக்கிய சூழல். சென்ற தடவை போலவே இப்போதும் சிங்களப் படைகளுக்கு பாடம் புகட்டினான் ராகவன். சிறிய பாம்புகள் உயிரை விட, எஞ்சியவை பெட்டிப் பாம்புபோல் அடங்கிப் போயிற்று. அன்றைய நாட்களில் எங்கள் தளபதியின் படை நடத்தலால் கிளிநொச்சி மண் தமிழர் வரலாற்று முக்கிய பதிவுகளைப் பெற்றுக்கொண்டது.

போரியலில் முதிர்ச்சிபெற்றிருந்த அந்த வேங்கை இப்போது எதிரியாலும் நன்கு அறியப்

முதல் நாள் சண்டை உக்கிரமான கட்டத்தை எட்டியிருந்தது. எமது கைகளில் காவலரண்கள் வெற்றிகரமாக விழ்ந்தன. ஆயினும் அன்றைய தொடர் சண்டையில் மீண்டும் அவற்றில் அனேகம் எதிரியின் கைக்கு மாறியது. சண்டை நிலைமைகள் எதிரிக்கு சாதகமாக மாறிவிட்ட சூழல். எப்படியாவது அந்த நிலையை மாற்றியமைத்தேயாக வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு மணித்தியாலமும் சிக்கல்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கும் நிலைமை. இப்போது களத்திற்கு ராகவன் போகவேண்டியிருந்தது. நிலைமையை உணர்ந்துகொண்டு தளபதி தீபனிடம் அனுமதி பெற்று சேமஇருப்பு அணியொன்றுடன் எமக்கு சாதகமற்ற பட்டப்பகலில் களமிறங்கினான் ராகவன்.

எதிரி மிகுந்த உளவியற்பலத்துடன் உற்சாகமாகச் சண்டையிட்டுக்கொண்டிருக்க எமது அணிகள் பின்னடைவைச் சந்தித்து நின்ற முனையொன்றினூடாக ராகவன் களமிறங்கினான். எதிரியின் அத்தனை துப்பாக்கிகளும் உதவிகளைத் தடுக்கும் பொருட்டு ராகவனின் அணியைக் குறிவைத்துத் தாக்கின எதிரியின் குண்டு மழைக்குள்ளால் தனது அணியுடன் உள்ளே போய்சேர்ந்தான் எங்கள் தளபதி. எதிரியை அடித்து பின்னகர்த்தி காயப்பட்ட, வீரச்சாவடைந்த போராளிகளை பின்னே அனுப்பிவைத்துவிட்டு அணிகளை ஒழுங்கமைத்து சண்டையைத்தொடர்ந்தான் அவன். எதிரியின் முறியடிப்புப் பற்றிய கற்பனைகளையெல்லாம் தகர்த்து சண்டையணிகளை முன்னகர்த்தி அன்றைய பொழுது புலருவதற்கிடையில் களநிலையை மாற்றி வைத்தான் ராகவன். ''ராகவன், ஓயாத அலைகள் -2 வெற்றியின்



ஓயாத அலைகள் – 03, சமர்முனை

பட்டிருந்தான். ராகவன் என்றால் யார் என்பதை தனது படை நடத்தல் மூலம் எதிரிக்குச் சொல்லிவைத்திருந்தான் அவன். ராகவன் நிற்கும் பகுதியென்றாலே எதிரி அதீத கவனம் எடுப்பான். ஏனெனில் ராகவனிடம் 'பாடம் படிப்பதற்கு' சிங்களத் தளபதிகளால் இனியும் உயிர்விலை செலுத்தமுடியாது.

1998 ஒக்டோபர் மாதங்களில் சுமை இரட்டிப்பானது. 'ஓயாத அலைகள்-2'ற்காக இயக்கம் தயாராகிக்கொண்டிருந்த காலப்பகுதி அது. ஓய்வுறக்கம் இன்றித் திரிந்தான் ராகவன். முன்னணி நிலைகளில் எமது பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கண்காணித்து அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, பயிற்சியில் ஈடுபட்ட போராளிகளை உற்சாகப்படுத்தி அதைத் திறம்படச் செய்விப்பது என எல்லாவற்றிலும் அவன் உழைத்தான்.

''ஓயாத அலைகள் -2'' புலிகள் பாய்வதற்கான நாள் வந்திருந்தது. தலைவரைச் சந்தித்து திட்டங்களை அறிந்து புலிச்சேனை தயாராகியிருந்தது. பிரதான பகுதியொன்றின் துணைத் தளபதியாக ராகவன் நியமிக்கப்பட்டிருந்தான். எனினும் அந்தத் தளப்பகுதியில் மேலும் அவனையொத்த அனுபவம் வாய்ந்தவர்கள் களமிறக்கப்பட்டிருந்ததால தளபதி கேணல் தீபனின் கட்டளை மையத்தில் ராகவன் நிற்கப் பணிக்கப்பட்டான். அந்நடவடிக்கையில் முன்னணிக் காவலரண்களைக் கைப்பற்றுவதற்கு பொறுப்பாக இருந்த தளபதி தீபனுக்கு உதவியாக அவன் செயற்பட்டுக் கொண்டிருந்தான்.

திறவுகோல்'' என்கிறார் தளபதி கேணல் தீபன்.

''ஓயாத அலைகள் - 2''இன் சில மாதங்களின்பின் ராகவனை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியாக தலைவர் அவர்கள் நியமித்தார். தலைவரால் பற்பல எதிர்பார்ப்புகளுடன் உருவாக்கப்பட்ட புகழ்பூத்த படையணியொன்றிற்கு தலைவராலேயே பொறுப்பாக நியமிக்கப்பட்ட ராகவன், தலைவரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றிச் செய்து முடிக்க வேண்டும் என்ற பேரவாவுடன் மேலும் மேலும் கடுமையாக உழைத்தான். படையணிக்கு புதிதாக வந்த போராளிகளை வைத்து அந்தச் சண்டைப் படையணியின் போர்த் திறனை மேலும் மேலும் வளர்க்க ராகவன் அயராது பாடுபட்டான். அவனது உழைப்பின் அறுவடைக்கான நாளும் வந்திருந்தது.

''ஓயாத அலைகள்-3'' தாக்குதல் திட்டம் விளக்கப்பட்டு, தலைவர் அவர்களால் மிகவும் பிரதானமான சண்டை முனையொன்றின் நேரடித் தளபதியாக ராகவன் நியமிக்கப்பட்டான். நம்பிக்கையுடன் தலைவர் தன்னிடம் ஒப்படைத்த பணியை தனது படையணியை வைத்து வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்காய் அவனது மூளை இடையறாது சிந்தித்தது. விடுதலைக் களத்தில் ஓய்ந்து கிடந்த அந்தப் புயல் ''ஓயாத அலைகள்-3'' இன் அத்தியாயத்தை திறந்துவைத்தது. பிரதான முனையொன்றின் ஊடாக களத்தைத் திறந்தது.

( 19ம் பக்கம் பார்க்க )





www.eelamview.com

# ஓயாத அலைகள் - 03

## ஒரு இராணுவ ஆய்வு

இரண்டரை வருடப் போருக்குப் பின்னர் இந்தியப்படைகள் தமிழீழ மண்ணை விட்டு வெளியேற்றப்பட்டபோது கெரில்லா இயக்கம் என்ற தராதரத்திலிருந்து விடுதலைச்சேனை என்ற நிலையை புலிகள் இயக்கம் எட்டியது.

இந்த விடுதலைச்சேனை ஒரு மரபுவழி இராணுவமாக பண்புமாற்றம் பெறும் காலகட்டமாக 1990-91 விளங்கியது.

மாங்குளம்- கொக்காவில் இராணுவத்தங்ககங்கள் தாக்கியழிக்கப்பட்டு நிலத்தை மீட்டெடுத்த இராணுவ நிகழ்ச்சியும்- ஆ.க வெ. பெரும் தாக்குதலின்போது ஆனையிறவுத்தளம் மீதும், அதையொட்டிய பகுதிகள் மீதும் நடந்த ஒருமாதச் சமரும் சிங்களத்திற்கு அந்த ஆபத்தை உணர்த்தியது.

ஒரு மரபுப்படையாக புலிகள் இயக்கம் வளர்ச்சி பெறுவதற்கு யாழ்ப்பாணக்குடாநாடு சகலவிதத்திலும் வாய்ப்பாகவுள்ளது என சிங்களத்து இராணுவ நிபுணர்கள் கணித்தனர்.

அதனால் குடாநாட்டை ஆக்கிரமித்து அந்த இராணுவ வாய்ப்பை புலிகள் இயக்கத்திற்கு மறுக்க சிங்களப்படைத்தலைமை முடிவெடுத்தது. ஜெனரல் கொப்பேகடுவ தலைமையில் குடாநாட்டைக் கையகப்படுத்த திட்டம் வரைந்து- செயற்படுத்த முனைந்தது.

பேரினவாதத்தின் இராணுவ நட்சத்திரமான கொப்பேகடுவ உட்பட அன்றைய குடாநாட்டுப் படைத்தலைமையை அழித்த வரலாற்றுப் புகழ்மிக்க அராலிக்குண்டு, குடாநாட்டு ஆக்கிரமிப்புத் திட்டத்தைப் பொடிப்பொடியாக்கியது.

சந்திரிகா-ரத்வத்த தலைமை சிங்கள இராணுவ இயந்திரத்தின் இயக்குனர் பதவியை பொறுப்பேற்றபோது குடாநாட்டைக் கைப்பற்றும் திட்டம் புதுப்பிக்கப்பட்டது.

பெருந்தொகைப் படையாட்களையும்-பிரம்மாண்டமான அளவில் படைக்கலச்சக்திகளையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தி குடாநாட்டையும் ஆக்கிரமித்து- புலிகளை அழித்தல் என்ற போர்வையில் ஆயிரக்கணக்கில் தமிழர்களையும் கொன்று - தமிழ்மக்களுக்கு ஒரு 'பாடம்' படிப்பித்து, தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போராட்டத்தை நசுக்க சந்திரிகா-ரத்வத்த தலைமை சதித்திட்டம் வகுத்தது.

சூரியக்கதிர் என்ற பெயரில் அந்தப் பெருநாசம் வலிகாமத்தைச் சூழ்ந்தது. தலைவர் பிரபாகரனின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் வலிகாம மக்கள் பாதுகாக்கப்பட்டனர். பின்னர் புலிகளின் சண்டைதவிர்ப்புத் தந்திரோபாயத்தால் ரிவிரச-2, ரிவிரச-3 சண்டைகளில்லாத இராணுவ நடவடிக்கைகளாகின. குடாநாடு படையினரின் ஆக்கிரமிப்பிற்குள் சென்றது.

படைத்தலைமை விரும்பியது போல மரபுவழிப் படையாக வளரும் வாய்ப்பை வழங்காத வன்னிப் பெருநிலப்பரப்பு புலிகள் இயக்கத்தின் இராணுவமையமானது.

வன்னியில் புலிகள் மரபுவழிப்படையாக வளரமுடியாது என்று சிங்களம் கணித்ததற்கு நியாயமான புறக்காரணிகள் உண்டு.

☆ மரபுப்போருக்கு மருத்துவவசதி அத்தியாவசியமானது. வன்னியில் அது போதியளவில் இல்லை என்பது ஒரு காரணம்.

☆ மரபுப்படைக்கு ஆட்பலம் அடிப்படையானது. வன்னியின் குறைந்த குடித்தொகை அதிக ஆட்சேர்ப்புக்கு வாய்ப்பளிக்காது என்பதும் ஒரு காரணம்.

☆ இரகசியமானதும் - வேகமானதுமான படைநகர்த்தலுக்கு வேண்டிய போதிய சாலைவசதிகள் வன்னியில் இல்லை என்பது இன்னொரு காரணம்.

☆ மரபுவழிப் போர்முறையில் மறிப்புச் சண்டைகள் முக்கிய இடம்பெறுகின்றன. இந்த வகைச் சண்டைமுறைக்கு தகுந்த காப்பரண் வசதிகள் அவசியம் தேவை. மரபுப்போரை புலிகள் இயக்கம் நடாத்துவதற்கு காப்பரண்களுக்கு வாய்ப்பான புறநிலை வசதிகள் வன்னியில் இல்லை. உதிரும் மண் வகையால் உறுதியான நிலப் பதுங்ககழிகளுக்கும் வாய்ப்பில்லை. இதேவேளை, களமுனைக்கோட்டைகளான காப்பரண்கள் - பதுங்ககழிகள் கட்டத்தேவையான கட்டடப்பொருட்கள் வன்னியில் இல்லை. இவையும் காரணங்கள்.

☆ இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பது போல வன்னியின் விரிந்து பரந்த நிலப்பரப்புடன், தமது முப்படைப்பலத்தையும் இணைத்து சமர்களைத் தமக்குச் சாதகமாக நடாத்தி 'எஞ்சிய' புலிகளை அழிக்கும் ஏதுநிலைகள் வன்னிக் களத்திற்கு உண்டென்றும் சிங்களத் தளபதிகள் கணித்தனர்.

இவைகாரணமாக வன்னிப்பெருநிலப்பரப்பில் புலிகளுடன் நடக்கப்போகும் சண்டைகள் மகிழ்ச்சியான மரதனோட்டத்தைப்போல சிங்களப்படையினர்க்கு இருக்கும் என்றும் சிங்களம் கணித்தது.

அஞ்சலோட்டப்படையெடுப்புப் பாணியிலான இராணுவ மரதனோட்டத்தை சிங்களப் படைகள் தொடங்கின.



ஓயாத அலைகள் – 03 வெற்றிகொண்ட படைக்கல ஊர்திகளுடன், தளபதி கேணல் தீபன்

வன்னியின் மேற்குமுனையூடாக மன்னாரின் தள்ளாடி நோக்கி எடிபல புறப்பட்டது. வழியெங்கும் மயான அமைதி நிலவ, படையினர் வியர்வைவடிய நடந்து தள்ளாடி சென்றடைந்தபோது, சிந்திப்பதற்குப் பதிலாக சிங்களப் படைத்தலைமை சிந்தையிழந்து மமதை கொண்டது.

தமது கணிப்பின் பிரகாரம் இராணுவ நிகழ்ச்சிகள் நடைபெறப்போகின்றன என சிங்களப்படைத்தலைமை இறுமாந்திருந்தது. அந்தப் படைத்திமிர் அடுத்த இராணுவ நடவடிக்கையின் பெயர் சூட்டலில் பகிரங்கமாக வெளிப்பட்டது.

'வெற்றி உறுதி' என முரசுதட்டியபடி ஜயசிக்குறுய் புறப்பட்டது. போர் சம்பந்தப்பட்டிருந்த விடயங்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து கைகோர்க்கும் நாள் என சிங்களத்தின் சோதிடர்கள் கணித்தெடுத்த 1997, மே,13ம் நாளில் இருதலைப்பாம்பாக- இருமுனைகளூடாக ஜயசிக்குறுய் புறப்பட்டது. சந்திரிகா அம்மையாரின் கணவர் விஜயகுமாரணதுங்கா நாயகனாக நடித்த வெற்றிப் படத்தின் பெயரும் ஜயசிக்குறுய் என்பதால் அம்மையாருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

ஜயசிக்குறுயின் இராணுவ நோக்கம் உடனடி அபாயத்தை விளைவிக்க வல்லது. பெருநிலப்பரப்பை இரண்டாகப்பிளந்து - பாதை சமைத்து குடாநாட்டுப் படையையும் ஒருங்கு சேர்த்துக்கொண்டு வன்னியை ஒட்டுமொத்தமாக துடைத்தழிக்கும் நாசகாரத்திட்டத்தைக் கொடிருந்தது. அதனால் புலிகள் இயக்கம் தவிர்க்கவிரும்பிய மரபுவழிச் சண்டை தவிர்க்க முடியாததாகியது. ஜயசிக்குறுயை செயலிழக்கச் செய்விக்க தலைவர் பிரபாகரன் தீர்மானித்தார். ''சமர்களுக்கெல்லாம் தாய்ச்சமர்'' என அவர் வர்ணிக்கும் அளவுக்கு ஜயசிக்குறுய் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. ஜயசிக்குறுய் படைக்கு எதிரான மரபுச்சண்டைகள் மற்றும் வலிந்ததாக்குதல்களின் தீவிரத்தால் சிங்களப் படை பலத்த சேதத்தைச் சந்தித்தது. போய்ச் சேரவேண்டிய கிளிநொச்சிப் படைத்தளத்தைப் புலிகள் கைப்பற்றினர். புறப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியாத களநிலைமை எழுந்ததும் திரும்பிச் சென்றிருக்க வேண்டிய ஜயசிக்குறுய் திரும்ப மறுத்து இடை நடுவில் தரித்து இராணுவத்தவறிளைத்தது.

வன்னி அரங்கில் சுமார் ஒரு வருடகாலம் நடந்த ஜயசிக்குறுய் நடவடிக்கையில் 3000 படையாட்கள் பலியாகினர். 7000 பேர் படுகாயம் பட்டனர். பலகோடிரூபா பெறுமானமுள்ள படைத்தளபாடங்களை சிங்களப்படை இழந்தது. விஜய குமாரணதுங்காவின் ஜயசிக்குறுய் படம் அடைந்த வசூல்வெற்றி அம்மையாரை மகிழ்ச்சிக்குள்ளாக்கியிருக்கலாம். ஆனால், ஜயசிக்குறுய் எதிர்ச்சமரில் புலிகள் இயக்கம் சிறந்ததொரு இராணுவ அறுவடையை நிலைநாட்டி அம்மையாரின பேரினவாத ஆசைக்கு பலத்த அடிகொடுத்தது. ஒரு பொய்யை மறைக்க பத்துப் பொய்களைச் சொல்வதுபோல ஒரு இராணுவத்தோல்வியை மறைக்க, தோல்விகளை உள்ளடனாகக்கொண்ட இன்னும் சில இராணுவ நடவடிக்கைகளை சிங்களப் படைத்தலைமை நடாத்தியது.

ஜயசிக்குறுய் செயற்படமுடியாமல் போனவுடன் ரிவிபல, ரணகோச, வோட்டர்ஷெட் என வன்னிப்பெருநிலப்பரப்பில் படையினரின் இராணுவ அஞ்சலோட்டம் தொடர்ந்தது.

ஜயசிக்குறுயைப்போல ரணகோச-வோட்டர்ஷெற் நடவடிக்கைகள் படைத்தரப்பிற்கு பலத்த இழப்புக்களைக் கொடுத்தன. தனது மரபுப்படைப்பலத்தை ஒருங்குகுவித்து பயன்படுத்தியும், புலிகள் மரபுவழிச் சண்டைகள் மூலம் தகுந்த பதிலடிகளைத் தொடுத்தனர்.

வன்னி மண்ணில் புலிகள் இயக்கம் ஒரு மரபுவழிப்படையாக வளரமுடியாது என்ற சிங்களத்தின் இராணுவக் கணிப்பை, ஜயசிக்குறுய் - ரணகோச - வோட்டர்ஷெற் போன்றவற்றிற்கெதிரான எதிர்ச்சமர்கள், பொய்யாக்கின. எனினும் சிங்களத்தின் படைத்திமிர் இந்தக் களயதார்த்தத்தை ஏற்கமறுத்தது.

மரபுப்படையாக புலிகள் வளர வன்னியில் இருந்த பாதகநிலைகள் அனைத்தையும், தலைவர் பிரபாகரன் அவர்கள், தனது திட்டமிட்ட செயற்பாடுகளால் மாற்றுஏற்பாடுகள் செய்து -மாற்றியமைத்து- ஒரு தரமான மரபுப்படையாக புலிகள் இயக்கத்தை வளர்த்தெடுக்க வன்னிப்பெருநிலப்பரப்பையே தயார்ப்படுத்தி இராணுவ சாதனை புரிந்துள்ளார்.

→



www.eelamview.com

இதேவேளை, அடைக்கோழியை முழுங்கிய புடையன்பாம்புபோல சிங்களப்படை நிலம் விழுங்கி ஊதிப்பருத்தபடி உள்ளுக்குள் அவதிப்பட்டதை தலைவர் மிகச்சரியாகக் கண்டறிந்தார்.

சிங்களப்படை மேலும் - மேலும் நிலம் விழுங்கும் பேராசையில் படைநகர்வுத் திட்டங்களை வகுக்க; சிங்களம் விழுங்கிய வன்னியின் நிலத்தை மீட்டெடுக்க தலைவர் அவர்கள் ஓசைப்படாமல் திட்டங்களை வகுத்து - தாக்குதல் தந்திரோபாயங்களை வரைந்து - போராளிகளுக்குப் பயிற்சிகளைக் கொடுத்து தயார்ப்படுத்திக்கொண்டிருந்தார். '' -பயிற்சி -தந்திரம் -துணிவு'' என்ற தலைவரின் இராணுவ மந்திரத்தை சிரமேற்கொண்டு மாபெரும் தாக்குதலுக்காக புலிவீரர்கள் தயாராகிக்கொண்டிருந்தனர்.

புலிகளின் நிரந்தரப்படைக்கு துணைப்பலம் சேர்க்க வன்னி வாழ் மக்களுக்கு ஆயுதப்பயிற்சிகளை வழங்கும்படி தலைவர் ஆணையிட்டார். எல்லைப்படை கிராமியப்படை என்ற பெயர்களில் மக்கள் படையைக் கட்டும் பணிகள் முடுக்கிவிடப்பட்டன.

01.11.99 அன்று நள்ளிரவு ஒட்டுசுட்டான் இராணுவத்தளம் மீது போராளிகளைக் களமிறக்கி, ஓயாத அலைகள் -03 என தாக்குதலுக்குப் பெயர்சூட்டி வேக ஓட்டப்பாணியிலான ஒரு தொடர் தாக்குதல் திட்டத்தை தலைவர் பிரபாகரன் தொடக்கிவைத்தார். நாளொன்றுக்கு ஒரு படைத்தளம் என்ற ரீதியில் சிங்களப்படைமுகாங்கள் புலிகள் வசமாகின. அந்தப் பகைத்தளங்களின் ஆதிக்கத்திற்குள் இருந்த தமிழர் நிலங்களும் விடுவிக்கப்பட்டன.

இரண்டரை வருட காலமாக 5000 படையினரைப் பலிகொடுத்து 12,000 படையினரைப் படுகாயத்திற்குள்ளாக்கி சிங்களப்படைகள் மூக்கி-முனகி-முயன்று பிடித்த வன்னிப் பெருநிலப்பரப்பின் பெரும்பகுதியை ஆறுநாள் சிங்க வேட்டையில் அடித்து மீட்டெடுத்த இராணுவ அற்புதத்தை தலைவர் பிரபாகரன் நிகழ்த்திக்காட்டியுள்ளார். ஆழம் அறியாமல் அகலக்கால் வைத்த சிங்களம் அதற்கான தண்டனையைப் பெற்றுக்கொண்டது.


முல்லைத்தீவுத் தளத்தைப் புலிகள் அடித்து மீட்க-படையினர் கிளிநொச்சியை ஆக்கிரமித்தனர். கிளிநொச்சியைப் புலிகள் தாக்கிக் கைப்பற்ற படையினர் மாங்குளத்தைக் கைப்பற்றினர். ஒரு நகரத்திற்குப் பதில் இன்னொரு நகரம் என சிங்கள ஆய்வாளர்கள் திருப்திப்பட்ட காலம் இம்முறை காலமாகிவிட்டது.

ஒலும்பிக் வேகத்துடன் ஒட்டுசுட்டானுக்குள்ளிருந்து ஓயாத அலைகள்-3 புறப்பட்டபோது ஆக்கிரமிப்பிற்குள் துவண்டு கிடந்த வன்னியின் நகரங்கள் வரிசையாக புலிகள் வசமாகின. ஒரு நகரத்தை புலிகளிடம் பறிகொடுத்து விட்டு, மறு நகரத்தைக் கையில் வைத்திருக்க முயன்று-இயலாமையால் கைவிட்டோடி, அடுத்த நகரத்தையும் துறந்து, ஆட்டிலறிகளை இழுத்துக்கொண்டு வவுனியா வரை புறமுதுகிட்டோடவேண்டிய கையறு நிலையில் சிங்களப்படையிருந்தது.

ஆக்கிரமிக்கப்பட்டிருந்த வன்னி நிலத்தின் பெரும்பகுதியை மீட்டதுடன், கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக படை ஆக்கிரமிப்பிற்குள்ளும் - சிங்களக்குடியேற்றத்தாலும் அபகரிக்கப்பட்டுள்ள மணலாற்றின் கணிசமான பகுதி தமிழ்க் கிராமங்கள் மீட்கப்பட்டது. போராட்டத்துக்கு புதியதொரு அரசியல்-இராணுவ பரிமாணத்தைக் கொடுத்துள்ளது

தமிழர் சேனையின் மரபுவழித்தாக்குதலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் 10ற்கும் மேற்பட்ட படைத்தளங்களையும் - படையின் இராணுவத்தங்ககங்களையும் -150 கி. மீற்றர் நீள இராணுவ வேலியில் அமைக்கப்பட்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவல் அரண்களையும் - இவற்றின் ஆதிக்கத்திற்குள் இருந்த சுமார் 2000 ச.கி. மீற்றர் நிலப்பரப்பையும் கைவிட்டு ஓடச்செய்த ஓயாத அலைகள்-3, தமிழரின் விடுதலைப்போராட்டத்தில் மாபெரும் இராணுவப் பிரளயத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிங்களத்தின் முதல்தர சிறப்புப்படையணி




கள் உட்பட 15,000ற்கும் அதிகமான ஆட்தொகையைக் கொண்ட சண்டைப் படையணிகள் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது பின்வாங்கி ஓடிய இராணுவநிகழ்ச்சி சிங்களப்படைத் தலைமையையும் அரசியற் தலைமையையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இதை ஒரு அவமானகரமான தேசியத் தோல்வியாக சிங்களத் தேசியவாதிகள் கருதுவர் என்பது திண்ணம். மீட்கப்பட்ட அந்த பாரிய நிலப்பரப்பை புலிகள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கபடி-மேலும் படையினருடன் மோதுவது அவர்களின் மரபுப்போர் ஆற்றலின் வளர்ச்சியை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது.

சோழப்பேரரசின் காலத்திற்குப் பிறகு - சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர்-சிங்களப்படை நிலைகொண்டிருந்த இராணுவப் பிராந்தியம் ஒன்றிலிருந்து, தமிழர் சேனையால் ஒட்டுமொத்தமாக, அது ஓட - ஓட அடித்து விரட்டப்பட்ட வரலாற்று நிகழ்ச்சியாக ஓயாத அலைகள்-3 பதிவாகிவிட்டது.

போர்மூலம் புலிகளை அடக்கி, தமிழரின் விடுதலைப்போராட்டத்தை நசுக்கலாம் என்ற பேரினவாதத்தின் இராணுவ நம்பிக்கையை ஓயாத அலைகள்-3 தகர்த்தெறிந்துவிட்டது. அத்துடன், அத்துமீறிய சிங்களக்குடியேற்றங்கள் வாயிலாக தமிழர் நிலத்தை அபகரித்து சிங்களமயப்படுத்தலாம் என்ற பேரினவாத முயற்சி, மணலாற்றுக் குடியேற்றங்களுக்கு நடந்துள்ள கதியால், பலத்த அடிவாங்கியுள்ளது.

இதேவேளை, ஆயுதப்போராட்டம் வாயிலாக தமிழரின் அரசியல் இலட்சியமான தமிழீழத் தனியரசை, தலைவர் பிரபாகரன் தலைமையிலான புலிகள் இயக்கம் அமைத்து வெற்றிவாகைசூடும் என்ற அரசியல் நம்பிக்கையை ஓயாத அலைகள்-3 அசைக்க முடியாத அளவுக்கு தமிழ் மக்களிடம் புகுத்தி விட்டது.

ஒரு போரில் சில சமர்கள் வரலாற்றுத் திருப்புமுனைகளாக அமைந்து போரின் போக்கை திசைமாற்றிவிடுவதுண்டு. தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவகையில் ஓயாத அலைகள் என்ற பெயரில் நடந்து முடிந்த மூன்று பெரும் தாக்குதல்களும் அத்தகைய வரலாற்றுப் பாத்திரத்தை வகிக்கும் என்பது திண்ணம். எனினும், ஓயாத அலைகள் -3 திண்ணமானவகையில், போரில் திருப்பு முனையை ஏற்படுத்திய சமராக இருக்கப் போகின்றது.

சிங்களப்படையின் தோல்வியின் ஆரம்பமாக ஓயாத அலைகள் -3 விளங்கப்போகின்றது.

இரண்டாம் உலகப்போரின்போது தனது இராணுவக் கொள்ளைவையும் மீறி பேராசையுடன் சோவியத்யூனியனை விழுங்க கிட்லரின் படை புறப்பட்டது. ஒப்பரேசன் பார்பறோசா என்ற பெயரிலான அந்தப் பெரும் படையெடுப்பை, கறையான் அரிப்பதுபோல சிறுகச்சிறுக அரித்த சோவியத்படை, இறுதியில் தோற்கடித்தது. ஒப்பரேசன் பார்பறோசாவின் தோல்வி, கிட்லரது ஜேர்மனியப் படைக்குதோல்வியின் ஆரம்பமாக மாறியது. சோவியத் மண்ணைவிட்டே அது துரத்தியடிக்கப்பட்டது.

இந்திய - புலிகள் போரின் போது தலைவர் பிரபாகரனை இலக்குவைத்து இந்தியப் படைகள் செக்மேற் இராணுவ நடவடிக்கையை தொடங்கின. தலைவரின் நேரடி வழிகாட்டலில் நடந்த எதிர்ச்சமரில் இந்தியப்படைகள் தோற்றன. அந்தத் தோல்வி இந்தியப்படைகளின் வெளியேற்றத்திற்கு கட்டியம் கூறியது. தமிழீழ மண்ணை விட்டு, தோல்வியுடன், தம் நாடுதிரும்பின இந்தியப்படைகள்.

இதேபோன்று புலிகள் இயக்கத்திற்கு எதிரான வன்னிப்படையெடுப்பை ஓயாத அலைகள் -3 முறியடித்துவிட்டது. சிங்களம் சந்தித்த இந்த இராணுவத் தோல்வியை, அதற்கு தொடர்ந்த தோல்விகளாக ஏற்படுத்தவேண்டும். இதற்கு தமிழர் சேனையின் பலம் தொடர்ந்து பெருகிக்கொண்டே இருக்கவேண்டும்.

O

## விடுதலைப் ...

ராகவனின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி. சண்டை இறுக்கமான சூழலில் சிக்கியிருந்தது. போராளிகள் தடுக்கத் தடுக்க ராகவன் எப்போதும் போலவே தனக்கான எல்லையைக் கடந்து முன்னேறினான். குண்டு மழைக்குள் குளித்தபடி சண்டையணியின் முனவரிசையில் எங்கள் தளபதி நின்றான். குண்டொன்று நேராய் அவன் நெற்றியைத் துளைக்க ராகவன் வீழ்ந்தான். பறிபோகவிருந்த எத்தனையோ வெற்றிகளை மீட்டுத்தந்த அந்தத் தளபதி அமைதியாக அடங்கிப் போனான்.

1997 ஜனவரியில் ஆனையிறவு- பரந்தன் படைத்தளங்களில் புலிகள் இயக்கத்தின் படையணிகள் பாய்ந்தபோது முக்கிய முனையொன்றில் ராகவனின் படை நடத்தல் அவனின் அதிதபோராற்றலை வெளிக்காட்டியது. ஆனையிறவு படைத்தளத்தில் புளியடி பிரதான முகாம் ராகவனின் அணிக்குரிய இலக்காக இருந்தது. வேவு நடவடிக்கையின்படி திட்டமிடப்பட்டு, உரிய முறையில் பயிற்சிகளெல்லாம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் களநிலைமைகளோ தலைகீழாக இருந்தது. எதிர்பார்த்ததிற்கும் முற்றிலும் மாறான களநிலைமை அது.எதிரி உஷாரடைந்து இருந்தான். எமது நகர்வுகளை அவன் அவதானித்து விட்டதையே எதிரியின் செயற்பாடுகள் வெளிப்படுத்தின. எங்கே ஒட்டுமொத்தமாக சண்டையே குழம்பிவிடுமோ என்று அச்சம்கொண்ட வேளை களத்தில் நேரில் நின்று தனது இராணுவ அறிவால் துணிச்சலுடன் முடிவெடுத்து தனது இலக்கை வெற்றிகொண்டு 120 மி. மீ பீரங்கிகள் சிலவற்றையும் மீட்டுத்தந்து வெற்றிவாகை சூடிக்காட்டிய ராகவன், இன்று விழிமூடிவிட்டான்.

போரியலில் உயர்ந்து நின்ற எங்கள் போர்த்தளபதி லெப். கேணல் ராகவன் சிங்களத்தின் நம்பிக்கை நட்சத்திரமான ''ஜயசிக்குறுய்'' நடவடிக்கையை சுக்குநூறாக்குவதற்காய் கடுமையாக உழைத்தான். ஜயசிக்குறுயின் தென்முனையில் பனிக்கநீராவியிலிருந்து மாங்குளம் வரைக்கும், வடமுனையில் கிளிநொச்சியிலும் ஒவ்வொரு அங்குல நிலத்திலும் அந்தத்தளபதி தன் உயிர்கொண்டு வீரம் விதைத்தான். அவனின் உழைப்பின் அறுவடைதான் வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிட்ட புளியங்குளத்தில் புலிகள் இயக்கம் புரிந்த சாதனைகள். எதிரியின் பாரிய மரபுவழிப் படையெடுப்பை மறித்து புளியங்குளத்திலே முகாம் அமைத்து நிலைகொள்வது என தலைவர் அவர்கள் முடிவு செய்தபோது தளபதி தீபனுக்கு துணைவனாக நின்று தன அமைப்புக்காக ராகவன் கடுமையாக தன்னை வருத்தினான். புளியங்குளம் முகாமில் தாக்குதல் அணிகளின் பொறுப்பை ஏற்றிருந்த அவன் எதிரியை எதிர்கொள்வதற்கென சகல ஏற்பாடுகளையும் நேரில் நின்று செய்தான்; செய்வித்தான். புளியங்குளத்தை ''புலிகளின் புரட்சிக்குளம்'' ஆக மாற்றியதில் ராகவனின் உழைப்புக்கும், அவன் சிந்திய வியர்வைக்கும் முக்கிய பங்கு இருந்தது.

புலிகள் இயக்கத்தின் மிக நெருக்கடியான சூழ்நிலைகளில் வன்னிச் சமர்க்களத்தில் ஓயாது வீசிய புயல் ஓய்ந்த செய்தியை எழுத என் பேனா நடுங்குகிறது. உள்ளங்கை விரல்கள் வியர்த்து பேனா நழுவுகிறது. தமிழீழ போரரங்குகளில் நாற்பத்தைந்து சண்டைகளில் போரிட்ட அவனின் போரியல் பக்கங்களை- ''விளை பூமி-5'' பயிற்சிப் பாசறையின் நிர்வாகப் பொறுப்பாளனாய் இருந்து போராளிகளை அன்னையாய் அரவணைத்து மைல்கணக்கில் காட்டுப் பாதைகளினூடு தோள் கனக்க உணவு மூட்டைகள் சுமந்து அந்தப் போராளிகளுக்கெல்லாம் சாப்பாடு போட்ட அவனின் அரவணைப்பின் பக்கங்களை - தனது படையணிப் போராளிகளின் குடும்ப வறுமையின் கதை கேட்டு அவர்களின் வீடுகளிற்குச் சென்று மணிக்கணக்கில் அவர்களுடன் கதைத்து ஆறுதல் கூறிவிட்டு வந்து அவற்றையெல்லாம் எண்ணிக் கண்ணீர் வடிக்கும் அந்தத் தளபதியின் உள்ளத்து ஈரத்தின் பக்கங்களை -அம்மா என்றதும் அழுதுவிடும் அவன் ''ஊரைப் பிடிச்சவனை அடிச்சுக் கலைச்சு அம்மாவை சந்திக்க வேணும்'' என்று தன்னைத் தானே ஆறுதல் படுத்திக்கொள்ளும் ராகவனின் தாய்ப் பாசத்தின் பக்கங்களையென- அவை எழுதிப் புரிய வைக்கக்கூடியவை அல்ல. அவன் ஓய்ந்து போனான் என்பதை மனம் ஒப்புக்கொள்ள மறுக்கிறது.எங்கள் தளபதியின் நினைவுகளின் பக்கங்கள் நீண்டவை.அவன் பற்றி இதில் எழுதி முடிப்ப தென்பது சாத்தியம்போல் எனக்குத் தெரியவில்லை.

ராகவனின் நினைவுகளின் அதிர்வுகள் எம்மை அலைக்கழிக்கிறது கவலைகள் என்பது நினைவுகள்தானே. அப்படியென்றால் அவனை இழந்த கவலைகள் என்றைக்குமே அழிந்து விடக் கூடியவைகள் அல்ல.

ராகவன்! அவன் சண்டைக்காக புறப்பட்ட அந்த இறுதி இரவுபொழுதில் ''அண்ண ஒட்டுசுட்டானை பிடிச்சு அந்த வெற்றிச்செய்தியோடுதான் உங்களிட்ட வருவன்'' என்று தளபதி பால்ராஜ் அண்ணையை கட்டியணைத்து விடைபெற்றானாம். இதை அவர் கண்ணீருடன் நினைவுகூரும் போது இதையத்தை வலிக்கிறது. வன்னி மண்ணைக் காக்க அல்லும் பகலுமாய் தன்னை வருத்தி அரணமைத்த ராகவன் இந்த நிலங்களையெல்லாம் மீட்டு எங்கள் எதிரிகளை எல்லைவரை விரட்டி தேசத்தின் எல்லைக்கோடு வரையப் போகும் நாட்களில் மட்டும் இல்லாமல் போய்விட்டான் — எங்கள் எல்லோருள்ளும் எழும் இந்த ஆதங்கத்தை எம்மால் அடக்கிவிட முடியவில்லையே!

O



www.eelamview.com

# சாவரினும் தளரோம்
# யார்வரினும் பணியோம்
# வெந்துதணியாது வீரநிலம்



கார்த்திகைமாதம் வேர்த்தறியாக்காலம்:
மேகமுந்தானை விலக்கி
வானத்தாய் பூமிக்குப் பால்கொடுப்பாள்:
வேர்கள் விருட்சத்துக்கு விருந்தளிக்கும்.
நீரும் நிலமும் கலந்திளகி
பூமிப்பெண் புத்தாடை புனைவாள்.
ஆயிரம் கண்வேண்டும் அதைக்காண.
ஊரின் ஒழுங்கையெங்கும்
வாரடித்தோடும் வெள்ளம் வரைகின்ற
நீரரித்த கோடுகளில் பாதம்பதிக்க
உச்சிகுளிர்ந்து உருகும்.
மருதாணி போட்ட அழகான விரலாய்
மண்கிழித்தெழும் காளான்மடை
பூனைமேனிப் புசுபுசுப்பாய்
சின்னக்குடை விரித்துச் சிரிக்கும்.
கூரைவழியும் நீர்த்தாரை மீது
திண்ணை மீதிருந்து திளைப்பதில்
என்ன ஆனந்தம்.
மனசில் பூபரவிப் போகும் இந்தமாதம்:
வீரத்தைக் கொண்டே விரல்மடிப்பதெனில்
கார்த்திகை மாதமே எமக்குக் கண்திறந்தமாதம்:
ஈழத்தமிழருக்கு இருநூறு கைமுளைத்ததும்,
ஈழத்தமிழரையே கூரிய வேல்துளைத்ததும்
இந்த மாதத்திற்தான்.
தமிழரை மீண்டும் தமிரென்றாக்க
முதல்நாள் பிள்ளையொன்று விழிதிறந்தது:
தமிழரின் நெஞ்சில் இடிசொருகிவிட்டு
மறுநாள் பிள்ளையொன்று விழிமூடியது:
ஆண்டுகள் வேறாயினும் தேதிகள் அருகருகாயின.
இது தற்செயலான சம்பவமல்ல
ஒரு சரித்திரமான அதிசயம்.
கார்த்திகை 27 மாவீரர்நாள்:
சாவிலும் மானம்பெரிதென்று சாற்றியநாள்.
ஈழத்தமிழர் இழிந்திருக்க மாட்டோமென
ஆளும் கதிரைகளுக்கு அறிவித்தநாள்.
கூண்டிருக்க இனிவிரும்போமென
நீண்ட காலத்தின் பின் நிறுவிய நாள்:
சிறகெடுத்துப் பறந்த சிட்டுக்குருவிகளின்
திபத்திருநாள்.
ஊனக் கனவேதுமற்ற ஞானத்துறவிகளின்
உயிர்த்தநாள்.
தேசத்தைமட்டும் ஆராதிக்கத் தெரிந்தவரின்
வாசம் பரவும் அந்தவாசல்.
மெழுகாய் விழியுருக
மெய் விதிர்க்க
அழுவோராயும், தொழுவோராயும்
பூக்கொண்டு போவோம் அப்புனிதரிடம்.
நெஞ்சுருக, நெஞ்சுருக நெய்விளக்கேற்றிக்
கல்லறை முன்னின்று கரைவோம்:
ஒருதரமேனும் விழிமலருங்களென்று உருகுவோம்:
பூச்சொரிந்து அவர்பாதம் பூசிப்போம்.
வல்லமை தாருங்களென வரம் கேட்போம்.
வில்லாண்ட வீரத்தின் ஒருதுகளை
வெளியே எறியுங்களென வேண்டுவோம்:
நதியாய்க் குதித்தோடிய நாட்களும்,
பூவாய்ச் சிரித்திருந்த பொழுதுகளும்
நினைவிருக்கா? எனக் கெஞ்சுவோம்:
உள்ளே வேர்பிடித்திருக்குமா உங்களுக்கென
காதோடுரசிக் கேட்போம்.
கல்லறைக்குள்ளே கண்மலரும்.
மேனி அசையும்.
மெல்லச் சிரிக்குமொலி உள்ளே கேட்கும்:
கல்லறைக் கதவுகள் விரியப்
பிள்ளை முகம் காண்பாள் பெற்றவள்:
''அம்மா''என்றோர் அசரீரி
அவளுக்கு மட்டும் கேட்கும்.
''அப்பா'' என்றோர் குரல்
அவருக்கு மட்டும்தான் கேட்கும்:
தோழனே! என்ற அழைப்பு மட்டும்
துயிலுமில்லமெங்கும் கேட்கும்.
தோழியே! என்ற குரல் மட்டும்
திசையெங்கும் எதிரொலிக்கும்.
குரல் கேட்டதும்
அந்தக்குளிரிலும் வேர்த்துக்குளிப்போம்.
சில்லிட்டுப் போகுமெம் ஜீவன்.
புதைக்கவில்லை விதைத்தோமென்ற
பொருளுணர்ந்து பெருகுமெம் விழிகள்.
உள்ளே கொதிப்புறும் குருதி.
சுடரும் விளக்கொளியில் மேனிசூடேறும்:
ஓவென்றிரையும் ஊதற்காற்று.
வானம் இருள்விலத்தி வழிவிடத்
தூரத்தில் தெரியும் விடிவெள்ளி:
பிரிய மனமின்றிப் பிரிவோம்..
மாவீரரே!
நடுகல்லாகிவிட்ட நந்தா விளக்குகளே!
விடுதலைக்கு நீர்தந்த விலையதிகம்.
உரிமைக்கான போரில் உயிர்கொடுத்தலே
பெரியபேறு.
கவிதை எழுதுதல் கால்தூசு.
கண்ணீர் விடுதலும் கையளவே.
மண்ணுக்காக மரணிப்பதே மாதவம்.
ஒன்றுமட்டும் உறுதி.
இனியுமெம் தேசம் படுக்காது.
குனிந்தெவருக்கும் குற்றேவல் செய்யாது:
தேவநிலை வந்தெய்தினும்
தாயகக் காதல் மட்டும் தணியாது.
சாவரினும் தளரோம் இதுசத்தியம்
யார்வரினும் பணியோம் இது சத்தியம்
போரெடுத்தோம் வெல்வோம் இதுசத்தியம்
வெந்துதணியாது இந்த வீரநிலம்.
பகையுழுது போகலாம் உங்கள் படுக்கைகளை
தகையழிந்து போகுமோ சந்தனக்காடுகள்?
வேரறுந்து வீழுமோ விடுதலை?
ஊரெரிந்தும், உயிர்பிரிந்தும் போகலாம்
பிரியும் நொடியிலும் உம்மையே பேசுமெம்வாய்:

## உலைக்களம்

– வியாசன்

விரியும் மலரிலும் தெரியுமும் முகம்:
உமக்கருகில் எமக்கும் வேண்டும் ஓர்குழி;
உறவுகள் வந்து விளக்கேற்ற
உள்ளேயிருந்து நாமும் சிரிப்போம் ஓர்நாள்:
அதுவரை ஓயாதெம் அலைகள்.
எத்தனை புயல்களும் எழுந்து வீசட்டும்
சித்தம் கலங்கிச் சிதறோம்.
எத்தனை துயரெனினும் அழுத்தட்டும்
அத்தனை வலிப்புகளையும் ஆனந்தமாக்குவோம்:
விடுதலை எங்களின் பேச்சு.
விடுதலை எங்களின் மூச்சு:
விடுதலை நெஞ்சிற் பதியம்போட்ட நாற்று.

O O O

மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி:
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம் தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com